

மங்கையர் மலர்
MANGA ALA
ரூ.1-50

சிறிய பொருட்கள் மேலும்
மிகச் சிறியதாகி கவலை தரும்போது...

பிரிமியர்

மிக்சர்-மேட் (அரவை இணைப்பு சாதனம்)

மிகக் குறைந்த அளவே சட்டினி, மசாலா மற்றும் மாவு அரைக்கும்போது ஏற்படும் இழப்பை தவிர்க்கின்றது.

பிரிமியர் மிக்சர்-மேட் எவ்வகையான இந்திய மற்றும் வெளி நாட்டு மிக்ஸிகளுக்கேற்ப வடிவமைக்கப் பெற்று ஒவ்வொரு மாடல்களுக்கேற்பவும் கிடைக்கின்றது. இதன் தரத்தை அதன் அரவைத் திறனே உணர்த்தும்.

- உள்பூட்டு அமைப்புடைய இதன் மூடி உடையாத பாலி கார்பனேட் பிளாஸ்டிக்கால் செய்யப்பட்டது.
- அரவை ஜாடி ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் உட் சுவருடன் ABS பிளாஸ்டிக்கால் இணைத்து செய்யப்பட்டது.
- சிறு இடைவெளி விட்டு இணைக்கப்பட்டுள்ள இதன் ஸ்டெய்ன்லஸ் ஸ்டீல் பிளேடு தவறற்ற மிருதுவான திட மற்றும் திரவ அரவைக்கான உத்திரவாதமுடையது.



S.SIVANESAN & CO
244, Mint Street, Madras-600 003
Phone : 33926

மங்கையர் மலர்

அட்டை வண்ணப்படம்: **ஹரலிங்கம்**

சந்தா விவரம்
தனிப்பிரதி ரு. 1-50
ஆண்டுச் சந்தா ரு. 18/-
ஆறு மாத சந்தா ரு. 9/-

இந்த இதழுடன்

உங்களைப் பற்றி...


எது, எப்படி?

இலவச இணைப்பு கிடைத்ததா?

Edited, Printed and Published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Limited, at the Bharathan Press, Race Course Road, Guindy, Madras-600 032 (Phone: 431543)
Assistant Editor: Manjula Ramesh.



அடி, என்னடி உலகம்!



தந்தையுடன்

நட்சத்திர வாழ்க்கை:

ஒன்றரை வருடங்களுக்கு முன்னால் 'நட்சத்திர வாழ்க்கை' என்ற ஒரு பகுதி எழுத வேண்டும் என்றபோதும் சரி; ஒவ்வொரு நட்சத்திரத்தைச் சந்தித்தபோதும் சரி—ஒன்றையேதான் திருப்பித் திருப்பிச் சொல்லிக் கொண்டிருந்தேன். அது—

'எல்லோரும் சினிமா நட்சத்திரம் என்றால் ஏதோ, கார் பங்களா என்று சொகுசாக வாழ்கிறார்கள், கொடுத்து வைத்தவர்கள் என்று மற்றவர்கள் இவர்களைப் பார்த்துப் பெருமூச்சு விடுவார்கள். ஆனால் உண்மையில் எல்லாப் பெண்களையும் போல இவர்களும் கஷ்டப்படுகிறவர்கள்தான். இன்னும் சொல்லப் போனால் மற்ற துறையில் இருப்பவர்களை விட இவர்களுக்குத்தான் கஷ்டங்கள் அதிகம் என்று சொல்லவே இந்தப் பகுதி.'

ஒவ்வொரு நடத்திரத்தின் வாழ்க்கையிலும் அதைப் பார்த்துக் கொண்டுதான் வந்தோம். அதில் சில எரி நட்சத்திரமாகிப் போன கதைகளும் உண்டு. நல்ல குடும்பத்தில் பிறந்து, நல்ல விதமாக வளர்ந்து இந்தத் துறைக்கு வரும்போது இவர்களுக்குக் கிடைக்கும் கசப்பான அனுபவங்கள்...! அதை ஜீரணிக்கவும் முடியாமல், மனச் சாட்சியுடன் போராடவும் முடியாமல் மனக்குள் குமுறிக் குமுறித் தன்னையே பலிகொடுத்துக் கொள்கிறார்கள். இந்தச் சின்னஞ் சிறு பறவைகளின் உள்ளங்களுக்குள்தான் எத்தனை எத்தனைப் போராட்டங்கள்!

உலகத்தில் கிடைக்காத சுகம் இல்லை. ஆனால் அணியும் துணி கூட வேண்டாம் என்று வெறுத்து மாய்த்துக்கொண்டாள் மர்லின் மன்றோ. இந்த வகையில் தமிழகப் பெண்களுக்கும் பஞ்சமில்லை. ஷோபாவிலிருந்து ராதா வரை

மஞ்சுளா ரமேஷ்





எத்தனையோ உதாரணங்கள். இதோ நேற்றைய மண்ணில் மீண்டும் ஒரு தாரகை விழுந்து மறைந்திருக்கிறது.

—ஷோபாவும் ஜெயலட்சுமி—

இந்தப் பெண்ணுக்கு என்ன குறைச்சல்? இவர் மேல் உயிரையே வைத்திருக்கும் பெற்றோர்கள், அருமைத் தங்கை!

''அம்மா, மா மாணிக்கம் போயிட்டிம்மா....!''

என்று அந்தக் குடும்பமே கதறி அழும் போது அங்கு நிற்க முடியவில்லை. அவளுக்கென்ன தூங்கிவிட்டாள். அனுபவிப்பவர்கள் இவர்கள்தான்.

ஒன்றுமில்லை, தான்பெற்ற குழந்தையைக் கொஞ்ச நேரம் பிரிந்திருப்பது என்றால் எவ்வளவு கஷ்டப்படுகிறோம். வேலைக்குப் போகும் பெண்களுக்குத் தெரியும் அந்த அனுபவம். சாயந்திரம் வந்தவுடன் அள்ளி அணைக்கிறோம். கண்ணின் மணியாக வளர்த்த மகளைச் சீரும் சிறப்புமாகத் திருமணம் செய்து கொடுத்து, நல்லவிதமாக அனுப்பினாலும் அன்னை அழத்தான் செய்கிறாள். மாமியார் வீட்டில் நல்ல விதமாக இருந்தாலும் பிரிந்திருக்கும் துக்கம் பெற்ற வயிறுக்கல்லவா தெரியும்! அப்படி இருக்கும்போது—


முழுவதுமாக இருபத்தைந்து வயது வளர்த்து தீக்குப் பலி கொடுப்பதென்றால் அது எப்பேர்ப்பட்ட துக்கம். அதுவும் இயற்கையான மரணம்கூட அல்ல.

நாட்பட்ட வெட்டுக் காயத்துக்கும் குழிப்புண்ணுக்கும் எளிதான மருத்துவம் இருக்கிறது. இதற்காக நிறையப் பணம் செலவு செய்து கொண்டு ஆயின்ட்மென்டுகளை வாங்க வேண்டியதில்லை.

வேப்பிலையையும் மஞ்சளையும் விழுதாய் அரைத்துக் காயத்தின் மேல் பற்றுப் போடுங்கள். புண் ஆறுகிறதா இல்லையா என்று பாருங்கள்.

—ஆண்டாள்






உங்கள் அழகுக்கு அழகூட்டும் குங்கும்

புதிய சுமங்கலி டீலக்ஸ் குங்கும்

இன்று தன் இயற்கை எழிலை எந்த மங்கையும் மேலும் பொலிவுறச் செய்யலாம். உங்கள் ஒப்பனைக்கு மேலும் மெருகூட்டுவது சுமங்கலி குங்கும்.

கொஞ்சம்கூட வெளியே சிந்தாத சிறந்த பாக்கிங்கில் வரும் குங்கும் அது ஒன்றே. ஆகவே அது உங்கள் கைப்பையிலோ அல்லது டிரஸ்ஸிங் டேபிள் மேலோ வைத்துக்கொள்ள உகந்தது. சுமங்கலி உங்களுக்குப் பிடித்தமான பலவித வண்ணங்களில் கவர்ச்சியான ஜாடிகளிலும், பௌடர் உருவிலும் மற்றும் டீலக்ஸ் பர்ஸ் பாக்கிங்குகளிலும் கிடைக்கிறது.



டீலக்ஸ் குங்கும்

சுமங்கலி

ஒரு கேசவர்த்தினி தயாரிப்பு

OBM 4952 TM

இதெல்லாம் அந்த அன்னையும் பிதாவும் கதறியழுதபோது எனக்குத் தோன்றியது. அந்தத் தாயார் மீண்டும் மீண்டும் தன் நினைவின்றி ஒன்றையேதான் புலம்பிக்கொண்டிருந்தார்—

''பிரேமிஸ்தே சாவ்வலானிவுந்தாம்மா?'' (காதலிச்சா சாகணும்னு இருக்காம்மா?)

ஜெயலட்சுமியின் சொந்த ஊர் நெல்லூர். ஆனாலும் தந்தை தசரதராமரெட்டி முப்பது வருஷங்களுக்கும் மேலாக சென்னையில், திரைப்படங்களில் உதவி டைரக்டராகப் பணிபுரிந்து வருகிறார். பத்மினி பிக்சர்ஸிலும், புட்டண்ணாவிடமும் நிறையப் படங்கள். வாணிஸ்ரீ இவரை மிகவும் மதித்து அன்பு காட்டுவாராம். அதனால் இவருடைய மூத்த பெண் நீரோஜாவைத் தன் படத்தில் நடிக்க அழைத்தாராம். அப்படி வாணிஸ்ரீயுடன் முதலில் நடித்த தெலுங்குப் படம் 'பங்காரு பஞ்சரம்'.

இரண்டாவது இருளும் ஒளியும். இந்தப் படத்தின் ஷூட்டிங் வாஹினியில் நடந்து கொண்டிருந்தது-அதே ஸ்டுடியோவில் வேறு ஒரு செட்டில் பாலச்சந்தரின் ஷூட்டிங்கும் நடந்து கொண்டிருந்தது. அதற்காக வந்திருந்த பாலசந்தர் நீரோஜாவின் நடிப்பைப் பார்த்துவிட்டுத் தன் படத்திலும் நடிக்க அழைத்தார். அப்போதுதான் 'ஃபடாபட்' என்று அடிக்கடி சொல்லும் பாத்திரமாக 'அவள் ஒரு தொடர்கதை'யில் ஒப்பந்தமானார். நீரோஜாவும் 'ஜெயலட்சுமியாக, 'ஃபடாபட் ஜெயலட்சுமி'யானார்.

இவருடைய நடிப்புத் திறமையால் நல்ல பெயரும், நிறையப் படங்களும் வந்து







சேர்ந்தன. தியாகம், புவனா ஒரு கேள்விக் குறி, சொர்க்கம் நரகம் எனப் பல படங்களில் நடித்தாலும் 'ஆறிலிருந்து அறுபது வரை' அவரை ஒரு நட்சத்திர நடிகையாக்கியது.

அதுமட்டுமல்ல, அவருக்கு ஸ்டுடியோ வட்டாரங்களில் மிக நல்ல பெயரும் கூட. 'தொல்லையேஇல்லாதநடிகை' என்று.காமிரா மேனிலிருந்து கார் டிரைவர் வரை எல்லோரிடமும் மிக நல்ல முறையில் பழகுவாராம்.

வீட்டில் வேலைக்காரி கொஞ்சம் முகம் வாடியிருந்தால்கூட... 'அவளுக்குப் பசியோ என்னவோ, சாதம் போடம்மா' என்பாராம். அவருடைய அன்னை தந்தை மட்டுமல்ல, தெரிந்த நண்பர்கள் அனைவரும் ஒன்றைத் தான் சொல்கிறார்கள். 'அவள் மிக நல்ல பெண்' என்று.

குடும்பப் பாங்கான தோற்றமும், குடும்பத்துக்கு ஏற்ற குணங்களும், வீட்டுக்கு அடங்கிய பெண்ணுமாக நல்ல நிலையில்தான் இருந்தார்.

அவருடைய ஒல்லியான உடல்வாகும், சோகமான முகமும் குணசித்திர வேடங்களுக்கு மிகவும் பொருந்தி விட்டது. நிறைய சினிமா வாய்ப்புக்கள். ஆனால் பலருக்கும் வாழ்க்கையில் காலை இடறிவிடும் விதி இவருடைய வாழ்க்கையிலும் ஏற்பட்டு விட்டது. 'காதல்' என்ற ரூபத்தில். 'குங்குமம் கதை சொல்கிறது' படத்தில் சுகுமாருடன் நடித்தார். அந்தப் படம் முடிவு முன்பே இருவரும் திருமணம் செய்து கொள்வது என்று முடிவெடுத்தார்கள்.


அதற்குப் பிறகு அவர் எந்தப் படத்திலும் நடிக்க ஒப்புக்கொள்ளவில்லை. நிறையப் பேர், நெருங்கிய நண்பர்கள் வந்து வற்புறுத்தியும் ஒன்றும் பலிக்கவில்லை. இரண்டு வருடங்கள் இப்படியே ஓடிவிட்டன.

இறுதியில் தன் கனவுகள் நனவாகவில்லையே என்று கனவுலகத்துக்கே பயணமாகி விட்டார்! 'காதல் போயின் சாதல்' என்பது அவருடைய முடிந்த முடிவு போலும்!

பத்திரிகை வாயிலாக அறிந்து கொண்டது சுகுமார் இவரை மணக்க மறுத்து விட்டாராம். இதனால் 36 தூக்க மாத்திரைகளைப் போட்டுக் கொண்டு விட்டாராம். டாக்டர்களின் தீவிரக் கண்காணிப்பு இருந்தும் உணர்வு திரும்பாமலே போய் விட்டாராம்.

மீண்டும் ஒரு காதல் கதை அரங்கேறி விட்டது. உலகில் இந்த அமரத்துவம் பெற்ற காதல்கள் தொடர்ந்து கொண்டேதான் இருக்கும்போலிருக்கிறது. முந்தையவர்களைப் பார்த்துத் திருந்தியவர்களும் இல்லை, பின் வரும் விளைவுகளை நினைத்துப் பார்ப்பதும் இல்லை. இந்த நோய் பிடித்து விட்டால் எல்லா சிந்தனை சக்தியும் போய், அதுவே மயமாகிவிடுகிறார்கள். 'இந்தக் கதைகள் தொடர் கதையாகவே நடந்து கொண்டிருக்கின்றன. இந்தத்துறை பெண்மை மட்டுமே சாகிறது. இப்படி எத்தனை கன்னியரை இன்னும் காவு கேட்குமோ?

புகைப்படங்கள்: சுபா, சலன்



ஒவ்வொரு துளியிலும் தேர்ந்தெடுத்த தேங்காய்களின் நறுமணம்!
Yendelux coconut oil
என்டிலக்ஸ்
தேங்காய் எண்ணெய்
மு. மு. நாகலிங்க நாடார் சன்ஸ்
கொல்லம்—கேரளா
போன் : ஆபீஸ் : 2244, 4484, மில்ஸ் ; 2266, 4611
DISTRIBUTORS FOR TAMIL NADU
M. M. NAGALINGA NADAR
VIRUDHUNAGAR.Phone : 3107, 3745.

டி.வி. பந்திதே!

நித்யாமூர்த்தி

"எந்தச் சாமானை எடுத்து வந்தாலும் வராவிட்டாலும் டி. வி. வந்தாகனும். அதிலயும் நம்ம மெட்ராஸ் நிகழ்ச்சிகளைத்தான் டி.வி.யில காட்டப்போறாங்களாமே, ஆமாம்" உத்திரவு போட்டிருந்தேன் நான்.

ராஜோத்ஸ்வா தினத்தன்று பங்களூரில் டி. வி. நிகழ்ச்சியாகக் கன்னடப் படம் காட்டப் போகிறார்கள் என்றதும் மக்களின் உற்சாகம் கரை புரண்டது.

மாலை, நிகழ்ச்சி ஆரம்பக் காட்சிகள் காட்டப்பெற்றதும், தெருவெங்கும் பட்டாசு வெடிச் சத்தம் "டி.வி. பந்திதே!" என்ற உற்சாகமான கோஷங்கள்.

பின் வீட்டில் இருப்பவர் அடிக்கடி சந்தேகம் கேட்பார். (அவரிடம் சும்மா இராமல், எங்கள் வீட்டுக்கு டி. வி. வரப் போகிறதைப் பீற்றிக் கொண்டதன் விளைவு)

"உங்க வீட்டு 'ஆன்டெனா' இப்படி இருந்துதா? ரொம்ப நிழல் தெரியுதே?"

பலப்பல சந்தேகங்கள். சென்னையை விட்டுப் புறப்பட மறுத்து அடம் பிடித்துக் கொண்டிருக்கும் எங்கள் டி. வி. மேல் ஏகப்பட்ட கோபத்தில் வெம்பிக் கொண்டிருந்த எனக்கு அவரைக் சுபவீகரம் செய்ய முடியாத வெறுப்பு.

"பூஸ்டர் போட்டா, சவூதி அரேபியா கூடத் தெரியுமாமே. சானல் அஞ்சுலதானே இந்த ஊர்ல அஞ்சல் செய்யறாங்க. சானல் நாலுல திருப்பினா மெட்ராஸ் தெரியுது."

"மேல் லோகமே தெரியும்" — வெளியே சொல்ல முடியாமல் கோபம் குமுறியது.

எங்கள் டி. வி.யை எப்படியோ இனிமேலும் பிடுங்கிய பிடுங்கல் சகியாமல் பங்களூர் வந்து சேர்ந்தது. ஆன்டெனாவைப் பொருத்தி விட்டு அன்றைய நிகழ்ச்சிகளைப் பார்க்கப் பத்திரிகையை எடுத்தால்....?

திங்கள் முதல் வெள்ளி வரை சென்னை நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகும். அதுவும் இரவு எட்டரை முதல்... சனி, ஞாயிறு பம்பாயிலிருந்து. அதிலும் சனிக் கிழமை இரவு எட்டரை முதல்....

கையிலிருந்த பத்திரிகை கைநழுவியது. "அநியாயம். பாதி நிகழ்ச்சிக்கு மேல் எதற்காகப் பார்க்கனுமாம்? இது என்ன விநோதமான ஏற்பாடு?" கூச்சலிட்டேன் நான்.

"உனக்கு வேண்டாம் என்றால் பார்க்காதே!" அமைதியாகச் சொன்னார் என் கணவர். ஒளியும் ஒலியும், எதிரொலி, நாடகம் என்று ஒன்று விடாமல் சின்னக் குழந்தை போல் டி. வி. எதிரே இவள் உட்கார மாட்டாள் அல்லவா என்ற திருப்தி அவருக்கு.

பம்பாய் தொலைக் காட்சியில் சனியன்று மாலையே நிகழ்ச்சி ஆரம்பமாகிவிடும். மராட்டி அல்லது குஜராத்தி சினிமா அநேகமாக எட்டரைக்குள் முடிந்து வேறு நிகழ்ச்சி ஆரம்பமாகும். ஞாயிறு மாலை ஆறு மணிக்குள் என் தாத்தா காலத்து இந்திப் படங்கள் ஏதேனும் ஒளிபரப்பாகும். இதில் மாபெரும் தண்டனை என்னவென்றால் சனிக் கிழமை, சென்னையில் கண்டு களித்த (!?) அதே இந்திப் பழம்பெரும் படத்தை, பம்பாயில் பார்த்தே திரும்படியாக இருக்கும். பங்களூரில், பம்பாய் ஒளிபரப்பு அஞ்சல் என்றால், தண்டனையும் அதுதானே?

'பதறாதே! பங்களூரில் தடுக்கி விழுந்தால் தியேட்டர்கள் மேல்தான் விழ வேண்டும். மற்ற நிகழ்ச்சிகளாவது சென்னையிலிருந்து வருகிறதே" என்று மனது சமாதானம் பேசியது.

"இன்னைக்கு ஒலியும் ஒளியும் இருக்கு" அவசரமாகச் சாப்பாட்டுக் கடையைமுடித்து விட்டு, ஆவலாக டி.வி. யருகில் அமர்வேன்.

மாலை, நான்கு மணிக்கே கண்களைச் சிமிட்டும் தெரு மின் விளக்குகள் உட்பட, திடும்மென்று மின்சாரம் உயிர் விடும்.

"ஐயையோ! இன்னைக்கு ஒலியும் ஒலியும் போயிட்டுதே" அரற்றுவேன்.

"கரண்டே போயிட்டதே. இவ ஒருத்தி" பளிறென்று டி.வி.யை இருளில் தாவிச் சென்று மூடி விடுவார் கணவர்.

சொல்லி வைத்தாற்போல் பதினொரு மணிக்கு டளிச்சென விளக்குகள் மீண்டும் எரியத் துவங்கும்போது, என் வயிறு பற்றி எரியும். எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்க்காத குறையாக, என் சகோதரிகளின் கடிதம் வேறு! 'இங்கே சென்னையில் சிலோன் டி. வி. தெரிகிறதாம். பூஸ்டர் போட்டுப் பார்க்கப் போகிறோம். உங்கள் டி.வி.?' என்ற கேள்வி.

"உள்ளதே தெரியவில்லை. இனி உலகமா தெரியப் போகிறது" ஆத்திரமும் அழுகையுமாக வரும் எனக்கு.

எட்டரைக்கு மேல் 'மேகளின் புரோக் ராம்ஸ்'' எனப்படும் வண்ணக் களஞ்சியம் (தமிழ்), சௌரபா (கன்னடம்) தரங்கிணி (தெலுங்கு), கலா கைரலி (மலையாளம்) என்ற நிகழ்ச்சிகளை — புரிந்ததோ புரிய வில்லையோ, பார்த்து வைப்பேன்.

பல சமயங்களில் நிகழ்ச்சிகள் மகிழ்ச்சி தாங்காமல் குதிக்கும்! சென்னையிலிருந்து பங்களூர் வருகிறதல்லவா. தொண்டை கட்டிக் கொள்ளும். குளிர் தாங்குவதில்லை போலும். திடீர் திடீரென்று மௌனப் படங்கள் போல், வாயை மட்டும் மூடி மூடித் திறக்கும். சப்தம் இருக்காது. வேறு சில சமயங்களில் ஒலி மட்டும் கேட்கும். படம் இராது.

'நம்ம டி.வி.யில்தான் கோளாறு. ரிப் பேர் செய்யணும். அதை வாங்கி ரொம்ப நாளாயிட்டுதே'' என்றேன்.

பின் வீட்டுக்காரர் அலறிப் புடைத்துக் கொண்டு, ''ஸார்! உங்க வீட்டுல டி.வி.யில படம் வருதா?'' ஓடி வந்தார்.

''திருப்தியாயிட்டுதா?'' என்ற பாவனை யில் என் கணவர் என்னைப் பார்க்க, நான் மோட்டு வளையைப் பார்த்தேன். ஏனெனில் இது பாரதி நூற்றாண்டு. பெண்கள் தலை குனியக் கூடாதல்லவா?


பாலக்காட்டிலிருந்து வந்த சித்திக்கு மலை யாள நிகழ்ச்சிகளில் தனி ஈடுபாடு ஏற் பட்டதில் வியப்பில்லைதான். ''இன்னிக்கு ஒளியும் ஒலியும் மலையாளப் பாட்டாக்கும்'' என்று கவனமாக இடம் பிடித்துக்கொண் டிருப்பார்.

இரவு பன்னிரண்டு மணி முதல் தண் ணீர் பிடிக்கும் வேலை இருப்பதால், ஒன்பது மணிக்கே தூக்கம் அவர் கண்களில் தவழ ஆரம் பித்துவிடும். மலையாளப் பாட்டு என்பதால் தூக்கத்தையும் தியாகம் செய்துவிட்டு, உட்கார்ந்திருப்பார்.

''என்டே காமினி...நின்றன் கண்டில்..'' என்று மலையாள நாயகன், நீர் நிலையைச் சுற்றிப் பாட, நாயகி, நெளிந்து வளைந்து கொண்டிருக்கும் தருணம், ''கட்'....சென் ஸார் அல்ல... மின்ஸார்! அதாவது மின் சாரத் தடங்கல். ''தடங்கலுக்கு வருந்து கிறோம்'' என்று பங்களூரில் போட முடி யாதே. சென்னையில் தடங்கல் ஏற்பட்டால் தானே ''வருந்த முடியும்?''

''பட்டு விழுவான்... சுகமாயிட்டு மலை யாளப் பாட்டுக் கேட்கலாம்னு வந்து உட் கார்ந்தா... என் தூக்கமும் போச்சு...'' சித்தி ஏமாற்றத்துடன் பொருமுவார்.

பாதி நாடகத்தில் திடீர் திடீரென வார்த்தைகள் தெளிவாகாது. அறுவை சினி மாவானாலும் போட் த்தான்வைப்போமே என்று நினைத்தால் மாலை ஏழுமணிக்குத்



நான் மின்சாரம் வரும். என்ன விஷயம் என்று கேட்டால் ''லோட் ஷெட்டிங்'' ''பவர் ஷெட்டிங்'' என்று பதில் வரும்.

பல சமயங்களில் ஒரு நிகழ்ச்சி நடக்கும் போது அது மின்னிக் கண் சிமிட்டி மறைந்து வேறு எங்கிருந்தோ ஒரு நிகழ்ச்சி ஒளி வீசும். ஒரு முறை மஞ்சளின் மகிமையைப்பற்றி பம்பாய்த் தொலைக்காட்சி உரையாடலில், திலீப் குமாரும், சைரா பானுவும் தோன்றினர்! ஒரு நடனக் காட்சி! ''சைரா பானு மஞ்சளையே உபயோகியுங்கன்னு சொல்றார். அதனால்தான் அவர்முகம் பளபளன்னு இருக்காம்'' என் கணவர்விளக்கம்.

''அப்ப திலீப் குமார் என்ன சொல்றார்''


நான் கேட்டேன். அவர் முறைத்தார்.

'பட்' — ஒளிக் காட்சி மறைந்து வெள்ளை நிறத் திரை. மஞ்சள் மகிமையைப் பற்றிய உரையாடலில் ''இதோ பாருங்க. இந்தக் கிழங்கு....'' விளக்க ஒலி மட்டும் கேட்டது.

''எந்தக் கிழங்கு ''

''நீ தினமும் பூசிக்கிட்டு காமன் பண்டிகை வேஷக் காரனுட்டம் நிப்பியே அது'' கணவர் உறுமினர்.

வெறுப்புடன் டி.வி.யை மூடிவிட்டுப் போய்விட்டேன். மற்றும் ஒரு நாள். துப்பறியும் நாடகம்நடந்தது.



திடும்மென ஒலி இல்லை. கதா பாத்திரங்கள் ஊமை மொழியில் நடித்தனர்.

''ஐயையோ! டயலாக் என்னன்னு தெரியலையே'' தவித்தேன் நான்.

''ஸஸ்பென்ஸ். புரிஞ்சா சஸ்பென்ஸ் போயிடும்'' கிண்டலாகக் கூறினார் என் கணவர்.

தமிழ் ஒலியும் ஒளியும் காட்சி. சிவாஜி கணேசன் ''யார் தருவார் இந்த அரியாசனம்'' என்று வெகு பொருத்தமாகப்பாடிக் கொண்டிருந்த சமயம்... நடுவில் என்னவோ ஆகிவிட்டது.

''வார்த்தைகள்... வார்த்தைகள்...'' அலறினேன் நான்.

''கேட்கப்படாத புகழுரைகள் அதான் கேட்கவில்லை.''

முதல்வர் பாட்டில் சரோஜாதேவி ஆடினார். திடும்மென்று மின்சாரம் போயிற்று.

''சே! ரொம்பவே அறுக்கிறாங்கள்!''

''இன்னைக்கு வெள்ளிக் கிழமை. வாழும் பெண்கள் இப்படியெல்லாம் பேசலாமோ'' கிண்டினார் கணவர்.

எங்களுக்குத் தெரிந்த ஒருத்தர் வெகு ஆசையாய், 'ஜாஸ்' ஆங்கிலப் படம் பார்க்க வந்தார் ஒரு நாள். அன்று சரியாக எட்டு மணிக்குப் போன மின்சாரம் பாதி இரவுக்கு மேல்தான் வந்தது.

''பாவி போன இடம் பாதாளம்கிற மாதிரி, நான் வந்த வேளை, உங்களுக்கும் பார்க்க முடியாமப் போயிட்டது. நான் வரேன்'' டார்ச் விளக்கின் உதவியுடன் அவர் புறப்பட்டுப் போனார்.

மறுநாள் பத்திரிகையில் ஷாராவதி என்ற இடத்தில் நெருப்பு விபத்து. பங்களூர் முழுவதும் மின்சாரத் தடங்கல் என்ற விவரம் வெளியாகியது. ''குத்தாலத்துல இடி இடிச்சாக் கோயமுத்தூர்ல மழை பொழியும்'' —கொத்தமங்கலம் சுப்புவின் பாடல்தான் நினைவுக்கு வந்தது.

''தயவு செய்து ஒழுங்கான டி. வி. நிகழ்ச்சிகளைக் கொடுங்கள். இப்படிப் பாதி பாதியாக இங்கு கொஞ்சம் அங்கு கொஞ்சம் என்று பிராயாதீர்கள்.''

''பம்பாய் என்றால் பம்பாய் அல்லது சென்னை என்று முழுவதுமாக ஒளிபரப்புங்கள்''

''செய்தி வாசிப்பவர் முகத்தில் உட்கார்ந்த ஈயை ஓட்டினாரா இல்லையா என்று பார்க்க நாங்கள் தயாராக இல்லை.''

''எத்தனை நாட்கள் இப்படி பிற ஊர்களில் இருந்து அஞ்சல் செய்யப் போகிறீர்கள்''

பத்திரிகைகளில் பற்பல கடிதக் கணைகள். ஆனால் சம்பந்தப்பட்ட மந்திரியும் அவரது குழுவினரும் இனிப் பிள்ளைகளாகச் சொல்லும் பதில் ஒன்றுதான்..''வெகு விரைவில் கன்னட நிகழ்ச்சிகள் தயாராகும் ஸ்டுடியோ உருவாகிவிடும்.''

கெய்தான்:.பேன் இலவசம்

அடுத்த இதழ் மங்கையர் மலர் வாசகி ஒருவருக்கு அதிருஷ்டம் காத்திருக்கிறது. Khaitan Fresh Air Fan - இலவசமாகக் கிடைக்கிறது. அந்த அதிர்ஷ்ட சாலி நீங்களாகவும் இருக்கலாம்!

அடுத்த இதழில்

பரிசுத் திட்டம்




கவிதை பாடும் கண்களுக்கு...
ஐடெக்ஸ்
விழிகள் மொழிபேச ஐடெக்ஸ்
பெண்மை பளிச்சிட, இளமை எழில்
கொஞ்சிட, வனிதையர் வதனம்
கவர்ச்சி மிளிர்ந்து கண்கள்
களிநடம்புரிய ஐடெக்ஸ் கண்மை
சாஸ்திரீய முறையில் தயாராகும்
ஐடெக்ஸ் மை கண்களுக்கு
குளுமையூட்டி பாதுகாக்கிறது
எவ்வித தீங்கும் விளைவிக்காது
ஐடெக்ஸ் 39 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்
EYETEX
அரவிந்த் லேபரட்டரீஸ் சென்னை 600 033
Imageads·AL·1293 Tam

பரிசு பெற்ற கட்டுரைகள்:

என் முதல் சம்பளத்தை எப்படிச் செலவழித்தேன்?

முதல் பரிசு

எல்லோரையும் போல நானும் பிறந்தேன் வளர்ந்தேன். எஸ். எஸ். எல். சி. வரை கவலையே தெரியாமல் வளர்ந்துவிட்டேன். பின்னர் பிளஸ் டூ படிக்கும்போதுதான் குடும்ப நிலைமையையே உணர ஆரம்பித்தேன். அத்துடன் படிப்புக்கு ஒரு முற்றுப் புள்ளி வைத்துவிட்டு வேலைக்குச் செல்ல ஆரம்பித்தேன். முதலில் சிறிது மனத்துக்குக் கஷ்டமாகத்தான் இருந்தது. எல்லோரையும்போல் காலேஜில் படிக்க வேண்டும் என்று. பிறகு எனக்கு நானே சமாதானம் செய்து கொண்டேன். சாப்பாட்டுக்கே வழியில்லாத நிலையில் காலேஜாவது ஒன்றாவது! வேலைக்குச் சென்ற அந்த ஒரு மாதமும் எவ்வளவோ கனவுகள், கற்பனைகள்! முதலில் அம்மாவுக்கு ஒரு புடவை வாங்க வேண்டும். என நினைத்தேன். பின்பு தங்கைக்கும் தாவணி போட வேண்டிய பருவம் வந்தாகி விட்டது. அவளுக்கு ஒரு பாவாடை தாவணி செட் வாங்க வேண்டும் என்று நினைத்தேன்.

ஒரு நான்கு மாதங்கள் பணத்தை அப்படியே சேர்த்து வைத்து, சோபா, சேர்கள், பீரோ இப்படி ஏதாவது தவணை முறையில் வாங்க வேண்டும் என்று இன்பக் கனவுகள் கண்டு கொண்டே ஒவ்வொரு நாளையும் கழித்தேன். முந்திய நாள்வரை ஒரே எதிர்பார்ப்பு! பின்பு அந்த நாளும் வந்தது. அன்று முதல் தேதி.

காலையிலிருந்து சாப்பாட்டுக்கு வீட்டில் ஒரு மணி அரிசி இல்லை. எப்படியோ பல்லைக் கடித்துக் கொண்டு பசியைப் பொறுத்துக் கொண்டேன். சம்பளம் வாங்கிக் கொண்டு ஏழு மணி சுமாருக்கு வீட்டுக்கு ஓடி வந்தேன். என் தங்கை ஒரு மூலையில் பசியால் வாடிச் சுருண்டு படுத்துக் கொண்டு இருந்தாள். மனதை என்னவோ செய்தது. என் கண்களில் நீர் நிறைந்து விட்டது. ஓடிச் சென்று அரிசி பருப்பு வாங்கிக் கொண்டு வந்து என் அம்மா அந்தப் பசியிலும் சமைத்து அனைவருக்கும் போட்டார்கள். பின்னர் என் அப்பாவும் சாப்பிட்டார். பின்னர் நானும் என் அம்மாவும் சாப்பிட்டோம். அன்று இரவு முழுவதும் உறக்கமே வரவில்லை எனக்கு!

எங்களுக்கு என்று நல்ல காலம் பிறக்குமோ? இவ்வாறே வந்த நாட்கள் அனைத்திலும் என் சம்பளம் முழுவதும் சாப்பாட்டுக்கே செலவழிந்தது. இன்று வரை அப்படித்தான். எனக்கென்று ஒரு பைசா செலவு செய்ய இயலவில்லை. நானும் அப்படி நினைக்கவில்லை!

அவ்வப்போது தெருவில் பெண்கள் நல்ல புடவைகள் கட்டிக் கொண்டு காலேஜில் படித்துவிட்டு உற்சாகமாகப் பேசிச் சிரித்தவாறே செல்லும்போது என் மனத்தின் மூலையில் ஏமாற்றக் குமிழி ஒன்று தோன்றும். உடனே அதை அடக்கிக் கொண்டு தலையைக் குனிந்தவாறே நடந்து செல்வேன்.

எல்லோரும் முதல் மாதச் சம்பளத்தை எப்படி எப்படியோ செலவழித்திருப்பீர்கள். ஆனால் என் சம்பளம் எங்கள் பசியை அடக்கத்தான் பயன்பட்டது. எப்படியோ நானும் வேலைக்குச் செல்கிறேன். இப்படி என்னைப் போன்ற இளம் பெண்கள் எத்தனை எத்தனை பேர் இந்த நாட்டில் இருக்கிறார்களோ!

பானு, ஈரோடு

இரண்டாம் பரிசு

வரவுக்கும் செலவுக்கும் இழுபறி நடத்தி வாழ்க்கையை நடத்திக் கொண்டிருக்கும் கோடிக் கணக்கான மத்தியதரக் குடும்பங்களில் எங்கள் குடும்பமும் ஒன்று.

சுமார் 20 வருடங்களுக்கு முன்னால் என் நிலையைத் திரும்பிப் பார்க்கிறேன். இரண்டு பெரிய மளிகைக் கடைகளில் கணக்கெழுதி சம்பாதிக்கும் என் தந்தை. வீட்டில் இருப்பதும் இல்லாததும் வெளியேதெரியக் கூடாது என்ற வைராக்கியத்தோடு கொண்ட கணவனுக்கு உற்ற துணையாக, வாழ்க்கைப் பாதையைச் செப்பனிட்டு (செம்மண் இட்டு) கோலமிடும் என் தாய். இரண்டு வயது வித்தியாசத்தில் படிப்படியாக நான்கு பெண்களும் இரண்டு ஆண்களுமாக நாங்கள் ஆறு பேர் குழந்தைச் செல்வங்கள். நகரமும் இல்லை கிராமமும் இல்லை என்று இரண்டுங் கெட்டானக அமைந்துவிட்ட திருக்காட்டுப்பள்ளிதான் எங்கள் பூர்வீக வாசஸ்தலம். (இப்பொழுது எவ்வளவோ முன்னேறியுள்ளது)

நான் குடும்பத்தில் மூத்தவள். எஸ்.எஸ். எல். சி. தேறியவள். கூடவே டைப்பும், ஷார்ட் ஹாண்டும் முதல் வகுப்பில் தேறியவள் என்ற பெருமைகளோடு வேலையைத் தேடினேன்.

அன்றுடம் துவைத்து உலர்த்திய பாவாடை, சட்டை, தாவணி, மஞ்சள் பூச்சைத் தவிர, பவுடர் என்ற ஒன்றைப்

பார்த்து அறியாத முகம், கடனுக்குக் கடைக்காரன் வழங்கும் தேங்காய் எண்ணெயிலே வாரிவிடப்பட்டும், வறுமைக்குச் சவால் விட்டு வளர்ந்து நீண்ட என் கூந்தல், இவைதான் அன்று என் சொத்து.

வாசகர்களின் விருப்பத்திற்கு இணங்க, இம்மாதமும் 'ராகமாலிகா' புடவை முதல் பரிசாக அளிக்கப்படுகிறது. இரண்டாம் பரிசு: கைப்பை.

பெண்ணுக்கு வேலை கிடைத்துவிட்டால் பற்று வழியில் பலசரக்குக் கடைக்காரரிடம் ஒட்டிக்கு ரெட்டி விலையில் வாங்கும் மளிகைச் சாமான்களை நிறுத்திவிட்டு, மாதா மாதம் முதல் தேதியில் தஞ்சாவூர் பஜாரில் மாதாந்திரத்துக்குச் சாமான்கள் மொத்தமாக வாங்கி வீட்டில் கவிழ்த்து வைக்கப்பட்டுள்ள காலிப் பானைகளை நிமிர்த்தி, நிறைத்து வைக்க ஆசைப்படும் என் தாய். பாடாக உழைத்து இரு கடைகளில் கணக்கெழுதி கண்களுக்கு ஒரு சோடா பாட்டில் கண்ணாடியைப் பரிசாகப் பெற்றிருக்கும் என் தந்தைக்கோ என் வேலையைப் பற்றியும், அதன் மூலம் நான் கொண்டு வரப் போகும் சம்பளத்தைப் பற்றியும் கணக்கில் அடங்கா ஆசைகள்.

அன்றைக்கு இருந்த என் மனநிலையில் என் வயதில், என் பார்வையில் இவர்கள் எல்லோருமே சுயநலமிகள். ''எனக்கென ஓர் ஆசை உண்டு. அதில் ஒரு தனி உலகமே சுழலும் என்று இவர்கள் ஏன் எண்ணிப் பார்ப்பதில்லை? என என் மனம் ஏங்கும். வேலை மட்டும் கிடைத்து விட்டால் கிரேப் ஸில்க் சாரி கட்டிக் கொண்டு வலை போட்ட கொண்டை, காலில் சடக் சடக் என ஒலிக்கும் ஹவாய் சப்பல், கையில் பிடித்த குடையோடு பஸ் ஏறி தஞ்சாவூர் செல்ல முடியும். (அந்தக் காலத்தில் கிரேப் ஸில்க் சாரியும் ஹவாய் சப்பலும் அவ்வளவு ஃபேமஸ்) மத்தியானம் டிபன் மணிக்கூண்டு ராயர் காபி கிளப்பில் வாங்கிச் சாப்பிட வேண்டும். தலைக்கு நல்ல ஹேர் ஆயில் முகத்துக்கு குட்டிகூரா பவுடர், குறைந்தது அரை டஜன் சோளிகள் (ரவிக்கை) தலைக்கு நாகரிகமான கொண்டை வலை, முடிந்தால் தினமும் தஞ்சாவூர்க் கதம்பம், ஞாயிற்றுக் கிழமைகளில் நெருங்கிய தோழியுடன் நல்லதொரு சினிமா....

என் நம்பிக்கை பொய்க்கவில்லை. பகவான் அனுக்கிரகத்தில் சர்வே அலுவலகத்தில் வரைவாளராகப் பொறுப்பேற்றேன். (டிராப்ட்ஸ்மேன்)

ஆயிற்று. நாங்கள் அனைவரும் கனவுகண்டு கொண்டிருந்த அந்தத் திருநாளும் வந்தது. பிற்பகல் மூன்று மணிக்கெல்லாம் சம்பள பட்டுவாடா துவங்கியது. என் சம்பளத்தை ஒரு கவரில் போட்டு என் கையில் கொடுத்தார் அக்கௌண்டண்ட். அலுவலக வாசலில்.... என் அப்பா நின்று கொண்டு இருந்தார். சலவையே காணாத. அன்றாடம் தோய்த்துத் தோய்த்துப் பழுப்பேறிய வேஷ்டி, சட்டைக் கிழிசலை மறைக்க (அவர் கல்யாணத்தின்போது தைத்துக் கொண்ட) கோட்டு, கழுத்திலே ஒரு விசிறி மடிப்பு அங்கவஸ்திரம். இத்தியாதி அலங்காரங்களுடன் அவரைப் பார்த்த எனக்கு வயிற்றை மண்டியது.

''குழந்தே! உன்னைப் பந்தோபஸ்தா அழைச்சிண்டு வரும்படி அம்மாதான் சொன்னா; இன்னிக்கு சம்பள நாள்; இருந்து கூடவே கூட்டிக் கொண்டு போகலாம்னு தான் வந்தேன்'' என்றார். அவரை இழுத்துச் செல்லாத குறையாக விடுவிடுவென்று நடந்து பஸ்ஸைப் பிடித்து ஊர்வந்து சேர்ந்தேன். வீட்டு வாசலில் என்னையும், என் கையையும் எதிர்பார்த்து நிற்கும் சிறிசுகள். நிலைப்படியோரம் நின்று விரிந்த கண்களுடன் என்னையே பார்த்துக் கொண்டிருக்கும் என் தாய். யாரையும் பொருட்படுத்தாமல் நேரே உள்ளே சென்றேன்.

''குழந்தே! கோவமா... ஒன்றுமே என் கிட்டே பேச மாட்டேங்கிறியே'' என்று மனம் நெகிழ்ந்தார் அப்பா. நான் கலங்கும் கண்களுடன் அப்பாவைப் பார்த்தேன். என்ன பதில் சொல்வது?

பலபேர் மத்தியில் பாவப்பட்ட பிராமணனாக ஏன் வந்து நின்றீர்கள்? எங்கள் அலுவலகத்தில் என்னைப் பற்றி எப்படியெல்லாம் குறைந்து மதிப்பிட்டுவிடுவார்கள்? என்றெல்லாம் வெடிக்க வேண்டும் என்று நினைத்தேன். பௌர்ணமி தினமன்று மட்டுமே மழிக்கப்படும் அவர் தாடி மண்டிய முகம், அம்முகச் சோடா பாட்டில் கண்ணாடியும், அதனுள்ளே ஜீவப் பிரவாகமெடுக்கும் அவரது கருணை மிகுந்த கண்களும் என் வாயைக் கட்டிப் போட்டன. பேசாமல், அவர் காலில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்தேன்.

அவர் அன்போடு தோளில் தட்டி எழுப்பி, ''குழந்தே....நம்ம கஷ்டங்கள் எவ்வளவோ! ஆனாலும் நீ வேலைக்குப் போகிறவள். உன் கூட இருந்த ஒன்று இரண்டு பெண்களைப் பார்த்தேன். என் பெண்ணும் அப்படி இருக்க வேண்டும் என்று ஆசை. என் சம்பாத்தியத்தில் வாங்கிக் கொடுக்க வழியில்லை. நாளைக்கு ரெட்டியார் ஜவுளிக் கடைக்கு நானே உன்னை அழைத்துக் கொண்டு போய் நல்லதா ரெண்டு புடவையும் ரெண்டு சோளியும் எடுத்துத் தரேன்'' என்றார்.

என் கண்களில் தாரை தாரையாகக் கண்ணீர் வடிந்தது. அந்த நீர்ப்படலத்தின் ஊடே எங்கள் வீட்டின் ஏழ்மையான அடுப்பங்கரை, என் தங்கைகளின் கிழிசல் பாவாடை, சட்டை, மர ஷெல்பில் உள்ள மளிகைச்

சாமான்களுக்கான காலி டப்பாக்கள் — எல்லாவற்றிற்கும் மளமளவென்று தீர்வு கண்டேன்.

இருபது வருடங்களுக்குப் பிறகு இன்றும் அன்றைய நிகழ்ச்சிகளை ஒவ்வொரு முதல் தேதியும் நினைத்துப் பார்ப்பதுண்டு. இன்று நான் மூன்று குழந்தைகளுக்குத் தாய். 4 ஸ்தானங்களை எட்டி நிற்கும்சம்பளம். என் குழந்தைகளின் ஆசைகளை இயன்ற அளவு நிறைவேற்றுகிறேன். ஆனால் அன்று....நான் முதன் முதலாகப் பெற்ற சம்பளத்தில்... என் தங்கைகளுக்கு சம்பளத்தில் 4 முழம் பூவாவது வாங்கி வந்தேனா என் தம்பி கடைக்குட்டிக்கு ஒரு பிஸ்கெட் பாக்கெட்டாவது வாங்கி வந்தேனா அலுவலகம் தேடி வந்த என் அன்புத் தந்தைக்கு, அவரை அழைத்துச் சென்று அந்த ராயர் ஹோட்டலில் ஒரு கப் காப்பியாவது சாப்பிடச் செய்தேனா! ஏன்? என்ன காரணம்?என்னுள் அன்று பொங்கிவழிந்த சுயநலமும் வரட்டு கௌரவமும்தானே!

—ஞானம்பாள், நாகர்கோயில்

பிரசுரத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டவை

எதிலுமே முதல் என்றால்உயர்த்திதானே! முதல் இரவு, முதல் குழந்தை, முதல் பரிசு என்று. நானும் அப்படித்தான் என் முதல் மாதச் சம்பளத்தை மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து வந்தேன்.

சம்பள தேதி நெருங்க நெருங்க ஒரு நாளில் என்னென்ன வாங்கவேண்டும் யார் யாருக்கு என்ன தரவேண்டும் எவ்வளவு தர வேண்டும் இப்படி எழுதி எழுதிப் பார்ப்பேன். அது சரிப்பட்டு வராது. மறுபடியும் எழுதுவேன். மறுபடியும் கிழிப்பேன்.

கடைசியில் அந்த நாளும் வந்தது. மாலை என் சம்பளக் கவரைக் கைப் பைக்குள் வைத்துப் பத்திரமாக மூடிக் கொண்டேன். பையை நெஞ்சோடு குழந்தையைப் போல் அணைத்துக் கொண்டேன்.

வீட்டில் காலடி வைத்தேனோ இல்லையோ, அம்மா ஒரே சோக மயமாக இருந்தாள். ''என்னம்மா சமாசாரம்?'' என்றேன்.

''பாவம், பக்கத்துப் போர்ஷன் ராஜம் மாமிக்கு இடுப்பு வலி எடுத்து விட்டது. தவியாய்த் தவிக்கிறாள். சவரணை இல்லாத கணவன். நிறை மாதக் கர்ப்பிணியை விட்டு விட்டு எங்கோ போய் விட்டார். வீட்டில் நண்டும் சிண்டுமாய் குழந்தைகள். நமக்குத் தான் என்ன இருக்கு சொல்லு? மாதக் கடைசி வேறே. மனசிருந்தால் போதுமா? இந்த லட்சணத்தில் இவள் தன்னுடையார் பேட்டை ரெயினி ஹாஸ்பிட்டல்லே ரெஜிஸ்தர் பண்ணி யிருக்காள். இந்த மாம்பலத்திலே யிருந்து அங்கே எப்படிப் போகிறதோ ஈச்வரா....'' அம்மா புலம்பித் தீர்த்து விட்டாள்.

நான் ஒன்றும் சொல்லவில்லை. என் சம்பளக் கவரை எடுத்து அம்மாவிடம் அப்படியே தந்தேன். அம்மா அதைப் பிரித்தாள். மறு நிமிடம் என் தம்பி டாக்சிக்கு விரைய, அம்மா ''ராஜம்'' என்று கூவியபடி அவர்கள் வீட்டுக்குப் போக, நான் களைப்போடு அங்கிருந்த நாற்காலியில் சாய்ந்து கொண்டேன்.

சௌம்யா கிருஷ்ணமூர்த்தி, சென்னை-92

நான் வேலைக்குச் சேர்ந்தது ஒரு அக்டோபர் மாத நடுவில்! எனக்குச் சில விஷயங்களில் அதிருஷ்டங்கள் உண்டு! நான் படிப்பை முடித்ததும் போட்ட முதல் விண்ணப்பத்திலேயே வேலை கிடைத்தது. அதுவும் எப்படி? அலுவலகம் வீட்டுக்கு வெகு சமீபத்திலேயே! நடந்தே போய்விடலாம். நல்லபடியாக வேலைக்குச் சேர்ந்தேன். அன்று சம்பள நாள்! காலையிலிருந்தே அடிவயிற்றில் பூச்சி பறப்பது போன்ற ஓர் இனம்புரியாத சந்தோஷம்!

அன்று மூன்று மணிக்கு அந்த அலுவலகம் வழக்கப்படி கவரில் சம்பளம், குறிப்புகளுடன் மேஜைக்கே வந்து விட்டது. எடுத்துக் கைப் பையில் வைத்துக் கொண்டு, அலுவலகம் விட்டதும் புறப்பட்டேன். முதலில் எனக்கு அம்மாவுக்கு, தங்கைக்கு என மூன்று முழம் பூ வாங்கினேன். பின் மீதிப் பணத்தை வைத்துக் கொண்டு கடைத் தெருவில் நுழைந்தேன். அம்மா, தங்கை விருப்பங்களுக்கேற்ப சாமான்களை வாங்கிக்கொண்டு: பணத்துக்காகக் கைப் பையில் கை விட்டால் கைதான் வந்தது! யாரோ ஸ்கேல் வைத்துக் கத்தரித்தது போல் பிளேடால் ஒரு நீளக் கோடு! பை பரிதாபமாக இருந்தது! என் மனநிலை எப்படி இருந்திருக்கும்? யார் யாரோ எப்படி எல்லாமோ அனுதாபம் சொன்னார்கள். ஒருவர் என் அஜாக்கிரதையைக்கூட குறை சொன்னார்.

எனக்குப் பேச வாயெழவில்லை! கடைக்காரரின் அனுதாபப் பார்வையோடு கொதிக்கும் மனத்தோடு வீடு திரும்பினேன்! அதை நினைத்து, அன்று முழுவதும் அழுது தீர்த்தேன். ஆகா என் முதல் சம்பளத்தில், நான் செலவு செய்தது அந்த மூன்று முழம் பூவுக்கு மட்டுமே!

மணி அருணாஜலம், சென்னை-33

வாழைப்பூ

இதை இடித்துப் பிழிந்து சாறுடன் நீராகாரம் கலந்து காலை வெறும் வயிற்றில் 3முதல் 7 நாட்கள் குடித்து வர பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை நோய் தீரும்.

—பட்டம்மாள்

எங்களைக் கேட்டால்
மணவாழ்வில் மனநிறைவுக்கு
எல்லாத் தம்பதிகளுமே

காளி காப்பர் பாட்டம்

வாங்கிடவேண்டும் என்போம்



தாம்பத்திய வாழ்வின் மகிழ்ச்சியில் குறுக்கிடும் சமையல்-சம்பந்தமான பிரச்சினைகளுக்கு இடமேயில்லை, காளி காப்பர் பாட்டம் வாங்கி விட்டால்!

சமையல்வேலை மிக சுலப மானதொரு நுண்கலை ஆகி விடுகிறது. மின்னல்வேக சமையல் நேரம் தவிர எரி பொருள் செலவிலும் 60% வரை கூட சேமிப்பு.

சாதாரண உணவும் அதி பக்குவமாக சமைக்கப் பட்ட விருந்தாக மலரு கின்றது.

காளி செம்பு அடிப்பாக முடைய ஸ்டெயின்லஸ் ஸ்டீல் பாத்திரங்கள் — உங்களுக்கு நீங்களே பரிசாக அளித்துக் கொள்ளவும் இணையற்றது.

ISI மார்க்குடன்!

இன்றே அருகிலுள்ள பிரபல பாத்திர விற்பனையாளரை அணுகுங்கள்.

---

kali

விற்பனை ஏஜண்ட்:
ஸ்ரீ வித்யா ஏஜன்ஸீஸ்,
கும்பேசுவரர் சன்னதி,
கும்பகோணம் 612 001



மண்டல ஏஜண்ட்: ஸம்மு & கோ., த.பெ. நெ. 1049,
ம. கா. ரோடு, எர்ணாகுளம், கொச்சின் 682 011. போன்: 31139

GKHE,M82.32 Tm

நான் மூன்று வயதாக இருக்கையில் என் தந்தையை இழந்தேன். என்னுடன் பிறந்தவர்கள் ஐவர் — மூன்று சகோதரிகள், இரண்டு சகோதரர்கள். (தம்பிகள்) என் கடைசித் தம்பிக்கு அப்பொழுது வயது மூன்று மாதம். நாங்கள் ஆதரவற்றிருந்த நிலையில் எங்களை ஆதரித்த ஒரே உறவினர் என் தாயின் பெற்றோர்கள். அவர்களுடைய சௌகரியங்களைத் தியாகம் செய்து எங்களுக்கு இருக்க இடமும் உண்ண உணவும் கொடுத்து ஆதரித்தனர். என் படிப்பு முடிந்ததும் இங்கு நான் படித்த கல்லூரியில் டியூட்டராகச் சேர்ந்தேன். என் முதல் சம்பளத்தைப் பெற்றுக் கொண்டவுடன் என் தாயிடம் கொடுத்து நமஸ்கரித்தேன். என் அன்னையின் சம்மதத்துடன் என் பாட்டிக்குப் புடவையும் என் தாத்தாவுக்கு இரண்டு வேட்டிகளும் வாங்கிக்கொண்டு அவர்களிடம் சென்று கொடுத்து வணங்கினேன். அவர்கள் மிகவும் மகிழ்ந்து, சீக்கிரமே உத்தியோக உயர்வு கிடைத்து நோய் நொடி இல்லாமல் நீண்ட நாட்கள் வாழ்க என்று வாழ்த்தினார்கள்.

இப்பொழுது அதே கல்லூரியில் விரிவுரையாளராக இருக்கிறேன். என்னை வாழ்த்திய நல்லிதயங்களான என் அன்னையும் அவர் பெற்றோர்களும் இறைவனடி சேர்ந்துவிட்டார்கள். என் துன்பங்களைப் பகிர்ந்து கொண்ட அவர்கள், நான் இப்போது சற்று வசதியுடன் இருக்கும்போது அதைப்பகிர்ந்து கொள்ள இங்கு இல்லையே என்று சதா வருந்துகிறேன்.

மறு பிறவி என்று ஒன்று உண்டெனில் அவர்களே எனக்கு அன்னையும் தந்தையுமாக வந்து என்னுடைய நிறைவேறாத ஆசையை— நன்றிக் கடனைப் பூர்த்தி செய்து இறைவன் அருள் பாலிக்க மாட்டானா என்று ஏங்குகிறேன். என் ஏக்கம் தீருமா?

சாந்தா, கோயம்புத்தூர்-2

எப்போதும் பெண்

சுஜாதா

(இதுவரை)

மூன்று பிள்ளைகளுக்குப் பின் அம்மா மீண்டும் கருத் தரித்தாள். அவர்கள் ஆசைப்பட்டபடி பெண்ணே பிறந்தாள். ஆனால் ஏராளமான ரத்தப் போக்கால் அம்மா இறந்து விட்டாள். அப்பாவுக்குக் குழந்தையை எப்படிப் பார்த்துக்கொள்வது என்று தெரியவில்லை. பிள்ளை இல்லாத நமச்சிவாயம் தம்பதியர் வந்து கேட்டார்கள்.

''உங்களுக்கும் நல்லது. குழந்தைக்கும் நல்லது. நீங்க எப்பத் திருப்பிக் கேட்டாலும் நான் குடுக்கத் தயார். இதுக்குன்னு ஆயா போட்டுர்றோம். வெட்நர்ஸ் போட்டுர்றோம். தங்கத்திலே வேணு தொட்டில் போட்டுர்றோம் குடுங்க'' என்றார். பெரும் யோசனைக்குப் பிறகு பெண்ணை எடுத்துக் கொடுத்தார் அப்பா. நமச்சிவாயத்தையும் அவர் மனைவியையுமே அப்பா, அம்மாவாக நினைத்துக் கொண்டு 'அவள்' வளர்ந்தாள். ஸ்கூலுக்கும் போக ஆரம்பித்தாள்.

அப்பாவால் பள்ளிக்குப் போகும் மூன்று பிள்ளைகளையும் வைத்துக் கொண்டு ஆபீசுக்குப் போக முடியவில்லை. நண்பர் —ஐ.ஸி.எஃப்.பில் வேலை பார்ப்பவர் — இரண்டாங் கல்யாணத்தைப் பிரஸ்தாபித்து, அவருக்கு ஏற்பாடும் செய்து விட்டார்.

நடுத்தர வயதில் அப்பாவுக்கு வாழ்க்கைப்பட்ட காமாட்சியோடு பிள்ளைகள் ஒட்டவில்லை. அதற்கு ஒரே வழி நமச்சிவாயம் வீட்டில் வளரும் பெண்ணைக் கொண்டு வருவதுதான் என்று புரிந்து கொண்டாள். 'கொடுக்க மாட்டேன்' என்று அவர்கள் மறுக்க, விவகாரம் கோர்ட்டில் போய் நின்றது. இரண்டு பக்கமும் விசாரித்த நீதிபதி, ''ஆறு மாதம் பெற்றவர் வீட்டில் போய் இருக்கட்டும். பிறகு அந்தப் பெண்ணை விசாரிப்போம். அதற்கப்புறம் அவள் யார் வீட்டில் இருக்க விரும்புகிறாளோ அங்கேயே இருக்கட்டும்...'' என்கிறார். பெண்ணை அழைத்துப் போக நண்பருடன் அப்பா வருகிறார்.....

(கதை 38-ம் பக்கம்)







இந்திரா — கும்பகோணம்

எனக்கு 5, 6 வருடங்களாக சர்க்கரை வியாதி இருக்கிறது. மேலும் ஒரு வருடமாக காடராக்ட் ஏற்பட்டு கண்ணாடி போட்டு இருக்கிறேன். 6 மாதங்களாகப் படித்தால் கண் இடுங்கிப் போய்விடுகிறது. அடிக்கடி எரிச்சல் ஏற்படுகிறது. டாக்டரிடம் விவரம் சொல்லிக் கேட்டதற்கு கண்ணில் எந்தக் கோளாறும் இல்லை. ஜெனரல் வீக்னஸ்தான் என்று சொல்லி டிகாட்ரான் என்ற மருந்தைத் தினமும் 3 தடவை கண்ணில் போட்டுக் கொள்ளவும் என்று எழுதிக் கொடுத்திருக்கிறார்.

பதில்:

சர்க்கரை வியாதியும் காடராக்டும் இருப்பவர்கள் 'டிகாட்ரான்' டிராப்ஸ் போடுவது மிகவும் தவறு. உங்கள் டாக்டரை அணுகி வேறு தகுந்த சிகிச்சை செய்யுமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

தினகரன் — பெங்களூர்

சமீபத்தில் நான் சில பத்திரிகைகளில் ரஷ்யாவில் ஒரு கண் டாக்டர் ஐந்து நிமிட ஆபரேஷன் மூலம் கிட்டப் பார்வையைச் சரி செய்து விடுவதாகப் படித்தேன். இது உண்மையா? இந்த நவீன ஆபரேஷன் முறையினால் என் போன்ற கிட்டப் பார்வையுடையோருக்குப் பலனுண்டா? இல்லையேல் கிட்டப் பார்வையைச் சரிப்படுத்த ஏதேனும் வழிமுறைகளுண்டா?

பதில்:

அந்த ரஷ்ய அறுவைச் சிகிச்சையில் எனக்கு நம்பிக்கை இல்லை. கண் டாக்டர் முன்னேற்றக் கண்ணாடி அணிவதைத் தவிர வேறு சிறந்த வழியில்லை.

கே. எஸ். பாலசுப்பிரமணியன் — ஈரோடு

நான் ஒரு டயாபடிக் பேஷண்ட். எனக்கு கண் பார்வை மங்கி வருகிறது. வலது கண் கால் பார்வையும் இடது கண் அரைப் பார்வையும்தான் உள்ளது. தாங்கள் குறிப்பிட்டிருந்த சில முறைகளின்படி எனது கண்களைக் குணமாக்கிக் கொள்ள விரும்புகிறேன். அதற்கு யாரை அணுக வேண்டும்?

பதில்:

ரத்தத்தில் சர்க்கரை 330 என்பது 'கண்ட்ரோல்' செய்தது மிகவும் மோசமாக உள்ளது என்பதைக் குறைக்கிறது. நீங்கள் ஈரோடாக இருப்பதால் டாக்டர் வாலேஸ்வரன், (முதல் அக்ரஹாரம், சேலம்) அவர்களை அணுகலாம்.

நிர்மலா — பாளையங்கோட்டை

எனக்கு வயது 19. எனக்குக் கண் நோய் எதுவும் இல்லை. ஆனால் கண்களுக்கு மேல் உள்ள இமைகள் இரண்டும் வீங்கி இருப்பது போல் உள்ளது. நீர் நன்றாகப் போனால் வற்றி இமைகள் மெலிதாகி விடுகிறது. எங்கள் வீட்டில் உள்ளவர்கள் உனக்கு இயற்கையாக இவ்வாறு உள்ளது. இது நோயல்ல என்கிறார்கள். பொதுவாக எனக்கு மருத்துவர் உப்பு அதிகம் சேர்க்கக் கூடாது என்று கூறியுள்ளார். இதற்குக் கண் மருத்துவரிடம் காண்பித்தால் சரியாகுமா? தங்களின் ஆலோசனையின்படி நடக்கலாம் என்று நினைக்கிறேன்.

டாக்டர் பத்ரிநாத்

பதில்:

முழுமையாகப் பரிசோதனை செய்யாமல் இதற்குக் கருத்துத் தெரிவிக்க இயலாது!

வள்ளி — **செங்கல்பட்டு**

என் மகன் பாஸ்கரனுக்கு 10 வயது ஆகிறது. என் மகன் எப்பொழுது பார்த்தாலும் கண் கூசுகிறது என்று கூறுகிறான். அடிக்கடி கண்ணை மூடிக் கொள்ளுகிறான். எதுவும் படிக்க முடிவதில்லை. எப்பொழுதாவது கண் எரிகிறது என்று கூறுகிறான். இதற்கு என்ன செய்வது?

பதில்:

இதற்கும் முழுமையாகப் பரிசோதனை செய்யாமல் அறிவுரை சொல்ல இயலாது.

எம். ஏ. — **திருச்சி**

என் பெண்ணுக்கு வயது 12. கண்ணுக்குக் கண்ணாடி போட்டு 3 வருடம் ஆகிறது. இங்கு பிரபல கண் டாக்டர், பயப்படத் தேவையில்லை. நரம்பு வீக்காக இருக்கிறது. சரியாகி விடும் என்று கூறுகிறார். இருந்தாலும் எனக்கு மிகவும் கவலையாக உள்ளது. இது எதனால் என்பதை எழுதுங்கள்.

பதில்:

கண்ணாடி பவரை நீங்கள் குறிப்பிட்டதிலிருந்து **Myopia** என்று புரிந்து கொள்ள முடிகிறது. இது வயது வளர வளர அதிகமாகும். இதை 18 வயது வரை சாதாரண **Myopia** என்றும், 30 வயது வரை பெதோலாஜிகல் என்றும் கூறுவார்கள். அதற்கேற்றாற்போல கண்ணாடிப் பவரை அதிகமாக்கிக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை. ஒன்றரை அல்லது இரண்டு வருடங்களுக்கு ஒரு முறை பரிசோதித்துக் கொள்ளவும் வேண்டும்.

வி. சரோஜா — **விருகம்பாக்கம்**

எனக்குக் கடந்த ஆறு மாதமாகக் கண்ணில் ''க்ளாகோமா'' (கண் அழுத்தம்) இருப்பதாக எழும்பூர் கண் மருத்துவமனைக்குச் சென்று வருகிறேன். கடந்த மூன்று மாதங்களாகப் போக முடியவில்லை. ஆனால் கண்ணில் எந்தவித உபாதையோ கண்ணில் நீர் வடிதலோ இல்லை. தனிப்பட்ட முறையில் வைத்தியம்செய்து கொள்ளவும் வசதியில்லை. சோதனைக்குச் செல்லவும் முடிவதில்லை. அதனால் ஏதாவது கெடுதல் உண்டாகுமா?

பதில்:

இது போன்ற 'க்ளுகோமா' உள்ளவர்களுக்கு நான் முக்கியமாகச் சொல்ல விரும்புகிறேன். மூன்று அல்லது நான்கு மாதங்களுக்கு ஒரு முறை தவறாமல் அவர்கள் மருத்துவரிடம் சென்று பரிசோதித்துக் கொள்ள வேண்டும். இன்னொரு முக்கியமான விஷயம் — 'க்ளுகோமா'வுக்கு டாக்டர்கள் சொல்லும் மருந்துகளைத் தவறாமல் மேற்கொள்ள வேண்டும். ஒரு மனிதனுக்கு மூச்சு விடுவது எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் இதுவும்.

தனுஷ்கோடி — **இராசிபுரம்**

மூன்று வருடங்களுக்கு முன் கண்ணில் புரை விழுந்திருப்பதாகவும் முற்றிய பின் ஆபரேஷன் செய்ய வேண்டும் என்றும் டாக்டர் கூறினார். இப்பொழுது ரத்த அழுத்தம் அதிகமாக இருக்கிறது. பார்வை குறைவதாகத் தோன்றுகிறது. இரண்டுக்கும் சம்பந்தம் இருக்குமா? வேறு கண்ணாடி அணிந்தால் சரியாகிவிடுமா?

பதில்:

அதிகமான ரத்த அழுத்தத்தின் காரணமாக பார்வை பாதிக்கப்பட்டிருக்கலாம். இதை 'ஹைபர்டென்சிவ் ரெடினோபதி' என்பார்கள். காடராக்ட் வளருவதால் உங்கள் பார்வை பாதிக்கப்பட்டிருக்கலாம்.

வி. கமலாதேவி — **திருநெல்வேலி**

வளரும் குழந்தைகளுக்கு எத்தகைய உணவு கொடுப்பதால் பிற்காலத்தில் கண்ணில் கோளாறுகள் ஏற்படாமல் பாதுகாக்கலாம்?

பதில்:

கண்களுக்கென்று குறிப்பிட்ட சத்துணவு ஏதும் இல்லை. பொதுவாக சமச் சீருணவு என்று சொல்லப்படும் சத்துணவு சாப்பிட்டாலே போதும். உதாரணத்துக்கு என்னை எடுத்துக் கொண்டால் இதற்கென்று தனியாக நான் எந்த வைட்டமினும் சாப்பிடுவதில்லை. என் குழந்தைகளுக்கும் தருவதில்லை.

கே. சங்கர் — **சென்னை-14**

எனக்கு வயது 30. என்னுடைய இரண்டு கண்ணும் உள்ளே இருக்கிறது. (அதாவது ஆழத்தில்) கண் பார்வை தெளிவாக இருக்கிறது. எந்தக் கோளாறும் இல்லை. கண் உள்ளே இருப்பதால் நண்பர்களும்தெரிந்தவர்களும் என்னைக் கிண்டல் செய்கிறார்கள். சில சமயம் எனக்கே மிகவும் மனச் சங்கடம்ஏற்படுகிறது. என்னுடைய கண் இரண்டும் எல்லோரும் போல் ஆவதற்கு ஏதாவது வழி உண்டா?

பதில்:

உள்ளடங்கிய கண்களில் அறுவை சிகிச்சை செய்வது சாத்தியமில்லை.

பெண்களுக்கே முதலிடம்!



'நமது கலாசாரம், பண்பாடு இவைகளுக்கெல்லாம் மூலாதாரமாக, உறைவிடமாக நமது பெண்கள்தான் விளங்குகிறார்கள்' என்றெல்லாம் பேசுகிறோம்; எழுதுகிறோம். ஆனால் அவற்றின் வெளிப்பாடான பூஜைகள், சடங்குகள், வைதீகக் காரியங்கள் என்று வரும்போது அங்கு பெண் ஆணுக்குத் துணையாக இரண்டாம் பட்சமாகத்தான் விளங்குகிறாள்.

இப்படிப்பட்ட நிலையில் பெண்களெல்லாம் சேர்ந்து ஒரு ஆன்மீக மாநாடே நடத்தினார்கள். டாக்டர் விசாலாட்சி நெடுஞ்செழியன் இதற்காவ ஏற்பாடுகளை கவனித்தார். அவரிடம் இவற்றைப் பற்றிக் கேட்ட போது—

"முதலில் இந்த மாநாடு எப்படி, யாரால் நடத்தப்படுகிறது என்பதைச் சொல்லிவிடுகிறேன். மதுராந்தகம் பக்கத்தில் உள்ள மேல் மருவத்தூரில் உள்ள ஆதிபராசக்தி அம்மன் ஆலயத்தில் பங்காருஅடிகளார் என்ற எளிய ஒரு பள்ளி ஆசிரியர் இருக்கிறார். அவர் பேரில் 'அம்மன்' வந்து இதைச் செய்விக்கிறாள். 'அவள்' குறித்த தேதியில்நாங்கள் ரேணுகா அப்பாதுரை போன்ற பலதுறைப் பட்ட பெண்களை அழைத்துச் சொற்பொழிவாற்றச் செய்தோம். இலட்சக் கணக்கான பெண்கள் இதில் கலந்து கொண்டனர்..."

திருமதி நெடுஞ்செழியன் இப்படிப் பேசும் போது ஆச்சரியமாக இருக்கிறது. ஒருவர் மேல் சாமி வந்து இப்படிப்பட்ட பெரிய மாநாடுகளை நடத்தச் சொல்வதா? அதை இவரும் சரியென்று ஒப்புக்கொள்வதா?

"இதையெல்லாம் நான் நம்பவில்லை என்று நான் சொல்லிக் கொள்ளலாம். ஆனால் இப்படிப்பட்ட இவருக்கு ஆயிரம், லட்சம், கோடி என்று பக்தர்கள் பெருகிக் கொண்டுதான் வருகிறார்கள். இன்றைக்கு நாட்டில் தலை நிமிராதபடி ஏராளமான பிரச்னைகள். மன அமைதிக்கு, நிம்மதிக்கு எங்காவது ஒரு புகலிடம் கிடைக்காதா என்று பெரும் பெரும் விஞ்ஞானிகள் கூட அலைகிறார்கள். அவர்களுக்கு இதுபோன்ற இடங்கள் சாந்தியையும், அமைதியையும், தெம்பையும் தருகின்றன....."

"இப்படிப்பட்ட அருள்வாக்குகளும், சித்துகளும் நம்முடைய பிரச்னைகளைத் தீர்த்து விடும் என்று நீங்கள் மனதார நம்புகிறீர்களா?" என்று ஆச்சரியத்துடன் கேட்டேன்.

"ஆமாம். இந்தக் கோயிலைப் பொறுத்த வரை நான் நம்புகிறேன். அதற்குக் காரணம் இருக்கிறது. ஒரு டாக்டர் என்ற முறையில் நான் கிராமம் கிராமமாக அலைந்திருக்கிறேன். சுத்தம் என்பதே கொஞ்சம் கூடக் கிடையாது. இதையாவது நாம் அறியாமை என்று மன்னித்து விடலாம். ஆனால் சுகாதாரத்தை பற்றிச் சொல்லிக் கொடுத்தாலும் கூட அதை முழுமையாகப் புறக்கணித்தால் அதை எப்படி மன்னிக்க முடியும்?

'உனக்கென்ன சம்பளம் கொடுக்கிறார்கள், வந்துட்டே அங்கேருந்து. நாங்க வாய்க்கும் வவுத்துக்கும் காணும அலையறோம். தண்ணியக் காய்ச்சிக் குடிக்கிறதாம், சத்துள்ள உணவைச் சாப்பிடறதாம்... போம்மா உன் வேலையைப் பார்த்துக்கிட்டு.'

இதுதான் இன்றைய லட்சக் கணக்கான கிராமங்களின் நிலை. ஆனால் இந்தக் கோயில், கோயிலுக்கு வரும் அடியார்களிடம் சுத்தத்தைப் பார்க்கிறேன். துப்புரவான கோயிலாக எப்போதும் இது பாதுகாக்கப்படுகிறது. அது மட்டுமல்ல. இது எல்லா மதத்தவரும் வந்து வணங்கலாம் என்பது ஒருபுறமிருக்க, ஒரு நல்ல சமூக சேவை நிறுவனமாகவும் இருக்கிறது. எப்படி என்று சொல்கிறேன்—

✽ மாநாட்டில் செயலாற்றிய டாக்டர் அமுதா, திருமதி ஜெகண்மூர்த்தி ராவுடன்



இப்போது 'அம்மா' வாக்கு மூலமாக 108 வார வழிபாட்டு மன்றங்கள் நாடெங்கும் இருக்கின்றன. கூட்டு வழிபாடு என்பதே நம் மதத்தில் இல்லை. அதை ஒரு கட்டாயமாக வைத்துக் குறிப்பிட்ட நாளில் அனைவரும் இணைந்து பராசக்தியைத் துதிக்கிறார்கள். கூட்டுறவு என்று வரும்போது ஒருவருடன் ஒருவர் இணைவதன் மூலம் பல நன்மைகள் பிறக்கிறது.

நல்ல தூய்மையான மனங்கள் வந்து விட்டாலே அங்கே தீமையோ, சுயநலமோ, வஞ்சகமோ ஒழிந்து விடுகிறது. வெறும் பிரார்த்தனை மட்டுமல்லாமல் ஏழை எளியவர்களுக்கு அன்னதானம், உடை கொடுத்தல், விதவைப் பெண்களுக்கு டெய்லரிங் மெஷின், மருத்துவ வசதி இப்படிப் பல சமூக காரியங்களிலும் ஈடுபடுகிறார்கள். இப்படி நாடெங்கும் இந்த வார வழிபாடு மன்றங்கள் ஒரு சிறப்பான சேவையைச் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்...''

''இதில் பெண்கள் எந்த அளவு ஈடுபடுகிறார்கள்? என்னதான் அவர்கள் போற்றப் பட்டாலும், சம்பிரதாயச் சடங்குகளில் ஆணுக்குத் துணையாகத்தானே நிற்கிறார்கள்''

''அதுதான் இந்தக் கோயிலில் கிடையாது. இங்கு பெண் பூசாரிகள்தான் அதிகம். யாரும் தெய்வத்தைத் தொட்டுப் பூசை செய்யலாம். வணங்கலாம். பெண்களுக்கென்றே ஒரு ஆன்மீக மாநாட்டையே நடத்த வேண்டும் என்று 'அம்மா' தான்

வெண்கலப் பானை, அடுக்கு இவற்றில் வடித்த சாதம் பீதியாகி விட்டதா? அவை வேறு பாத்திரத்தில் எடுத்து வைக்காமல் வடித்த பாத்திரத்திலேயே வைத்திருங்கள். அந்தப் பாத்திரத்தைச் சுற்றி நனைந்த துணியைச் சுற்றி வையுங்கள். சாதம் தண்ணீர் விட்டுக் கெட்டுப் போகாமலும், இருக்கும். பொறுக்குத் தட்டாமலும் இருக்கும்.

—ஜெயா

சொன்னாள். 'ஆன்மிகம் வளர்த்த அருந்தவப் பெண்டிர்' 'சமுதாய வாழ்வில் ஆன்மீகம்' போன்ற பலப் பல தலைப்புக்களில் ஏராளமான பெண்கள் கலந்து கொண்டு உரையாற்றினார்கள். லட்சக் கணக்கான பெண்களும் கலந்து கொண்டனர்...''

''இப்படி மாநாடுகள் நடத்துவதால் எந்தப் பிரச்னை தீர்ந்துவிடும் என்று நினைக்கிறீர்கள்?''

''அதுதான் முதலிலேயே சொன்னேனே, நம்முடைய மனங்களெல்லாம் சுத்தமாக வேண்டும். ஒவ்வொருவரும் தனிப்பட்ட முறையில் நல்லவரானால் சமுதாயமே திருந்தி விடும் இல்லையா? அதுவும் தவிர நம்முடைய நாட்டில் அவரவருடைய கடமையை அவரவா செய்ய வேண்டும் என்ற சுய உணர்வே இருப்பதில்லை. யாராவது ஒரு மேஸ்திரிவிரட்டிக்கொண்டே இருக்க வேண்டும். நான் டாக்டராக இருந்து சுத்தம், சுகாதாரம் பற்றிச் சொன்னால் கேட்காத பெண்கள் 'அம்மா' சொன்னால் பயத்தில் செய்கிறார்கள். எனவே இப்படியொரு பயம், பக்தி காரணமாகவாவது சமுதாயமும், நாடும் திருந்தினால் நல்லது என்று நினைக்கிறேன்....''

வாழைத்தண்டு

சிறுநீரக சம்பந்தமான வியாதி உள்ளவர்கள் தினசரி வாழைத்தண்டு பயத்தம் பருப்பு சேர்த்து கூட்டு செய்து சாப்பிட, கல்லடைப்பு முதலிய நீர் ரோகங்கள் தீரும்.

—பட்டம்மாள்

''சொந்தமுறையில் உங்களுக்கு எப்படி இதில இவ்வளவு ஈடுபாடு ஏற்பட்டது?''

''நான் செங்கல்பட்டு மாவட்டத்தில் மருத்துவப் பணிக்காகச் சுற்றிக் கொண்டிருந்தபோதுதான் இந்தக் கோயிலைக் கண்டு போவேன். செவ்வாய், ஞாயிறு, பொதுவாகவும், வியாழக் கிழமை பெண்களுக்கு மட்டும் என்றும் அருள்வாக்கு சொல்வார்கள் இதைக் கேள்விப்பட்டு நான் அந்த நாட்களில் போனபோது பல அற்புதங்கள் நடப்பதைக் கண்டேன். விஞ்ஞானபூர்வமாக மருத்துவம் படித்த எனக்கு இதெல்லாம் எப்படி நடக்கிறது என்றே புரியவில்லை. கோலூன்றி நடக்க முடியாமல் வந்த ஒருவர் என் கண்ணெதிரிலேயே எழுந்து நடந்தார். இப்படி மற்றவர்களுக்குப் பலவற்றைப்-பார்த்தாலும் நானும் இதை அனுபவித்திருக்கிறேன். கோயிலுக்குப் போகும் வழியில் சாயி பாபாவைப் பார்த்துவிட்டு நுழைந்தவுடன் அம்மா கேட்ட முதல் கேள்வி, ''என்னம்மா பார்த்தாயா: விபூதி கிடைத்ததா?'' இதுதான். எனக்குப் பகீரென்றது. என் உறவுப் பெண்ணுக்கு அம்மா சொன்ன கெடுவில் திருமணம் நடந்தது.

இப்படி எத்தனை எத்தனையோ. ஆனால் ஜிலேபி ரொம்ப நன்றாக இருநதது. கலர் இப்படி; சுவை இப்படி என்று ஆயிரம் பக்கம் வருணிக்கலாம். அதைத் தின்று பார்த்தாலல்லவோ அதன் சுவை தெரியும். அப்படிப்பட்டதுதான் இந்த ஆன்மீக அனுபவமும்....''

என்று பரவசத்துடன் கூறுகிறார் திருமதி விசாலாட்சி நெடுஞ்செழியன்.

பேட்டி: பிரசன்னா

கோவையிலிருந்து கொஞ்சம் நியூஸ்!



மதஸ்தாபனங்களும் சமூகசேவையில் பங்கெடுத்துக் கொள்ள ஆரம்பித்து விட்டன. கோயம்புத்தூரில் ஆர். எஸ். புரத்தில் உள்ள சங்கராச்சாரியார் கோவில் அருகேயே மருத்துவ மனை ஒன்றையும் நிறுவியுள்ளனர். ஏழைகளுக்காக இலவச மருத்துவ உதவி செய்ய முன்வந்துள்ளது இந்த 'காஞ்சி காமகோடி இலவச மருத்துவமனை.' கோவையில் புகழ் பெற்ற மருத்துவர்கள் திரு, திருமதி ரமணி உள்பட ஏராளமான தலைசிறந்த மருத்துவர்கள் இலவசமாக வைத்தியம் பார்க்கிறார்கள்.

45 மருத்துவர்களுடனும், 15 உதவியாளர்களுடனும் 1977ல் தொடங்கப்பட்ட இம்மருத்துவமனை இன்று பல்கிப் பெருகியுள்ளது. பெரிய ஆபரேஷன்கள் முதல், கண் பரிசோதனை வரை பலவித சிகிச்சைகளும் இவர்கள் செய்கிறார்கள். டாக்டர் ராவ் போன்றவர்கள் தங்கள் நர்ஸிங் ஹோமில் இங்கிருந்து வரும் நோயாளிகளுக்கு எனச் சில இடங்களை ஒதுக்கி யிருக்கிறார்கள்.

சுகாதார முகாம், முனிசிபல் பள்ளிச் சிறுவர்களுக்குக் கண் பரிசோதனை, பொதுமக்களுக்கும் உடல் ஊனமுற்றவர்களுக்கும் இலவசப் பரிசோதனை எனப் பலவித சமூக சேவைகளை இவர்கள் செய்கிறார்கள். கோவையில் நல்லதொரு சமூக சேவை நிறுவனமாக வளர்ந்து கொண்டிருக்கும் இம்மருத்துவ மனையை மேலும் பல வகையிலும் விரிவு படுத்த முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

• • •

இங்கு இயங்கும் பெண்கள் மன்றங்களில் கொஞ்சம் வித்தியாசமாக 'அன்னை மகளிர் மன்றம்' விளங்குகிறது. காரணம் இதன் தலைவர் வித்தியாசமானவராக இருப்பதால் தானோ என்னவோ! புது(மை)க் கவிஞர் திருமதி ரோகிணி கோவைக்கு வந்தவுடனேயே இந்த மன்றத்தைத் திட்டமிட்டாராம்.

''பொதுவாக பெண்கள் சங்கம் மேல் தட்டுப் பெண்களுக்கு என்றுதான் இருக்கும். சாதாரண மத்தியதரப் பெண்களுக்கும், ஏழைப் பெண்களுக்கும் இருப்பதில்லை. நான் வசிக்கும் வீட்டுக்கு அருகே ஃப்ளாட்டுகளில் ஏராளமான பெண்கள் இருந்தார்கள். இவர்களை யெல்லாம் சந்தித்துப் பொழுதைப் பயனுள்ளதாக ஆக்கலாமே என்றேன். இன்றைக்கு இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் இந்தச் சங்கத்தில் இருக்கிறார்கள்.'' என்கிறார் ரோகிணி.

• • •

இவர்கள் என்றில்லை. பொதுவாகவே வீட்டில் இருக்கும் பெண்கள் நிறையக் கைவேலைகளைச் செய்கிறார்கள். யாரும் இங்கு வீண் பொழுது போக்குவதில்லை. எந்த வீட்டுக்குப் போனாலும் அந்த வீட்டுப் பெண்கள் செய்த பொம்மைகள், தோர்கள், பூ வேலைப்பாடுகள்தான். பெண்கள் பெரிதாகச் செய்வது மட்டுமே சாதனையல்ல. தங்கள் உணர்வுகளை அழகுபட வெளியிட்டு வீட்டைக் கலைக் கோயிலாக்கினாலும் சரிதானே!

• • •

நம்முடைய குடும்பங்களில் தனிக் குடித்தனம் கிளம்பிக் கொண்டிருந்தாலும் வடநாட்டுப் பக்கமிருந்து வருபவர்கள் எந்தப் பேதமும் காண்பதில்லை. நான்கைந்து சகோதரர்கள் ஒன்றாக வியாபாரம் நடத்துகிறார்கள் பெண்கள், குழந்தைகள் என்று வீடே தினமும் திருநாளாகத்தான் இருக்கிறது. கூட்டுக் குடும்பமும் அழகுதான் என்று இவர்களைப் பார்த்துப் பெருமூச்சு விட வேண்டியதாக இருக்கிறது.

விருந்தோம்பலுக்கும் இவர்கள் சளைத்தவர்கள் இல்லை. ''விடுமுறை வந்ததிலிருந்தே எனக்கு ஒரே ஒரு உத்தியோகம்தான். வரும்

விருந்தினர்களை ரயில்வே ஸ்டேஷனிலிருந்து அழைத்து வரவேண்டும். திரும்பவும் கொண்டு விடவேண்டும். ரயில்வே புக்கிங் கேன்சலிங்... பொழுதே பத்தவில்லை...'' இதைச் சலிப்பாக இல்லை, ஜாலியாக முழு மனத்துடன் சொல்கிறார் காண்டேல்வால் குடும்பத்தில் ஒருவரான ஆனந்த பிரகாஷ்.

நம் விருந்தோம்பும் பண்பாடு இவர்களைப் பிடித்துக் கொண்டு விட்டதோ!

● ● ●

'கோயம்புத்தூருக்குப் போகிறோமே புடவைக்கு ரொம்ப ஃபேமஸ் ஆச்சே. கடைகளில் நுழைந்துவிட வேண்டியதுதான்' என்று சப்புக்கொட்டிக்கொண்டு போனால் ஏமாற வேண்டியதுதான். இங்கு தயாராகும் புடவைகளையெல்லாம் வெளியூருக்கு அனுப்பி விடுகிறார்கள். சுவாரஸ்யமாக ஒன்றும் கிடைக்காது.

● ● ●

'மற்றவர்களுக்கு நான் என்ன இளைத்துப் போய்விட்டேனா' என்று சவால் விடுகிறது மழைக்கால கோயம்புத்தூர். வானம் பெய்தால் போச்சு. எல்லா சப்-வேக்களிலும், ரோடுகளிலும் தண்ணீர் நிரம்பி போக்குவரத்துத் திக்குமுக்காட வேண்டியதுதான். பெரிய நகரக் கார்ப்பரேஷன் காரர்கள் எல்லாம் என்னதான் செய்கிறார்களோ?

● சென்னையில் சினிமா நட்சத்திரங்களுக்கு இருக்கும் மவுசு கோவையில் எழுத்தாளர்களுக்கு இருக்கிறது. விமலா ரமணியோ, உஷா சுப்பிரமணியமோ வந்தால் போச்சு. ஒரே பரபரப்புத்தான். உள்ளூர்க்காரர்



களுக்கே இவ்வளவு மதிப்பென்றால் வெளியிலிருந்து வந்தால்....? எழுத்தாளர்களைப் போற்றும் ஒரே நகரம் கோயமுத்தூர் என்று 'ஜே' கூடப்போடலாம். -பப்பு

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கான போட்டி:

கடந்த இரண்டு மாதங்களாக அலுவலகம் போகும் பெண்களுக்கான போட்டிகளும், பரிசுபெற்ற கட்டுரைகளும் வெளி வந்தன. இவ்வரிசையில் இதுவே கடைசி மாதம். இம் மாதத்திற்கான தலைப்பு —

அலுவலகத்தில் நான் சந்தித்த பிரச்னையை எப்படிச் சமாளித்தேன்?

கட்டுரை அனுப்புவதற்கான கடைசி தேதி : 20-7-82

முதல் பரிசு : 'ராகமாலிகா' புடவை

இரண்டாம் பரிசு : கைப்பை

அமிர்தாஞ்சன்

இல்லந்தோறும் இருக்கவேண்டிய ஒரு நல்ல மருந்து



85 ஆண்டுகளுக்கும் மேலாக புகழ் வாய்ந்தது

அமிர்தாஞ்சனில் இயற்கையின் சக்திமிக்க 10 மருந்துப் பொருட்கள் சரியான விகிதத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. ஆகவே அமிர்தாஞ்சன் தலைவலி, ஜலதோஷம், உடல்வலி, சுளுக்கு ஆகியவற்றிலிருந்து விரைவான, பாதுகாப்பான நிவாரணம் அளிக்கிறது. அமிர்தாஞ்சன் 12 கிராம், 24 கிராம் பாட்டில்களிலும் மற்றும் 5.25 கிராம் சிறிய டப்பாக்களிலும் விற்கப்படுகிறது.

உங்கள் வீட்டில் எப்பொழுதும் அமிர்தாஞ்சன் வைத்திருங்கள்

உங்களுக்கு எந்தப் புடவை பொருந்தும்?



ஒரு புடவையோ அல்லது வேறு ஒரு உடையோ வாங்க வேண்டுமென்று முடிவு கட்டிவிட்டோம். கணவரையோ அல்லது வேறு யாரையேனும் அழைத்துக்கொண்டு நேராகக் கடைக்குப் போகிறோம். அங்கிருக்கும் ஆயிரக் கணக்கான புடவைகளில் அலசி ஒன்றை எடுக்கிறோம். நமக்குப் பிடித்ததாக!

ஆமாம், நமக்குப் பிடித்தமாக எடுக்கிறோமே, அது நமக்குப் பொருத்தமாக இருக்கிறதா என்று பார்க்கிறோமா? அது என்னது புதுசாக இருக்கிறதே என்கிறீர்களா? எனக்கு லைட் கலர்தான் பிடிக்கும், சின்னச் சின்னப் பூதான் பிடிக்கும் என்பதை விட நமக்கு லைட் கலர் நன்றாக இருக்குமா, சின்னப் பூப் போட்ட புடவை நம் உடல் வாகிற்குச் சரியாகுமா என்பதைத்தான் பார்க்க வேண்டும்.

''ஆள் பாதி; ஆடை பாதி.''

என்பது தெரிந்த விஷயம். ஆடை என்பது நம்மை மேலும் அழகுள்ளவர்களாக கண்ணியம் மிகுந்தவர்களாகக் காட்டவேண்டும். அப்படி ஒரு கண்ணோட்டத்துடன் தான் நாம் எந்த ஒரு ஆடையையும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

கோடுகள்

முதலில் கோடுகள் போட்ட புடவைகளைப் பற்றிப் பார்ப்போம். எந்தெந்தக் கோடுகள் எப்படிப்பட்ட உடல்வாகு உள்ளவர்களுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று பார்க்க வேண்டும்.

இதில் குறுக்குக் கோடுகள் ═ இப்படி இருக்கும். ||| நெடுக்குக் கோடுகள் இப்படி வரும்.

இவற்றில் தடிமனான கோடுகளும் (—) ஒல்லியான கோடுகளும் வருகின்றன. இவற்றுள் குறுக்குக் கோடுகள் போட்ட புடவை உடுத்தியவரைக் குள்ளமாகக்காட்டும். நெடுக்கும் கோடுகள் உயரமாகக் காட்டும். இவற்றிலேயே,

இப்படிச் சில டிசைன்களும் வரலாம். முதல் கோடு உயரத்தைக் குறைவாக்கும். இரண்டாவது கோடு உயரமாக்கும். மூன்றாவது கோடு நேராகப் போனாலும் கண்களை மீண்டும் கீழ் நோக்கி இழுக்கிறது. எனவே மத்தியதரமாகக் காட்டும். நான்காவது கோடு மேலும் கண்களைப் பிரித்து மேலே செலுத்துகிறது. எனவே நல்ல உயரமாகக் காட்டும்.

— ஏ. வி. கே. சபீதா —



நம் கண்கள் உள்ளதை உள்ளபடி காட்டுவதில்லை. இப்படிப்பட்ட கோடுகளில் சிக்கி மயங்குகிறது. எனவே அதைப் பயன்படுத்திக் கொண்டு நம் உடல் வாகிற்கு ஏற்றாற்போல் உடைகளை உடுத்துவோமானால் நாலு பேர் போற்றும் விதமாக விளங்கலாம்.

உடல்வாகு

பொதுவாகப் பெண்களின் உடல்வாகை நான்கு விதமாகப் பிரிக்கலாம்.

1. உயரமான ஒல்லியானவர்கள்
2. உயரமான தடியானவர்கள்
3. குள்ளமான ஒல்லியானவர்கள்,
4. குள்ளமான தடியானவர்கள் —

(இவ்விரண்டும் நடுத்தரமானவர்களுக்கும் பொருந்தும்.)

இந்நான்கு வகைகளிலே நீங்கள் எப்படிப் பட்டவர் என்பதை முதலில் தெரிந்துகொள்ளுங்கள். பிறகு உங்களுக்குப் பொருத்தமான ஆடையை இதோ சொல்கிறோம்.

உயரமான ஒல்லியானவர்கள்

இவர்களுக்குக் குறுக்குக் கோடு போட்ட புடவைகள் நன்றாக இருக்கும். மிகவும் உடம்போடு ஒட்டிய வகையில் அணியக் கூடாது. பெரிய பார்டர் போட்ட புடவைகளும், பெரிய பெரிய பூக்கள் போட்ட டிசைன் புடவைகளும் எடுப்பாக இருக்கும். இது இவர்களுடைய உயரத்தைக் குறைத்துக் காட்டும்.





ஆதர்ஷ வித்யாலயா +2 மாணவிகள்.

உயரமான குண்டானவர்கள்

குறுக்குக் கோடு போட்ட புடவைகளும் பொருந்தும். அவை நடு நடுவே உடைந்து சிறு சிறு பூக்களுடன் கூடிய டிசைனுடன் இருந்தால் நன்றாக இருக்கும். வளைவுக் கோடுகள், சுமாரான பூக்கள், சுமாரான பார்டர் இவைகளுடன் கூடிய புடவைகள் இவர்களைச் சிறப்பாகக் காட்டும்.

குள்ளமான ஒல்லியானவர்கள்

நடுத்தர பார்டர், சிறு சிறு பூக்கள் (அ) சிறு சிறு டிசைன்கள் நன்றாக இருக்கும். இவர்களை உயரமாகக் காட்ட உதவுவது நெடுக்குக் கோடுகள். அவைகள் கொஞ்சம் அழுத்தமான கோடுகளாக இருக்குமானால் ஒல்லியான உடல் வாகை நிறைவு செய்யும்.

குள்ளமான குண்டானவர்கள்

இவர்கள் பார்டரே இல்லாத புடவையை அணிந்தார்களானால் நன்றாக இருக்கும். இவர்களுக்கும் சிறப்பாகப் புள்ளிகள் போட்ட புடவை எடுப்பாக இருக்கும். மிகவும் மெல்லிய நெடுக்குக் கோடுகள் இவர்களை அழகு செய்யும். சிறுசிறு பூக்கள் கொண்ட பார்டர் இல்லாத புடவைகளே நல்லது.

இனி பொதுவாக ஒரு குறிப்பைச் சொல்ல விரும்புகிறேன். இப்பொழுது டிசைன் போட்ட சட்டைகள், புடவைத் துணியைப் போலவே வருகிறது. இவை பொதுவாக யாருக்குமே பொருந்தாது. ஏனெனில் புடவைக்குச் சட்டை என்பது எடுப்பைத் தர வேண்டும். ஆனால் இங்கு புடவை டிசைனுடன் ரவிக்கை டிசைனும் கலந்து விடுவதால் அது எந்த விதக் கவர்ச்சியையும் தருவதில்லை. ரவிக்கையையே பார்க்கத் தூண்டுமே தவிர ஒன்றுக்கொன்று அழகும் செய்யாது. உயரமான நடுத்தர உடல்வாகு கொண்டவர்களுக்கு மட்டும் இது ஓரளவு பொருந்திப் போகிறது — அதுவும் ஓரளவுக்குத்தான்.

(தொடரும்)



சீரக வெள்ளம்!

தமிழ் மருத்துவத்தில் உடலைச் சீராக்குவது என்னும் பொருளில் 'சீரகம்' என ஒன்றுக்குப் பெயரிட்டனர்.

சீரகத்தை நெல்லியுடன் சேர்த்து மருந்தாக்கிப் பயன்படுத்தினால் காமாலை நோய் தீரும்.

சீரகத்தைப் பொன் வறுவலாக்கித் தூள் செய்து கொதி நீரில் இட்டு பால் அல்லது நெய் சேர்த்துக் காய்ச்சினால் வருவது சீரக வெள்ளம். இதைப் பருகினால் உண்ட உணவு ஜீரணமாகி பசியைத் தூண்டி, உணவுப் பாதையைச் சுத்தமாக்கும். இதனால்தான் கேரள மக்கள் தினமும் சீரக வெள்ளம் பருகின்றனர். வயிற்று நோய் அவர்களுக்கு வருவதில்லை.

சீரகத்தை நல்லெண்ணெயில் இட்டுக் காய்ச்சி தலை முழுகினால் கண் நோய் நீங்கும் தலைவலி அகலும். மந்தம் மடியும்.

சீரகத்துடன் வெங்காயத்தையும் சம அளவு கலந்து அரைத்துப் பசும்பாலுடன் சேர்த்துப் பருகினால் வெட்டைச் சூடு தணியும்.

சீரகத்தையும் உப்பையும் சேர்த்து தின்றால் வயிற்று வலி, நெஞ்சு வலி போகும்.

—கௌசல்யா



சுவையூட்டும் குளிர் பானங்கள்

வெயில் காலத்துக்கேற்ற சில குளிர் பானங்களை இங்கு காணலாம். சில பானங்கள் நாட்பட வைத்திருந்துஅருந்தலாம். சிலபானங்கள் கைவிருப்பில் உள்ள பழம், பால் முதலிய வற்றைக் கொண்டு தயாரிக்கலாம். இங்கு இரு வித பானங்களையும் காணலாம்.

ஸ்குவாஷ் செய்வதில் கவனிக்க வேண்டியவை சில உண்டு. அவற்றைப் பின்பற்றி சகலவித பழங்களிலும் ஸ்குவாஷ் செய்யலாம்.

(1) சர்க்கரையையும் தண்ணீரையும் கொதிக்க விட்டு சிட்ரிக் ஆஸிட் கலந்து இறக்கி ஆறவிட வேண்டும்.

(2) நன்கு ஆறியதும் பழச்சாறு, எசன்ஸ் கலர் கலக்க வேண்டும். (பழச் சாறைச் சேர்த்துக் காய்ச்சினால் வாசனையும் பழத்தின் புதுத் தன்மையும் கெட்டுவிடும்.)

(3) இராசயனப் பொருட்களை சிறிது நீரில் நன்கு கரைத்த பின்னரே ஸ்குவாஷில் கலக்க வேண்டும்.

(4) உடனடியாக ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் நிரப்பி இறுக மூட வேண்டும்.

உதாரணத்திற்கு –

மாம்பழ ஸ்குவாஷ்

மாம்பழக் கூழ் 500 கிராம்
சர்க்கரை ஒரு கிலோ
சிட்ரிக் ஆசிட் 15 கிராம்
மாம்பழ எசன்ஸ் தேவையான அளவு
பொட்டாசியம் மெடா பை சல்பேட் ஒரு சிட்டிகை
தண்ணீர் 500 மில்லி
ஆரஞ்சு கலர் சில துளிகள்

மாம்பழங்களைப் பிழிந்து சாறெடுத்து ஒரு மெல்லிய துணியில் வடிகட்டி எடுத்து எடை போடவும். சர்க்கரையையும் தண்ணீரையும் ஒன்று சேர்த்து மெல்லிய அடுப்பில் காய விடவும். நன்கு காய்ந்ததும் சிட்ரிக் ஆஸிட் கலந்து கொதி வரவிட்டு இறக்கி நன்கு ஆறவிடவும். மாம்பழச் சாறையும் அரஞ்சுக் கலர் மற்றும் எசென்ஸ் இவற்றுடன் சேர்த்து சர்க்கரையில் நன்கு கலக்கவும். பொட்டாசியம் மெடாபை சல்பேட்டை சிறிதளவு நீரில் நன்கு கலந்து ஸ்குவாஷ் உடன் கலக்கவும். ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் நிரப்பி இறுக மூடி வைக்கவும். 2 அல்லது 3 டேபிள் ஸ்பூன் ஸ்குவாஷுக்கு ஒரு டம்ளர் தண்ணீர் கலக்கலாம்.

புளியம்பழ கார்டியல்

புதுப் புளியம்பழம் அரை கிலோ
சர்க்கரை ஒன்றரை கிலோ
தண்ணீர் இரண்டரை லிட்டர்
ஜிஞ்சர் எசென்ஸ் அல்லது லெமன் எசன்ஸ் சில துளிகள்.
டோரேஞ்வின் கலர் சில துளிகள்

புளியம் பழத்தை நீரில் ஒரு மணி நேரம் ஊறவிடவும். பிழிந்து சக்கை, கொட்டை இவற்றை நீக்கவும். மெல்லிய துணியில் வடிகட்டவும். 20 நிமிடங்கள்நன்கு கொதிக்க விட்டு சர்க்கரையைக் கலக்கவும். மேலும் அரை மணி நேரம் கொதிக்க விட்டு வடிகட்டவும். நன்கு ஆறியதும் எசென்ஸ் கலர் சேர்க்கவும். ஒரு டம்ளர் ஐஸ் ஜலத்துக்கு 2 டேபிள் ஸ்பூன் புளியம் பழ ஸ்குவாஷ் விட்டு அருந்தினால் மிக சுவையாக இருக்கும்.

நெல்லி கிரஷ்

கொட்டை நீக்கிய பெரிய நெல்லிக்காய் சாறு ஒரு லிட்டர்
சர்க்கரை 2 கிலோ
தண்ணீர் ஒரு லிட்டர்
லெமன் எசன்ஸ் சில துளிகள்
சிட்ரிக் அமிலம் 30 கிராம்
பச்சைக் கலர் சில துளிகள்
பொட்டாசியம் மெடாபை சல்பேட் 4 கிராம்


நெல்லிக் காய்களைக் கொட்டை நீக்கி இடித்துச் சாறு எடுக்கவும். சர்க்கரை தண்ணீர் சிட்ரிக் அமிலம் இவற்றைக் கொதிக்க வைத்து வடிகட்டி ஆறவிடவும். நெல்லிக் காய்ச் சாறைக் கலந்து கலர் எசன்ஸ் சேர்க்கவும். பொட்டாசியம் மெடாபை சல்பேட்டை சிறு அளவு நீரில் கரைத்து கிரஷ் ஷில் சேர்த்து உடனடியாக ஸ்டெரிலைஸ் செய்த பாட்டில்களில் அடைத்து வைக்கவும். இந்த கிரஷ் சுவையாக இருப்பதுடன் சத்தும் நிறைந்தது.

இனி அடுத்துள்ள அட்டவணைப்படி பழம் சர்க்கரை இவை கலந்து வெவ்வேறு விதமாக ஸ்குவாஷ்களைத் தயாரியுங்கள்.

பொருட்கள்	மாம்பழம்	சாத்துக்குடி	எலுமிச்சை	பைனாப்பிள்	கிரேப்
பழச்சாறு	500 கிராம்	1 லிட்டர்	1 லிட்டர்	1 லிட்டர்	1 லிட்டர்
தண்ணீர்	500 மில்லி	1 லிட்டர்	1 லிட்டர்	1 லிட்டர்	1 லிட்டர்
சர்க்கரை	1 கிலோ	2 கிலோ	2 கிலோ	1800கிராம்	2 கிலோ
எசென்ஸ்	மாம்பழம் எசென்ஸ் சில துளிகள்	ஆரஞ்சு எசென்ஸ் சில துளிகள்	லெமன் எசென்ஸ்	பைனாப்பிள் எசென்ஸ்	கிரேப எசென்ஸ்
கலர்	ஆரஞ்சு சில துளி	ஆரஞ்சு கலர்	பச்சை	மஞ்சள்	டோமேனின் கலர்
சிட்ரிக் அமிலம்	15 கிராம்	30 கிராம்		30 கிராம்	25 கிராம்
இரசாயனம்	பொட்டாசியம் மெடாபை சல்பேட் ஒரு சிட்டிகை	பொட்டாசியம் மெடாபை சல்பேட் 4 கிராம்	பொட்டாசியம் மெடாபை சல்பேட் 4 கிராம்	பொட்டாசியம் மெடாபை சல்பேட் 4 கிராம்	சோடியம் பென்சோட் 4 கிராம்

கொண்டை

1 .கூந்தலை ஷாம்பூ போட்டு அலசி உலர்த்திச் சிக்கில்லாமல் சீவிக்கொள்ளவும்.



2. கூந்தலை மூன்று பகுதிகளாகப் பிரித்துக் கொள்ளவும். காதின் அருகில் முன் பக்கத்திலிருந்து பிரியும் கூந்தலை இரு சிறு பகுதிகளாகவும், மீதிக் கூந்தலை நடுப் பாகமாகவும் வைத்துக் கொள்ளவும். (படம் 2)

3. நடுப் பாகக் கூந்தலைப் படியப் படிய வாரிக் கூந்தலின் அடிப் பக்கமாக இடது கைபுறங்கையை வைத்துக் கூந்தலை 'டைட்டாக' மடக்கிக் கொள்ளவும். (படம் 3)

4. 'டைட்'டாக மடக்கியபின், மேலே மீதியுள்ள கூந்தல் பகுதியை அதைச் சுற்றி கொண்டுவந்து பின் குத்திக்கொள்ளவும்.

5. காதின் இரு பக்கத்திலிருக்கும் கூந்தலை இடப் பகுதியை வலது பக்கமாகவும் வலப் பகுதியை இடது பக்கமாகவும் நடுவில் மடக்கிய கூந்தலின் அடியில் சுற்றிக் கொண்டு சென்று பின் குத்திக் கொள்ளவும். இந்த இரு பகுதிகளையும் சிறிய ரோல் அல்லது வளையமாகவும் போட்டுக் கொள்ளலாம்.



6. இப்பொழுது 'டைட்'டாக மடக்கிய கூந்தல் பகுதியை (படம் 3) தேவையுள்ள அளவு பிரித்துக் கொண்டு பின் குத்திக் கொள்ளவும். பூ அல்லது கிளிப் வைத்துக் கொண்டு மேலும் அழகு செய்யலாம்.

இந்தக் கொண்டை எல்லா வயதினருக்கும் ஏற்றது. அவரவர்கள் முகத்துக்கு ஏற்பக் கொண்டையை ஏற்றி அல்லது இறக்கிப் போட்டுக் கொள்ளலாம்.

(முற்றும்)

5



2



சரஸ்வதி சுந்தரேசன்

4



6



● இல்லத்தரசிகள் தரும் சமையல் குறிப்புக்கள் எங்கள் விருந்தினர்களை மகிழ்வித்து எனக்கு நல்ல பெயரை சம்பாதித்துத் தருகிறது.

பெங்களூர்-21 திருமதி பாபு குமார்

● பலர் பள்ளிப் படிப்பை முடித்துவிட்டு என்ன செய்யலாம் என யோசிக்கும் இந்த நேரத்தில் இதை வெளியிட்டது மிகவும் பாராட்டவும், வரவேற்கவும் தக்கது. பெற்றோர்களுக்கும் தங்கள் வசதிக்கேற்ப பிள்ளைகளைப் படிக்க வைக்க இது உதவும்.

சங்கரன்கோவில் என். குருநாதன்

● விமலா ரமணியின் குறுநாவலில், சியாமளாவின் ஃபிரெண்டு கல்கத்தாவில் இருக்கும்போது பானு ஏன் டில்லிக்குப் பயணமாகிக் கொண்டிருக்கிறாள்?

வேலூர் இராம. குமாரசாமி

● ''சின்னஞ் சிறு வயதில்'' ஒரு மகோன்னதமான படைப்பு. என்னைப் போன்ற எத்தனையோ ஜென்மங்களுக்கு ''நாகு'' ஒரு தார்மீகத் துணை. அர்ப்பணம் என்ற பெயரில் கணவனைப் புறக்கணித்துப் பிறந்த, புகுந்த வீடுகளில் உழைக்கும் ''பானு''க்களுக்கும் தங்கமான புத்திமதி — தண்டனை.

பம்பாய்-52 மணக்கால் வேதமணி

● சுஜாதா மங்கையர் மலரில் தன்னுடைய புதிய பரிணாமங்களைக் காட்டுகிறார் என்றுதான் சொல்ல வேண்டும். அவரே முன்னுரையில் சொன்னது போல இது ஒரு வித்தியாசமான கதைதான். அற்புதம்! இந்த வார்த்தைக்கு மேல் சொல்லத் தெரியவில்லை.

கோயம்புத்தூர் வடுவநாதன்

● 'ஆபீஸில் முதல் நாள் அனுபவம்' கட்டுரைகள் மனதை உருக்கும்படியாக இருந்தன. அதுவும் முதல் பரிசு பெற்றது... ஜெயலட்சுமி சொல்வது போல யாருக்கும் அந்த அனுபவம் வரவேண்டாம். அத்தனை ஆண்களுக்கு நடுவே 'அபார்ஷன்' ஆவது என்றால்... நினைக்கவே நடுங்குகிறது.

ஈரோடு பானுமதி ஸ்ரீதர்

● 'இதற்கென்ன செய்வது?' பகுதி கண்டிப்பாக ஒவ்வொரு பெண்ணும் படிக்க வேண்டிய பகுதி. கேள்வி கேட்கும் நபருக்கு மட்டும் அல்லாமல் பலருக்கும் பயன்படும் வகையில் பதில்கள் அமைந்துவிடுகின்றன. வழக்கறிஞர் தேர்ந்தெடுப்பதும் இதே கண்ணோட்டத்துடன்தானோ?

பழனி ராஜேஸ்வரி

● தினமும் அலுவலகத்துக்குப் போகும் பெண்களைப் பற்றி 'கணேசப்ரியா' எழுதியுள்ள கதை யதார்த்தமானது. வேலையை விடவும் முடியாமல், போகவும் முடியாமல் தவிக்கும் தாயுள்ளங்களைத் துல்லியமாகப் படம் பிடித்துக் காட்டியுள்ளார் ஆசிரியர்.

கும்பகோணம் சரஸ்வதி



இலவசம்!! அரிய வாய்ப்பு!!

ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் இலவசம்!

ரூ. 250-ஐ எம்மிடம் 3 ஆண்டுகளுக்கு நியாயமான வட்டிக்கு முதலீடு செய்பவர்களுக்கு (இந்தியாவில் உள்ளவர்களுக்கு மட்டும்) ரூ. 75 பெறுமான லிப்கோ புத்தகங்கள் முற்றிலும் இலவசமாக உடனடியாக அனுப்பிவைக்கப்படும். முழு விவரங்களுக்கும், விலைப் பட்டியலுக்கும், விண்ணப்பத் தாளுக்கும் எழுதுக.

பயன்தரும் லிப்கோ புத்தகங்களில் சில :

		ரூ. காசு
1.	பத்திரங்களும் ரிஜிஸ்திரேஷனும்	15-00
2.	நாமக்கல் கவிஞர் பாடல்கள்	9-25
3.	என்ன செய்யப் போகிறீர்கள்?	3-00
4.	மஹாத்மாவின் மஹத்வம்	3-00
5.	இயேசுவின் இதயம்	2-50
6.	வள்ளுவர் வாய்மொழி — குறள் மூலம்	1-50
7.	உங்கள் பிறந்த தேதியும் வாழ்க்கை ரகசியங்களும்	3-00
8.	உடல் மச்சங்களும் உங்கள் வாழ்க்கை ரகசியங்களும்	2-00
9.	ஆங்கில ஆசிரியன்	12-00
10.	குழந்தைக்குப் பெயரிடுதலும் சீராட்டுதலும்	1-30
11.	குழந்தை வளர்ப்புக் கலை	5-00
12.	சமைப்பது எப்படி?	4-00
13.	இந்தி ஆசிரியன்	5-80
14.	ஸுந்தர காண்டம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்	14-00
15.	ஸுந்தர காண்டம் — மூலம் தமிழில்	5-60
16.	ஸுந்தர காண்டம் — ஸ்ரீ C.R.S. தமிழ் மொழிபெயர்ப்பு	16-50
17.	ஸகல கார்ய ஸித்தியும் ஸ்ரீமத் ராமாயண பாராயணமும் ஸ்ரீமத் திராவிட வேதங்களும் (ஸ்தோத்ரமாலையுடன்)	9-50
18.	ஸ்தோத்ரமாலை	3-00
19.	கம்ப ராமாயணம் — வசனம்	9-50
20.	ரகுவம்ச மஹாகாவ்யம் 1-19 ஸர்க்கங்கள் — மூலம் ஸம்ஸ்க்ருதத்தில்-உரையுடன்	55-00
21.	ஸ்ரீமத் பகவத் கீதை — மூலம் தமிழில் — உரையுடன்	8-00
22.	ஸ்ரீ தேசிக ஸ்தோத்ரமாலா — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் — உரையுடன்	60-00
23.	மாங்கல்ய ஸ்தவம்	1-50
24.	ஸ்ரீ லக்ஷ்மீநாராயண ஹ்ருதயம்	1-50
25.	ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம் — மூலம் ஸம்ஸ்க்ருதத்திலும் தமிழிலும் (அர்த்தத்துடன்)	10-00
26.	பஞ்ச ஸூக்தங்கள்	0-80
27.	ஸ்ரீ குருவாயூர் அப்பன் ஸுப்ரபாதம்	0-60
28.	ஸ்ரீ முகுந்தமாலா	1-50
29.	பஜ கோவிந்தம்	1-25
30.	கௌரீ கல்யாணம் வைபோகமே	7-20
31.	அபிராமி அந்தாதி — மூலமும் உரையும்	2-00
32.	ஸ்ரீ ஸௌந்தர்யலஹரீ — மூலமும் உரையும்	2-90
33.	ஸகல கார்ய ஸித்தியும் ஸ்ரீ தேவீ பாகவதமும்	4-50
34.	பெரிய புராணம் (சுருக்கம்)	1-50
35.	திருவிளையாடற் புராணம் (சுருக்கம்)	1-50
36.	ஸகல கார்ய ஸித்தியும் சைவத் திருமுறைகளும்	7-50
37.	ஸ்ரீ ஸத்யநாராயண வ்ரதம்	1-20
38.	ஸ்ரீ லக்ஷ்மீ குபேர பூஜாக்ரமம்	0-90
39.	நவக்ரஹ க்ஷேத்ர புராணம்	6-60
40.	திருப்புகழ் மஞ்சரி	2-00
41.	ஆறுமுகனுக்குகந்த ஆறு படைவீடுகள்	7-50
42.	இயற்கை தரும் இன்மருந்துகள்	8-00
43.	குழந்தைக்கு வீட்டு வைத்தியம்	1-00
44.	விரத பூஜா விதானம்	7-20
45.	குடும்ப ஜோதிடம்	7-20
46.	விவாஹ மந்த்ரார்த்தபோதினி	2-50
47.	ரிஷிகளும் கோத்ரங்களும்	6-50
48.	ஸ்ரீ சனிக்ரஹ சாந்தி பூஜா விதானம்	2-00
49.	ஸ்ரீ மஹா பக்த விஜயம்	10-50
50.	தமிழ்-தமிழ்-ஆங்கில அகராதி	13-00

விவரங்களுக்கு :

தி லிட்டில் ப்ளவர் கம்பெனி


43, ரங்கநாதன் தெரு, தபால் பை 1028
தியாகராயநகர், சென்னை-600 017

LIFCO

போன் : 441538

53 ஆண்டுகள் பொன்னான சேவை!

இம்மாத இல்லத்தரசி



(எவர் சில்வர்)

முதல் பரிசு	—	'ராமா' வாட்டர் பில்டர்
இரண்டாவது பரிசு	—	'ராமா' மில்க் குக்கர்
மூன்றாவது பரிசு	—	'ராமா' குடம்
4,5வது, ஆறுதல்பரிசு	—	'ராமா' டிஷ்கள்

முதல் பரிசு

வாழைப் பழப் பை

தேவையான பொருட்கள் :

வாழைப்பழம் 6
2 முட்டையின் வெள்ளைக் கரு
பவுடராக்கப்பட்ட சீனி தேவைக்கேற்ப
நெய் சிறிதளவு
தயாரிக்கப்பட்ட கஸ்டர்ட்


செய்முறை:

வாழைப் பழங்களை நீள நீளமாகக் கீறி நெய்யில் லேசாகப் பொரித்து எடுக்கவும். பொரித்த வாழைப் பழங்களை வரிசையாக அடுக்கவும். கஸ்டர்ட் பவுடரை நன்கு குழைய பாவுக் கலவையாகக் கலந்து பொரித்த வாழைப் பழங்களின் மேல் பரப்பவும். பின் முட்டையின் வெண் கருவையும் சீனி பவுடரையும் நன்றாக அடித்து ஏற்கனவே தயாரித்து வைத்துள்ள கட்டியான கலவைப் பை மீது ஊற்றி நடுத்தரமான சூட்டில் ஒவனில் வைத்து 15 நிமிடம் பேக்பண்ணவும். இதுவே வாழைப்பழப் பை எனப்படும்.

திருமதி புஷ்பராணி
74, பிரதாசனம் ரோடு,
கரூர்

இரண்டாம் பரிசு

வாழைப்பூ சிக்கன் ப்ரெட்




தேவையான பொருட்கள் :

வாழைப்பூ ஒன்று
சிக்கன் கால் கிலோ
சிறிய வெங்காயம் 200 கிராம்
மிளகாய்த் தூள் 2 டீஸ்பூன்
தேங்காய்த் துருவல் ஒரு மூடி
வெள்ளைப்பூண்டு, பட்டை, சோம்பு, கசகசா சிறிது!
பெரிய வெங்காயம் ஒன்று
நெய் 100 கிராம்
பச்சை மிளகாய் 2 அல்லது 3
கறிவேப்பிலை சிறிது, தேவையான உப்பு, கடுகு சிறிது.

செய்முறை:

வாழைப் பூவைச் சுத்தம் செய்து பொடிப் பொடியாக நறுக்கிக் கொள்ள வேண்டும். கறியை (சிக்கன்) மிகவும் சன்னமாகக்கொத்தி வைக்க வேண்டும்.

சிறிய வெங்காயத்தை வதக்கி மிளகாய்த் தூள், தேங்காய்த் துருவல், வெள்ளைப் பூண்டு, பட்டை, கிராம்பு, சோம்பு கசகசா சேர்த்து



பரிசுபெற்ற சமையல் குறிப்புகள்

நைஸாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

சிக்கனைச் சுத்தமாகக் கழுவி மசாலாவுடன் சேர்த்து அளவான உப்பு சேர்த்து வேக வைக்க வேண்டும். பாதி வெந்ததும் நறுக்கிய வாழைப் பூவைச் சேர்த்து நன்கு வேகவைத்துக்கொண்டு, பெரிய வெங்காயம், பச்சை மிளகாய் கறிவேப்பிலையைப் பொடிபொடியாக நறுக்கி, சிறிது நெய் விட்டுத் தாளித்து விட வேண்டும்.

முழு ப்ரெட்டை, 4 அல்லது 5 துண்டாக (தடி.மனாக) வெட்டிக் கொள்ள வேண்டும். ஒவ்வொரு துண்டையும் இரண்டாகப் பாதி வரை வெட்டி சிறிது உள்ளிருக்கும் ரொட்டியை எடுத்துவிட்டு குழிவாகச் செய்து கொள்ள வேண்டும். பிறகு தயார் செய்து வைத்துள்ள வாழைப் பூ சிக்கனை ப்ரெட்டினுள் அடைத்துத் தோசைக் கல்லில் நெய் தடவி இரு புறமும் திருப்பிப் போட்டு ரொட்டிகளைச் சுட்டு எடுக்க வேண்டும்.

ஆர். கலாராணி
3/183 போலீஸ் குவார்ட்டர்ஸ்
ஏ. சி. சி. காலனி,
மதுக்கரை

மூன்றும் பரிசு



வாழைப் போளி

தேவையான பொருட்கள்:

பெரிய வாழைக்காய் 6
மைதா மாவு ஒன்றரை ஆழாக்கு
பெரிய வெங்காயம் 2
பச்சை மிளகாய் 2
சிறிதளவு இஞ்சி
கரம் மசாலா இரண்டு மேசைக் கரண்டி
சிறிதளவு நெய்
தேவையான உப்பு

செய்முறை:

இஞ்சி, பச்சை மிளகாய், வெங்காயம் இவற்றைப் பொடிப் பொடியாய் நறுக்கிக் கொள்ளவும். வாழைக் காய்களைப் பெரும் துண்டங்களாகத் தோலுடன் நறுக்கி நன்கு வேகவைத்துத் தோலை உரித்து, நன்றாக உதிர்த்துக் கொள்ளவும்.

அடுப்பில் வாணலியைப் போட்டு ஒரு மேசைக் கரண்டி நெய் விட்டு மசாலாப் பொடியைப் போட்டுச் சிறிது வறுத்து, நறுக்கிய வெங்காயம், இஞ்சி, பச்சை மிளகாய், உதிர்த்த வாழைக்காய், தேவையான அளவு உப்பு இவற்றைச் சேர்த்துக் கிளறி இறக்கவும். இந்தக் கறியைச் சிறிய உருண்டைகளாக உருட்டி வைத்துக் கொள்ளவும்.

மைதா மாவைச் சலித்து, சிறிது உப்பும் கொஞ்சம் நெய்யும் சேர்த்துத் தண்ணீர விட்டுப் பிசைந்து கொள்ளவும். பிசைந்த மாவில் சிறிது எடுத்து அப்பளமாக இட்டு, உருட்டி வைத்திருக்கும் காயை அப்பளத்தின் நடுவில் வைத்து நன்கு மூடி மறுபடியும் போளி போல் இட்டு, தோசைக் கல்லில் போட்டு இரண்டு பக்கமும் நெய் விட்டுப் பொரித்து எடுக்கவும்.

எஸ். ராஜேஸ்வரி,
சுப்ரமணியன்,
76. வர்ணபுரம் 2வது தெரு
பவானி, பெரியார் மாவட்டம்

ஆறுதல் பரிசு



வாழைப்பழ டாபி

தேவையான பொருட்கள்:

வாழைப்பழம் அரை கிலோ
சர்க்கரை அரை கிலோ



பரிசு வழங்குபவர் : கே. ராமநாதன்

உற்பத்தியாளர்: சக்தி இண்டஸ்டிரியல்ஸ், போன்: 75759, 5, நமீனுர் நாடார் ரோடு, மைலாப்பூர், சென்னை-4.

விநியோகஸ்தர்: ஸ்ரீ துர்கா ஏஜென்சீஸ் 5, நமீனுர் நாடார் ரோடு, மைலாப்பூர், சென்னை-4

விற்பனையாளர்: கே. ராமநாதன் & கோ., 131, ஆர். எச். ரோடு, போன்: 71335 மைலாப்பூர், சென்னை-4.

கே. ராமநாதன் & கோ., 71, உஸ்மான் ரோடு, போன்: 447444 தி. நகர், சென்னை-17.

நெய் 100 கிராம்
பால் பவுடர் 100 கிராம் (இதைச் சிறிது தண்ணீர் விட்டுக் கெட்டியாக பசை போல் செய்துகொள்ளவும்)
குளுகோஸ் பவுடர் 50 கிராம்
முந்திரிப் பருப்பு 10 கிராம்

செய்முறை:

வாழைப்பழத்தை நன்றாக அரைத்து விழுதாக்கிக் கொள்ளவும். பின் அடுப்பில் வாணலியைப் போட்டு சர்க்கரை, அரைத்த விழுது ஆகியவற்றைப் போடவும். நுரை வந்தவுடன் பசை போல் செய்து வைத்த பால் பவுடர், குளுகோஸ் ஆகியவற்றைப் போடவும். நடு நடுவில் நெய் விட்டு விட்டுக் கிளறிக் கொண்டே இருக்க வேண்டும் இதன் நிறம் பிரௌன் கலராக மாறும். நன்றாகக் கெட்டியானவுடன் சிறிது எடுத்து ஆறியபின் ஒரு அலுமினியத்தட்டில் போட்டு அடித்துப் பார்த்தால் டங் என்று சத்தம் வரவேண்டும். இப்படி வந்தால் ஒரு தாம்பாளத்தில் நெய் தடவி டாபியைக் கொட்டி, முந்திரியை அதன் மேல் தூவவும். சிறிது ஆறினவுடன் உங்களுக்கு வேண்டிய வடிவத்தில் நறுக்கவும். வெண்ணெய் காகிதத்தில் சுற்றி எல்லோருக்கும் கொடுக்கலாம்.

—கிரிஜா
6ஏ, குசைபுரம் விரிவு,
திருப்பூர்

ஆறுதல் பரிசு

ஏத்தன் பழப் பிரதமன்

தேவையான பொருட்கள்:

நேந்திரம் பழம் 3
சர்க்கரை அல்லது வெல்லம் அரை கிலோ
தேங்காய் ஒன்று
முந்திரி 50 கிராம்
ஏலம் 6
கிஸ்மிஸ் 50 கிராம்
நெய் 50 கிராம்

செய்முறை:


நேந்திரம் பழத்தைத் தோல் உரித்து வட்ட வட்டமாக வெட்டி ஒரு பாத்திரத்தில் சிறிதளவு தண்ணீர் ஊற்றி வேகவைக்கவும். நன்றாகப் பழம் வெந்தவுடன் கிரை மத்தினால் அல்லது மிக்ஸியினால் மசித்துக் கொள்ளவும்.

பின் தேங்காயைத் துருவி ஆட்டுரலில் இட்டுச் சிறிது தண்ணீர் ஊற்றி நன்றாக முதல் பாலை எடுத்துக் தனியாக வைத்துக் கொள்ளவும். பின் அதே தேங்காய் சக்கையை மறுபடியும் போட்டு முன்னை விடக் கூடுதல் தண்ணீர் ஊற்றி இரண்டாம் பால் எடுத்துக் கொள்ளவும். பின் மறுபடியும் சிறிது கூடுதல் தண்ணீர் விட்டு மூன்றாவது பாலையும் எடுத்துக் கொள்ளவும். மூன்றாவது பால் தண்ணியாக இருந்தால் பரவாயில்லை.

பின் வாணலியை அடுப்பில் வைத்துமசித்த பழத்தில் சர்க்கரை (வெல்லம்) போட்டு நன்றாக அடியில் பற்றாமல் கரைத்துக்கொள்ளவும். சர்க்கரை கரைந்த பிறகு 3வது தேங்காய்ப் பாலை விட்டு நன்றாக கொதிக்க விடவும். பிறகு சிறிதளவு வற்றியதும் 2வது பாலையும் விடவும். அது நன்றாக வற்றியவுடன் வாணலியைக் கீழே இறக்கிவிடவும்.

பின் இறக்கிய பிரதமனில் முதல் பாலை சுற்றி விடவும். பிறகு வாணலியில் சிறிது நெய் விட்டு கிஸ்மிஸ், முந்திரிப் பருப்பை பொன் கலரில் வறுத்து அதன் மேல் போடவும். ஏலக்காயையும் பொடித்து நெய்யும் விட்டு வறுத்துப் போட்டால் மிகவும் வாசமாக இருக்கும்.

—லதா
82 டி 9 லக்ஷ்மி நிவாஸ்
சங்கர் நகர்
திருநெல்வேலி



பருப்பு உசிலி

பருப்பு உசிலி சாப்பிட எல்லோருக்குமே ஆசைதான். ஆனால் பருப்புக்களை ஊற வைத்து அரைத்து அதனை உசிலிக்க நேரம் மிகவும் ஆகும்.

குக்கர் வைக்கும்போதே பருப்புப் பாத்திரத்தில் ஒரு ஆழாக்குத் துவரம் பருப்பு, கடலைப் பருப்பு இவற்றைப் போட்டு லேசாகத் தண்ணீர் தெளித்து, பிரஷர் குக் செய்ய வேண்டியதுதான். இறக்கி ஸ்டீம் அடங்கி யதும் எடுத்துப் பார்த்தால் பொல பொல என்று பருப்பு உசிலியாகி இருக்கும். பின் இதனை எப்போதும் போல எண்ணெயில் உசிலிக்க வேண்டியதுதான். —திவ்யா


"ஸ்..ஸ்..பாரும்மா,
ரொம்ப அரிக்குது..எரியிதும்மா."
உபயோகியுங்கள்
நைஸில்.
உடனடி நிவாரணம்
அளிக்கும்
வியர்க்குரு பவுடர்.
2 தினுசு
டப்பாக்களில்
கிடைக்கிறது
'நீலம்' மற்றும்
'சந்தனம்'.
வாங்குவீர்
நைஸில்
விரட்டுவீர்
வியர்க்குருவை.
மருந்துப் பொருட்கள்
அடங்கிய —நைஸில்:
1. அதிக வியர்வையைத் தவிர்க்கிறது.
2. வியர்வையை உறிஞ்சுகிறது.
3. துர்நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது.
4. சருமத்திற்கு இதமளிக்கிறது.
Glaxo
nycil
CASGLN-4-182 TAM

எப்போதும் பெண்

16

வீட்டில் எல்லா விளக்குகளும் போட்டு எக்ஸிபிஷன் மாதிரி இருந்தது. வாசலில் பனிச்சென்று கோலம் போட்டிருந்தது! காமாட்சி பாயசமும் கேசரியும் பண்ணியிருந்தாள். நொறுக்குத் தீனிக்குத் தேன்குழல் செய்திருந்தாள். அவளுக்கென்று ஒரு அறை பிரத்தியேகமாகத் தயாரிக்கப் பட்டது. புதுசாக குப்பம் க்வில்ட் வாங்கியிருந்தார்கள். பையன்கள் மூன்று பேரும் இப்போதே அவள் பக்கத்தில் யார் படுத்துக் கொள்வது என்று சண்டை போட்டுக் கொண்டார்கள். அவள் வரப் போகிறுள்.

அப்பாவும் ஐ.சி.எஃப். காரரும் சதாசிவத்தின் வீட்டுக்கு டாக்ஸி எடுத்துக் கொண்டு போயிருந்தார்கள். ராகுகாலமில்லாமல் பார்த்துச் சென்றுர்கள். ஜட்ஜ் தீர்ப்பானதும் உடனே குழந்தையை அவர்கள் கையில் கொடுக்கவில்லை. காமாட்சிக்கு இதிலேயே கோபம். மறைமுகமாகத் தகவல் சொல்லி, இன்று நாள் நன்ருக இல்லை. வெள்ளிக் கிழமை அனுப்புகிறேம் என்று சொல்லி அனுப்பினுர்கள். வெள்ளிக் கிழமை உடம்பு சரியில்லை என்று தட்டிக் கழித்தவர்கள் இந்த மாதிரியே போய்க் கொண்டிருந்தால் இப்படியே ஆறு மாசமும் போக்கி விடுவார்கள் என்று காமாட்சியின் நச்சல் பொறுக்க முடியாமல்தான் அப்பா கிளம்பினுர். பக்க பலத்துக்கு ஐ. சி. எஃப். காரர் தேவையாக இருந்தது. ''குடுக்கலேன்னு எனக்குத் தகவல் சொல்லி அனுப்புங்கோ. குடுக்காமப் போயிடுவானா பார்க்கலாம்.''

எதிர்பார்த்தபடி சதாசிவத்தின் வீட்டில் அவர்களுக்கு வரவேற்பு பலமாக இருந்தது. சதாசிவம் சிரித்த முகத்துடன் ''வாங்க உக்காருங்க'' என்று நடுக் கூடத்தில் சோபாவில் உட்கார வைத்தார். அப்பாவைப் பார்த்து அடிக்கடி சிரித்தார். ஐ. சி. எஃப்.காரரை யாரு என்று விசாரித்தார். ''குழந்தையைக் கூட்டிப் போக வந்திங்களா?''

''ஆமாங்க.''

''அழைச்சிக்கிட்டுப் போங்க, அழைச்சுக் கிட்டுப் போங்க. கோர்ட்டில தீர்மானிச்சிருக்கிறத நாம மீற முடியுமா?'' இப்போது பார்வதி அவருடன் வந்து சேர்ந்து கொண்டாள். ''சொல்லிட்டீங்களா?'' என்ருள்.

''இரு, பார்வதி. இப்பத்தான் வந்திருக்காங்க.''

''நீங்க தாராளமா அழைச்சிக்கிட்டுப் போங்க. அதைப் பத்தி எங்களுக்கு எந்தவித ஆட்சேபணையும் இல்லே.''

''பெடுவண்டை பட்டும் செட்டில் பண்ணிடுங்க.''

''எமவுண்டா?''

''இதைப் பாருங்க. இவ்வளவு வருஷமா இதனை வளர்த்ததுக்கு ஆன செலவுக் கணக்கு.''

அப்பா தயக்கத்துடன் அந்த நீட்டமான பட்டியலைப் பார்த்தார். பாபா ஸூட், பால் பவுடர், பேபி கொசுவலை என்று என்ன என்னவோ எழுதியிருந்தது. கடைசியில் கூட்டிப் போட்டிருந்த தொகையைக் கலவரத்துடன் கவனித்தார். பதினெட்டாயிரத்துச் சொச்சம் என்றிருந்தது. அப்பா ஐ.ஸி.எஃப் காரரை ''என்ன ஓய்'' என்று பார்த்தார்.



''தாராளமாக் குழந்தையை அழைச்சிக்கிட்டுப் போங்க. இந்த எமவுண்டை செட்டில் பண்ணிட்டீங்கன்னாப் போதும்.''

''என்ன ஸார் இது? வியாபாரமா?''

''வியாபாரம் எதுவும் இல்லே. நீங்க இத்தனை வருஷமா அவளை வளத்திருந்தீங்கன்னு இந்தச் செலவு ஆகியிருக்குமில்லே?'' என்றாள் பார்வதி.

''அது வேற விசயம்மா'' என்றார் ஐ.வி. எஸ்ப்.காரர். ''அதுக்கு வேணும்னு ஒரு ஸூட்டைப் போட்டு வாங்கிக்கோங்கோ. இப்ப கோர்ட் ஆர்டரை மீர்றது உங்களுக்கு நல்லதில்லே.''

''என்னய்யா நல்லதில்லே? நாங்க என்ன இளிச்ச வாயங்களா? பச்சைக் குழந்தையை இஷ்டப்பட்டபோது கொண்டு தள்ளுவீங்க. இஷ்டப்பட்டபோது திருப்பி வாங்கிப்பீங்க! பிடுங்கிட்டுப் போவீங்க! நாங்க என்ன ஆஸ்டலா நடத்தறோம்? இதுக்கு இத்தனை வருஷமா பீவாரி மூத்திரம் துடைச்சு இதுக்கெல்லாம்....''

''நிசமாச் சொல்லுங்க பார்வதி அம்மா! நாங்க இந்தக் குழந்தையை உங்க கிட்ட தள்ளினோமா? நாக்கில நரம்பில்லாமப் பொய் சொல்றீங்க! நீங்க வந்து திரும்பத் திரும்பக் கெஞ்சிக் கேட்டபோதுதானே தந்தம்? அதே போலத் திருப்பிக் கேட்டாத் தர்றதா நீங்க சொல்லலியா?''

''சொல்லலே'' என்றாள் அழுத்தமாக.

''என்ன ஓய்?'' என்றார் அப்பா.

''நீங்க இவாளோட பேசாதேங்கோ. கோர்ட் ஆர்டரை மீர்றா. கிரிமினல் கேஸ் ஆயிடும்.! இதுக்காக ஜெயிலுக்குப் போகப் போறா. நமக்கென்ன போலீசை வைச்சுத்தான் இறகுபோட வைக்கணும். உம்மகிட்ட ஜட்ஜ்மெண்ட் காப்பி இருக்கில்லே?''

''அதுக்கு அப்பீல் போட்டிருக்கமே.''

''அப்பீலாவது புடலங்காயாவது... ஐகோர்ட்டுக்கு மேலே அப்பீல்னு சுப்ரீம் கோர்ட் போகணும். இந்தச் சுண்டைக் காய் கேஸெல்லாம் சுப்ரீம் கோர்ட் எடுத்துக்காது. வாரும் ஓய். நீர் வாசல்லேயே இரும். நான் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போய் இன்ஸ்பெக்டரைக் கூட்டிண்டு வரேன். இவாளுக்கு மரியாதையா நடந்துக்கத் தெரியாது போல இருக்கு. சந்தி சிரிக்கணும்னு பார்க்கறா. சிரிக்க வைக்கலாம். முனிசிபாலிடி மாதிரி பொண்ணை இழுத்துண்டு போகணும்னு செஞ்சுகர்றது! இத பாருங்கம்மா சுமுகமா இதைச் செய்ய விருப்பமில்லே உங்களுக்கு. எங்க கூட ராஜியா இதச் செஞ்சாக்க உங்களுக்குப் பொண்ணை ஆறு மாசத்துக்குள்ளே ரெண்டு மூணு தடவை கொண்டு வந்து காட்டலாம்னு கூட இருந்தோம். இப்ப ரொம்ப முரண்டு பண்றேள். அந்த சான்சும் போச்சு. வாரும்!''

''இருங்க. இப்ப எங்க போறீங்க?'' என்றார் சதாசிவம். அவருக்குப் போலீஸ் என்றால் ஆகாது. போலீசுக்குப் பயப்பட வேண்டிய பல விஷயங்கள் அவர் வியா



சுஜாதா

பாரத்தில் இருந்தது. வீட்டில் கணக்குக்கு வராத ரொக்கம் நிறைய இருந்தது! அவர் மனச்சாட்சி அவ்வளவு சுத்தமில்லை.

''எங்க போறோம். போலீஸ் ஸ்டேஷனுக்குத்தான்.''

''இருங்க இருங்க. அவசரப்படாதீங்க. இந்தப் பணத்துக்கு என்னதான்சொல்றீங்க?''

சொந்தக் கட்சி ஓங்குகிற தைரியத்தில் ஐ.வி.எஃப்.காரர் ''அதை நீங்க கோர்ட்டில போட்டு கிளெய்ம் பண்ணிக்கோங்கோ. வாரும்.''

''இருங்க.''

''அவங்க போகட்டுங்க'' என்றாள் பார்வதி.

''இரு பார்வதி. உனக்கு ஒண்ணும் தெரியாது. இத பாருங்க. நீங்க சொல்ற மாதிரி இதைச் சுமுகமா வெச்சுக்கலாம். எதுக்கு அநாவசியச் சண்டை? ரெண்டு பேருக்குமே அந்தப் பெண் பேரிலே இஷ்டம். இதுக்கு நீங்க சொல்ற மாதிரி வாரம் ஒரு நா இங்க கொண்டு வந்து விட்டாக்கூடப் போச்சு. என்ன சொல்றே பார்வதி?''

''என்னால் விட முடியாது!''

''தத்துப்பித்துன்னு உளறாதே. போலீஸ் காரங்க வீட்டுக்குள்ளாற வந்து ரகளையாகணுமா? எதுக்கு அது?''

''நானும். மாட்டேன்.''

''பார்வதி இப்படித் தனியா வா'' என்றார் சதாசிவம். அவர்கள் ஹாலை விட்டு விலக,ஐ.வி.எஃப். ''பார்த்தீரா? இந்த மாதிரி தான் சத்தாயிக்கணும'' என்றார்.

இப்போது அவள் ஹாலுக்குள் எட்டிப் பார்த்து ''அம்மா எங்கே?'' என்றாள்.

''வாம்மா'' என்றார் அப்பா. அவள் தன் நிஜத் தந்தையைப் பார்த்தாள்.

''இப்ப என்கூட வரியா?''

''எங்க கூட வரப் போறே.''

''எங்கே?''

''அங்க அண்ணா எல்லாம் இருக்கா. பூனைக் குட்டி. நாய்க்குட்டி. எல்லாம் இருக்கு. விளையாட நிறைய ஃப்ரெண்ட்ஸ் இருக்கா.''

''நேத்திக்கு வரேன்.''

''இல்லேம்மா. இன்னிக்கே வந்தாகணும்'' என்றார் அப்பா.

''இருய்யா. உமக்கு ஒண்ணும் தெரியாது. பொண்ணு! எங்க கூட இப்ப வந்தேன்னா உனக்கு என்ன பிடிக்கும் சொல்லு. சாக்லேட்? உப்புக் கடலை வேணுமா உப்புக் கடலே? மாடு எப்படிக் கத்தும்? ம்பா ஆ! ஆடு? ...ம்மே! குருவி?'' என்று ஐ.வி. எஃப்.காரர் தனக்குத் தெரிந்த இனுசில் மிமிக்ரி பண்ண அவள் சுவாரஸ்யமாகக் கவனித்தாள். அதன் பின் ஐ.வி.எஃப். ஒரு ஸ்டூலில் மறைந்திருந்து வெளிப்பட்ட போது சிரித்தாள்.

''அந்தப் பையன்களெல்லாம் உம் பிரதர்ஸ் உம் பிரதர்ஸ்! நான் உன் அப்பா'' என்று அடிக்கடி அப்பா சொல்லிக் கொண்டிருக்க பார்வதி அழுது கொண்டே வெளியே வந்தவள் சட்டென்று மாடியை நோக்கிச் செல்ல சற்று நேரத்தில் சதாசிவம் வந்து ''அழைச்சிக்கிட்டுப் போங்க. அடுத்த வாரம் ஒரு நாளாவது கொண்டு வந்து காட்டுங்க. உபகாரமா இருக்கும். ரொம்ப அழுறா'' என்றார்.

''போம்மா, அவ சாமான்கள் எல்லாம் அப்பறம் எடுத்துக்கலாம். எல்லாத்தையும் கொண்டு வந்து கொடுக்கச் சொல்றேன். பொண்ணு இவங்க கூடப் போறியாம்மா'

இம்மாத இல்லத்தரசி போட்டி



பொருள் : வேர்க்கடலை.

முடிவு தேதி : 15 - 7 - 82

சமையல் கூபன்

.... என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

ஒரு கூபனுக்கு ஒரு சமையல் குறிப்பே அனுப்ப வேண்டும்.

''அங்க அந்த பாய்ஸ் எல்லாம் இருக்காங்களாம். இனி இருக்காம் இந்த மாமா சொன்னார்.''

அவளுக்கு எதுவும் சரியாகப் புரியவில்லை. அந்த மாமா கூடப் போவதில் அவளுக்குத் தயக்கம் எதும் தோன்றவில்லை. ஏதோ அவர்களுடன் காரில் போய்க் கொஞ்ச நேரத்தில் திரும்பி வந்து விடப் போறோம் என்ற எண்ணத்தில்தான் அவள் போனாள். இன்னொரு மாமாவையும் அவர் செய்யும் வேடிக்கைகளையும் அவளுக்குப் பிடித்திருந்தது. அந்த மாமா அவளைக் கூப்பிடும் விதம் அவளுக்குக் கவர்ச்சிகரமாக இருந்தது. மனத்தின் ஓரத்தில் அந்தப் பையன்களைப் பார்க்கப் போகிறோம் என்கிற நினைப்பும் இதமாகத்தான் இருந்தது.

தயக்கமில்லாமல் அப்பாவின் பின் சென்றாள். சீக்கிரமே திரும்பி வந்துவிடப் போகிறோம் என்னும் எண்ணத்துடன்தான்.

வீடு பூராவும் குதூகலம் ததும்பியது. மது,ரவி, ரகு மூவரும் தமக்குத் தெரிந்த வித்தைகளை யெல்லாம் அவளுக்குக் காட்டினார்கள். மது தலை கீழாக நடந்தான். ரவி தன் கண்டு விரலை வளைத்து மடித்தான் முழங்காலில் நடந்து வேடிக்கை காட்டினான். காமாட்சி அவ்வப்போது இவள் வாயில் பருப்பு சாதத்தை ஊட்டினாள். மது பக்கத்து வீட்டு டாமி நாயை எடுத்துக் கொண்டு வந்து அதன் காதைப் பிடித்துத் தூக்கி அது வீல்வீல் என்று கத்துவதைக்காட்டிகரளை இருக்கிறது என்றான். ரேடியோவைக்கத் தெரியும் என்றான் ரவி. சைக்கிள் ஓட்டத் தெரியும் என்றான் ரகு. சின்னவன் கூடத்திலேயே மூணு சக்கர சைக்கிள் ஓட்டிக் காட்டினான். மூவரும் ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு சண்டை போட்டு கொண்டு ராத்திரி யார் பக்கத்தில் படுத்துக் கொள்ளப் போகிறான் என்ற சர்ச்சை ஏற்பட்டது. மணி பத்து வரைக்கும் அவர்களது கோமாளித்தனங்கள் ரசித்தது. அதன் பின் ''அம்மா எங்கே?'' என்றாள். மது காமாட்சியைக் காட்டினான்.

''அது இல்லை. எங்கம்மா எங்கே?''

''உங்கம்மா இவதான். எங்கம்மாவும் இதான். அப்பா அந்த ரூம்ல இருக்கா.''

இதெல்லாம் புரியாமல் அவள் ''அம்மா கிட்டப் போகணும்'' என்றாள். கொஞ்ச நேரத்தில் ''அம்மா கிட்டப் போகணும்'' என்பதை அடிக்கடி சொல்ல ஆரம்பித்தாள். ஒரு கட்டத்தில் லேசாக அழ ஆரம்பித்தாள். காமாட்சி வந்து அவளை அபரிமிதமாகக் கொஞ்சி ''இத பாரும்மா கண்ணல்ல. இருட்டிப் போச்சோல்லியோ. அதனாலே நாளைக் கார்த்தாலே கொண்டு விடறோம். படுத்துண்டு தூங்கிடுவியாம். ஏண்டா இவளுக்கு காக்கா கதையெல்லாம் சொல்லலாமாடா நரிக் கதை, காண்ட மிருகம் கதை...''

அதெல்லாம் அவளுக்கு இப்போது உறைக்கவில்லை. விசித்து அழ ஆரம்பித்தாள்

சிலருக்கு மூக்கிலிருந்து தண்ணீராகவடியும். சளி இருக்காது. இதை நீர்ச்சளி என்பார்கள்.

சூடாக டிக்காஷன் போட்டு அதில் பால் சேர்க்காமல் சர்க்கரையும் போடாமல் ஒரு கரண்டி தேன் மட்டும் விட்டுக் கலக்கிக் குடித்தால் நீர்ச்சளி நின்று விடும்.

-விஜயா சீனிவாசன்

மூன்று பேரும் அவள் எதிரில் உட்கார்ந்து கொண்டு அவள் அழுவதையே பார்த்துக் கொண்டிருந்தார்கள். சின்னவனுக்குத்தான் அவளுடன் சேர்ந்து அழ வேண்டும் போல இருந்தது. காமாட்சிக்கு நிலைமையை எப்படிச் சமாளிப்பது என்று தெரியவில்லை. அப்பா உள்ளே வந்து அவள் அழுவதைச் சற்று நேரம் பார்த்திருந்து விட்டு ''அழாதேம்மா அழாதேம்மா'' என்று சொல்லிப் பார்த்துப் பிரயோசனமில்லாமல் போய் விட்டார்.

''பேசாமக் கொண்ட விட்டுட்டு கார்த்தாலே கூட்டிண்டு வரலாமா?''

''நாளைக்கும் இதே பிராப்ளம்தான் வரும். எப்படியும் இதைச் சமாளிச்சாகணும்.''

அவள் இப்போது பயம் கலந்து அலற ஆரம்பித்தாள். அப்பா சன்னலைச் சார்த்தி ''பேசமரு!'' என்று அதட்ட இரைச்சல் அதிகமாகி விட்டது.

''அவசரப்படாதிங்கோ. ஆரம்பத்திலயே பயம் காட்டாதேங்கோ. அப்புறம் ஒட்டவே ஒட்டாது. ஏய் மது நீ போய் அவாத்துக்குப் போய் இவ அம்மாவைக் கூட்டிண்டு வாடா போடா!''

''ஊம் நான் மாட்டேன்'' என்ற மது வைப் பார்த்துக் கண்ணைக் காட்டினாள். மது, ''சரி, அப்படியே ஆகட்டும்மா'' என்று சைக்கிளைத் துடைப்பவன் போலவும் காத்தடிப்பவன் போலவும் பாசாங்கு செய்து நேரம் தாழ்த்தினான். அவன் செய்கைகளையும் சற்று நேரம் அழுகையை மறந்து பார்த்துக் கொண்டிருந்தாள். மறுபடி அழ ஆரம்பித்தாள். இப்போது கரத்து அதிகமாக இருந்தது. என்ன செய்யலாம்? வாசலில் போய் கன்னத்தில் கையை வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள்.

''அம்மா வருவா வருவா'' என்று சொல்லிக்கொண்டே அதை மெல்ல சமாதானம் செய்து தூக்கம் வரும் வரை சமாளித்துவிடலாம் என்று பிரயத்தனப்பட்டபோது வீட்டு வாசலில் கார் வந்து நின்றது. (தொடரும்)

திருமண மலர்

இப் பகுதியில் திருமண விளம்பரம் செய்ய கட்டணம் ரூ. 20/- மட்டுமே. தொகையை 'மங்கையர் மலர்' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராக மட்டுமே அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒருவருக்கு மட்டுமே. 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். பதில் அனுப்புபவர்கள் பெட்டி எண்ணுக்கே அனுப்பவேண்டும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது.

சோழியவேளாளர். பி.ஏ. படித்து அரசாங்க வேலையில் ரூ. 500 சம்பாதிக்கும் 24 வயதுப் பெண்ணுக்கு அரசாங்க அல்லது வங்கி வேலையில் உள்ள அதே வகுப்பைச் சேர்ந்த வரன் தேவை.

பெட்டி எண் 381

நல்ல உயரமும் அழகும் சொத்தும் உடைய அரசு வங்கியில் வேலை பார்க்கும் சைவ வேளாள பிள்ளை பட்டதாரி வரனுக்கு. சைவ வேளாள பிள்ளை, முதலியார், செட்டியார் குலத்திலிருந்து வசதி மிக்க அல்லது வேலை பார்க்கும் மணமகள் தேவை. முழு விவரங்களுடனும் தொடர்பு கொள்க.

பெட்டி எண் 382

ஔபமன்ய கோத்ரம், வாத்யமா, பட்டதாரி, கேரள ஐயர் வகுப்பைச் சேர்ந்த 28 வயது பேங்கில் உத்தியோகம் பார்க்கும் பெண்ணுக்கு படித்த, நல்ல வேலையில் இருக்கும் மணமகன் தேவை.

பெட்டி எண் 383

33 வயது வடமான் பையன் பி.யூ.சி. பம்பாயில் மாதம் ரூ. 1000 சம்பளம். சொந்த (தகப்பனார்) ஃப்ளாட்டில் வாசம். பம்பாயிலோ அல்லது அங்கு மாற்றலாகக் கூடிய வேலையிலோ உள்ள பெண் தேவை. ஜாதகம், விவரம் அனுப்ப வேண்டியது

பெட்டி எண் 384

28 வயதுள்ள அழகான சைவ வேளாள பிள்ளை வகுப்பைச் சேர்ந்த எம்.எஸ்ஸி படித்த பெண்ணுக்கு சைவ வேளாளப் பிள்ளை இனத்தைச் சேர்ந்த மணமகன் தேவை. ஜாதகம் இருந்தால் அனுப்பவும்.

பெட்டி எண் 385

பாரத்வாஜ கோத்ரம், தமிழ் வடமான் பிரிவைச் சேர்ந்த மனைவியை இழந்த 8, 10 வயதில் இரண்டு குழந்தைகளை உடைய, மாதம் ரூ. 1800 வருமானம் உள்ள 39 வயதுடைய மத்திய சர்க்கார் ஆபீஸருக்குப் பொருத்தமான மணமகள் தேவை, ஏழ்மை பொருட்டல்ல. ஆசிரியர் பயிற்சி பெற்ற பெண்ணாயிருந்தால் நலம். ஆனால் கட்டாயமில்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 386

29 வயது எம். எஸ்ஸி பட்டதாரி. அஸிஸ்டண்ட் மானேஜராக தேசிய மயமாக்கப்பட்ட பாங்கில் பணி புரியும் பெண் விசாகம் நட்சத்திரம். ஆத்ரேய கோத்ரம். வடமாள். தகுந்த மணமகன் தேவை. ஜாதகம். குடும்ப விவரம் அனுப்பவும்.

பெட்டி எண் 387

சோழிய வேளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த மத்திய அரசு நிறுவனத்தில் ரூ. 900 மாத வருமானமுள்ள செல்வாய் தோஷமுள்ள குடும்பத்தில் ஒரே பையனான வரனுக்குப் பொருத்தமான மணமகள் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 388

31 வயது நிரம்பிய வடமான் சங்க்ருத கோத்ரத்தைச் சேர்ந்த பெண்ணுக்கு அதே பிரிவை அல்லது வேறு பிரிவுகளைச் சேர்ந்த மாப்பிள்ளை தேவை.

பெட்டி எண் 389

வடமாள் ஆத்ரேய கோத்ரம், வயது 35 தனியார் கம்பெனியில் டைப்பிஸ்ட் மூன்று வருஷமாக தற்காலிகம், கூடிய சீக்கிரம் வேலை நிரந்தரமாக வாய்ப்புள்ளது. பாங்க் வட்டிக்கு மாதம் சுமார் ரூ. 400 கிடைக்கும் மூலதனமும், சொந்த வீடும் உள்ள சென்னையிலிருக்கும் பையனுக்கு 26-27 வயதுக்கு பெ[illegible] படாமலும், சென்னையில் நிரந்தரமான வேலை இருக்கக் கூடிய பெண் தேவை. ஜாதகம் இல்லை.

பெட்டி எண் 390

37 வயது நிரம்பிய வடமாள், கௌசிக கோத்ரம், பூராடம், அரசாங்க வேலையில் (சம்பளம் ரூ. 450) ஐயர் குடும்பத்தைச் சேர்ந்த பையனுக்கு வேலை பார்க்கும் பெண் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். உட்பிரிவுகள் வேறு இருந்தாலும் பரவாயில்லை.

பெட்டி எண் 391

கௌசிக கோத்ரம், வடமாள், சுவாதி நட்சத்திரம், வயது 30. பிரபல வங்கியில் ரூ. 1300 சம்பாதிக்கும் கால் ஊனமுள்ள எம். ஏ. பட்டதாரிக்கு அதே வகுப்பைச் சேர்ந்த படித்த, குடும்பப் பாங்கான மணமகள் தேவை. விவரங்களுடன் ஜாதகம் அனுப்பவும்.

பெட்டி எண் 392

இந்து நாயுடு பி.ஏ. 31 வயது. சொந்தத் தொழிலில் நல்ல வருமானமும் வசதியும், சொத்தும் உள்ள ஒரே மகனுக்கு நல்ல வசதியுள்ள நல்ல குடும்பத்து படித்த பண்புள்ள நாயுடு மணமகள் தேவை.

பெட்டி எண் 393

வயது 30, டைப்ரைட்டிங் பான், படிப்பு பி.யூ.சி. வேலை இல்லாமல் இருப்பவர், 500 ரூபாய்க்கு மேல் சம்பளம் கிடைக்கும்படியான வேலை போட்டுத் தருபவரின் பெண்ணை வரதட்சணை இன்றி மணப்பார். கார்கேய கோத்ரம், தமிழ் பிரஹசரணம்.

பெட்டி எண் 394

கார்காத்த சைவ வேளாளர் குடும்பத்தில் பிறந்த, அடக்கமும், பண்பும் நிறைந்த 23 வயதுள்ள பெண்ணுக்கு மேற்படி இனத்தைச் சேர்ந்த அதிகம் எதிர்பார்க்காத, வேலையில் உள்ள அல்லது வருவாய் உள்ள மணமகன் தேவை. பெண்ணின் படிப்பு குறைவு. பெண்ணுக்கு ஜாதகம் இல்லை.

பெட்டி எண் 395

தெலுங்கு ஐயர் 30 வயதுள்ளசாஸ்திரீய சங்கீதம், நடனம் ஆகியவற்றில் தொழில் முறைத் தேர்ச்சி பெற்று வசதியுடன் உள்ள பெண்ணுக்கு கண்ணியமான உத்தியோகத்திலுள்ள கௌரவமுள்ள குடும்பத்தைச் சேர்ந்த 35 வயதிலிருந்து 40 வயதுக்குள்ளான வரன் தேவை. பிராமண இனத்தைச் சேர்ந்த எந்தப் பிரிவினரும் விண்ணப்பிக்கலாம்.

பெட்டி எண் 396

மிருகசீர்ஷம், ஆத்ரேய கோத்ரம், பிரஹசரணம், ஐயர் பி.காம் பட்டதாரி, 25 வயது. குஜராத்தில் மிக உயர்ந்த சம்பளத்தில் பணிபுரியும் பையனுக்குப் பொருத்தமான இசை ஞானமுள்ள, வேலையில் இல்லாத பெண் தேவை. டௌரி இல்லை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 397

36 வயது, டிப்ளமா படிப்பு, சொந்த பிஸினஸில் ரூ. 1000 மாத வருமானமுள்ள வாணிய செட்டியார் மணமகனுக்கு அதே இனத்தில் படித்து வேலை பார்க்கும் அழகும், குணமும் உள்ள வசதியான குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. போட்டோ, விவரங்களுடன், அணுகவும்.

பெட்டி எண் 398

35 வயது, கௌசிக கோத்ரம், உத்திர நட்சத்திரம், வடகலை, அய்யங்கார் வகுப்பைச் சேர்ந்த எஸ். எஸ். எல். சி. படித்துத் தனியார் கம்பெனியில் வேலை பார்க்கும் பெற்றோர் இல்லாத பெண்ணுக்கு வயது 40க்குள் ரூ.600 சம்பாதிக்கும் சென்னையில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. தென் கலையானாலும் பரவாயில்லை.

பெட்டி எண் 399

ஐயர் வடமாள் பரத்வாஜ கோத்ரம், ஆயில்யம் 1ம் பாதம். வயது 22 பி. எஸ்ஸி. படித்த பெண்ணுக்கு சுத்த ஜாதகமுள்ள பட்டதாரி மணமகன் தேவை. பெண் வாய்ப்பாட்டு, சித்திரம், தையல், சமையல் கலைகளில் தேர்ச்சி பெற்றவள். ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 400

எஸ்.எஸ்.எல்.சி. படித்து டைப் அறிந்திருக்கும் வேலையில்லாத 33 வயதாகும் கௌசிக கோத்ரம் ஐயர் பெண்ணுக்கு வரன் தேவை. சகோதரர்கள்: 35 வயது பி.யு.சி. ஆபீஸ் அஸிஸ்டெண்ட், பம்பாயில் ரூ. 1300 சம்பளம்; 28 வயது எம்.எஸ்ஸி., பம்பாயில் காலேஜ் லெக்சரர், ரூ. 1400 சம்பளம். இவர்களுடன் பெண் கொடுத்து பெண் பெறவும் தயார். பெண்ணுக்கு மட்டுமோ அல்லது இருவருக்குமோ எழுதவும்.

பெட்டி எண் 401

பாரத்வாஜ கோத்ரம், வடமாள் ஐயர் வயது 35. திருவோண நட்சத்திரம் செகண்டரி கிரேடு ஆசிரியராக வேலையில் உள்ளவருக்கு வேலையில் உள்ள பெண் தேவை. மதுரை, ராமநாதபுரம் ஜில்லாவில் உள்ளவர்கள் ஜாதகம், படத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 402

ஸ்டேட் பாங்க் வேலையில் இருக்கும் 29 வயது ஆதி திராவிட பி.ஏ. படித்த பையனுக்கு அதே இனப் பெண் தேவை. பெண் ஆரோக்கியமாக, பார்க்க லட்சணமாக, பண்புள்ள குடும்பத்திலிருந்து 19 முதல் 26 வயதுக்குள் இருப்பது நல்லது. முழு விவரங்களுடன் ஜாதகம், புகைப்படம் அனுப்பவும்

பெட்டி எண் 403

தஞ்சை மாவட்ட சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 24 வயதுள்ள பி.எஸ்ஸி. படித்த வசதியுள்ள குடும்பப் பெண்ணுக்கு நல்ல, வசதியுள்ள, மற்றும் நல்ல வேலையில் அல்லது சுய தொழில் புரியும் படித்த மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும்.

பெட்டி எண் 404

பாரத்வாஜ கோத்ரம், பிரஹசரணம், மூலம் நட்சத்திரம், இரண்டாம் பாதம், செகந்திராபாத்தில் பணிபுரியும் 27 வயது பி. காம். 160 செ.மீ. பெண்ணுக்குத் தகுந்த ஐயர் பட்டதாரி மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம்.

பெட்டி எண் 405

ஸ்ரீவத்ஸ கோத்ரம், அய்யர் வடமான், உத்திரம், மத்திய அரசில் வேலை, வயது 30, பி.ஏ. சம்பளம் ரூ. 800. 7ல் செவ்வாய் உள்ள பெண்ணுக்கு மணமகன் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். மணமகன் பங்களூரிலேயே இருந்தால் நலம். விபரங்களுடன் ஜாதகம் அனுப்பவும்.

பெட்டி எண் 406

30 வயது பிரஹசரணம், ஷடமர்ஷண கோத்ரம், மிருகசீர்ஷ நட்சத்திரம், தனியார் துறையில் பணி புரியும் ஐயர் பெண்ணுக்கு தகுந்த 34 வயதுக்குட்பட்ட சென்னையில் தனியார் துறை அல்லது அரசாங்கத் துறையில் பணி புரியும் மணமகன் தேவை. எளிய முறையில் திருமணம் நடத்தப்படும். உட்பிரிவுகள் சம்மதம்.


பெட்டி எண் 407

31 வயது எம்.ஏ., பிஎட்., சென்ட்ரல் ஸ்கூல் ஆசிரியை. ரூ. 900 சம்பளம். மிக மிக குறுகிய கால மண வாழ்வின் பின் விவாகரத்துப் பெற்ற பிரஹசரணப் பெண்ணுக்கு மணமகன்தேவை. குறைந்த படிப்பு, சம்பளம், மனைவியை இழந்தவர், விவாகரத்து செய்தவர், உப பிரிவுகள் தடையில்லை.

பெட்டி எண் 408

மாநில அரசில் சென்னையில் பணி புரியும் ரூ. 1000 சம்பளமும் திண்டுக்கல்லில் ரூபாய் ஒன்றரை லட்சம் விவசாய சொத்தும் இந்து பல்லர் (எஸ்.சி.) 29 வயது (எம்.ஏ.) பட்டதாரி மணமகனுக்கு, பணிபுரியும் நல்ல குணமுள்ள மணமகள் அதே இனத்திலோ அல்லது மற்ற இனத்திலோ தேவை. வசதி இல்லாதவராக இருந்தாலும் பரவாயில்லை.

பெட்டி எண் 409



மசாலா சாப்ஸ் ஃப்ரை

தேவையான பொருட்கள்:

மட்டன் ஒரு கிலோ
வெங்காயம் 4 (பொடியாக நறுக்கியது)
இஞ்சி 2 பெரிய துண்டுகள் (துருவியது)
மிளகு ஒரு டீஸ்பூன்
பட்டை 2 செ.மீ. அளவு
ஏலக்காய், கிராம்பு வகைக்கு நாலு
உப்பு, தண்ணீர் தேவையான அளவு
கொத்துமல்லி இலை ஒரு கட்டு
புதினா இலை ஒரு கட்டு
முட்டைகள் 3 (நன்கு அடித்தது)
வேகவைத்து மசித்த உருளைக் கிழங்குகள் 4
பொடி செய்த மிளகு ஒரு டீஸ்பூன்
பொடி செய்த கடுகு ஒரு டீஸ்பூன்
மிளகாய்ப் பொடி தேவையான அளவு
பால் அரை கப்
பச்சை மிளகாய்8 (பொடியாக நறுக்கியது)
பொரிக்க எண்ணெய்

செய்முறை:

மட்டனைக் கழுவி துருவிய வெங்காயம், இஞ்சி மற்றும் ஏனைய மசாலாக்களுடன் உப்பும் தண்ணீரும் அளவாகச் சேர்த்து வேக வைத்து நீரை வற்ற விடவும்.

கொத்துமல்லி, புதினா இலைகளைக் கழுவி சுத்தப்படுத்தி மிகப் பொடியாக நறுக்கவும். பச்சை மிளகாயையும் நறுக்கவும். உருளைக் கிழங்குகளை நன்கு மசித்து அதனுடன் புதினா, கொத்துமல்லி, மிளகாய், மிளகுப் பொடி., கடுகுப் பொடி., மிளகாய்ப் பொடி இவற்றை நன்கு கலக்கவும். முட்டைகளை நன்கு அடித்து உருளைக்கிழங்கு கலவையில் கலந்து தேவையான அளவு உப்பு சேர்த்து பாலும் விட்டுக் கெட்டியாக பஜ்ஜி மாவு போல் கலந்து கொள்ளவும்.

இந்தக் கரைசலில் வேகவைத்த மட்டன் துண்டுகளை முக்கிக் கொதிக்கும் எண்ணெயில் பொரித்து எடுக்கவும். இந்த சாப்ஸைக் கொத்துமல்லி இலை, மற்றும் வட்டமாக நறுக்கிய வெங்காயங்களால் அலங்கரிக்கலாம்.

—வைதேகி

வெங்காய வழக்கு

மீரா ராகவன்

பூமாலை மலர்



"ஏதுமோ போ. நான் எவ்வளவு பச்சையாக இருக்கேன். இருப்பினும் சீக்கிரம் காய்ந்து விடுகிறேன்" என்றது கீரை.

"ஆமாம். உனக்கு வைட்டமின் அதிகம் தான். உன்னைச் சாப்பிட்டால் கண் தொந்தரவு கிடையாது. என்ன பயன். நீதான் காய்ந்து விடுகிறாயே. என்னைப் பார்" என்றது வெண்டைக்காய்.

"உனக்கு என்ன. உன்னைச் சாப்பிட்டால் மூளை வளரும். கணக்கு நன்றாக வரும். ஆனால் உன் குழகுழப்பு! சீ. அதான் பிடிக்காது. என்ன இளமை இருந்து என்ன பயன்? என் உடல் எவ்வளவு நீளம் பார்த்தாயா!" என்றது – புடலங்காய்.

"ஏ. பாம்புக் காயே! உன்னை விஷம் தீண்டினால் கசந்து விடுவாய். ஆனால் உன்னைச் சாப்பிட்டால் தோல் வியாதியே வராது என்பது உண்மை. என்ன பயன். காற்று அடித்தால் ஒடிந்து விடுவாய். என் கலர் பார்த்தாயா!" என்றது தகதக தக்காளி.

"ஆமாம். உனக்கு வைடமின் அதிகம். உடம்புக்குக் குளுமை. அது என்னமோ உன் ருசி தனிதான். ஆனால் நான் மேலே விழுந்

தால் நீ என்ன ஆவாய்?'' என்று கேலி செய்தது பூசணி.

எல்லாக் காய்களும் விழுந்து விழுந்து சிரித்தன. ''ஏய் பூசணி! நீ பார்க்கத்தான் குண்டாக இருக்கிறாய். உன் உடம்பை வெட்டினால் நீராகப் போய்விடும். என்ன பயன்? என்னைப் பார். என் உடல் கலர் பார்!'' என்றது பீட்ரூட்.

''அடாடா! வாங்க சிகப்பு ராஜா! உன்னை உண்டால் ரத்தம் பெருகும். உடலுக்கு நல்லதுதான். ஆனால் உன் கலர் தொட்டாலே பிடிக்கவில்லை.'' என்றது சேனைக் கிழங்கு.

''ஐயா, சேனையாரே! உன்னிடம் பத்து வைட்டமின் சத்து இருப்பது உண்மைதான். ஆனால் உன் தோற்றமே பிடிக்கவில்லை. நான்தான் உசத்தி'' என்றது வெங்காயம். ''நான் இல்லாமல் எந்தப் பதார்த்தத்திலும் ருசியில்லை. நானே காய்கறிகளின் ராஜா!'' என்றது.

''போதுமே! உன்னை உரித்தால் என்ன வரும்? உறிக்க உறிக்க உறிந்தே விடுவாய் நீ'' என்று ஏளனமாகத் தள்ளி விட்டது பாகற்காய். ''என்னைப் பார். என் கலர்என்ன அழகு என்ன! என்னைவிடச் சிறந்தவர் யார்?'' என மற்ற காய்கறிகளையும் எட்டி உதைத்தது. மற்ற காய்கறிகளும் சேர்ந்து சண்டை போட்டன.

எல்லாம் காட்டுக்குச் சென்று தவம் செய்தன. பாகற்காயும் வெங்காயமும் கடைசி வரை தவம் செய்தன. விஷ்ணு பெருமான் தோன்றி ''என்ன வேண்டும்?'' என்றார்.

உடனே பாகற்காய், ''அப்பனே! எந்தக் காய்கறியும் அடையாத சக்தி எனக்கு வேண்டும். எல்லோரும் என்னையே உண்ண வேண்டும். மற்றவை அழிய வேண்டும்'' என்றது.

''இதோ பார், உனக்கு இருக்கும் ஆணவத்தால் நீ கசப்புத் தன்மை அடைவாய். ஆனால் மற்றவை அழிய வேண்டும் என்று நினைப்பதால் உனக்குக் கசப்புத் தன்மை விலகாது'' என்றார்.

அப்போது வெங்காயம் அவரைப் பணிவாக வணங்கியது!. விஷ்ணு, ''வெங்காயமே! நீ ஏழைகளின் நண்பன். நான் உன்னிடம் என்றும் இருப்பேன். உன்னை வெட்டிப் பார்த்தால் சங்கு சக்கரம் தோற்றம் தெரியும். உன்னை அடைய வேண்டுபவர்கள் கஷ்டப்பட்டு கண்ணீர் விட்டு அடைவர். ஆம், ஆண்டவனிடம் சேரக் கஷ்டப்பட்டுத்தான் சேர வேண்டும். நீ என்றும் அழியாப் புகழ் பெறுவாய். குளுமையான சக்தி, எளிமையான தோற்றம் பெறுவாய். உன்னால் பல விதத்தில் உபகாரம் உண்டாகட்டும்'' என்று கூறினார்.

ஆமாம். வெங்காயத்தைக் குறுக்கு நெடுக்காக வெட்டிப் பாருங்கள். சங்கு, சக்கரம் தெரியும். இதனால்தான் விசேஷ காலங்களிலும், பண்டிகை காலங்களிலும் சிலர் இதை உண்பது இல்லை. சில வைணவர்கள் இதை உண்ணாததற்கும் இதுதான் காரணம்.

''ஹாட் பாக்'' செய்வோமா?

இப்பொழுதெல்லாம் உணவு வகைகள் சூடு ஆறாமலிருக்க பலவித ஹாட் பாக்குகள் மார்க்கெட்டில் கிடைக்கின்றன. ஆனால் விலை எல்லோருக்குமே கட்டுபடியாகக் கூடியதல்ல.

இதோ பத்து ரூபாய் செலவுக்குள் நாமே தயாரித்துக்கொள்ளக்கூடிய ஹாட்பாக்!

முதலில் தேவையான சைஸில் ஒரு கள்ளிப் பெட்டி எடுத்துக் கொள்ளவும். அடுத்தது அதைவிட எல்லா அளவுகளும் 3'' பெரியதாக இருக்கக் கூடிய இன்னொரு கள்ளிப் பெட்டி எடுத்துக் கொள்ளவும். இந்த இரு மரப் பெட்டிகளுமே பலகைகளுக்கு நடுவே இடைவெளி இன்றி நெருக்கமாக இருக்க வேண்டும். (ஆசாரியிடம் செய்து கொள்ளலாம்)

இனி சுத்தமான வைக்கோல் எடுத்துப் பொடியாக நறுக்கி பெரிய பெட்டியின் உட்புறம் இரண்டரை அங்குலம் கனத்திற்கு அடர்த்தியாகச் சமமாகப் பரப்பவும். அதன் மேல் நடு மையத்தில் சிறிய பெட்டியை வைத்து – இரண்டு பெட்டிகளுக்கும் நடுவே உள்ள இடைவெளியை (நான்கு புறமும்) நறுக்கிய வைக்கோல் துண்டுகளால் கெட்டித்து இறுக்கி அடைக்கவும்.

இப்போது பெட்டிகளின் இடைவெளியில் 4 பக்கமும் வைக்கோல் இருக்கும். 3'' அங்குல அட்டையை நீளத் துண்டு (4) வெட்டி சிறு ஆணிகளால் பொருத்திவிட வைக்கோல் தெரியாது. அவ்வளவுதான். ஹாட் பாக் ரெடி.

இதனுள் சமைத்தவைகளை (உள் பெட்டியில்) வைத்து மேலே ஒரு கனமான விசுப் பலகையை இடைவெளியின்றி மூடிவிட்டால் சூடு பல மணி நேரம் ஆறாது. வசதியிருந்தால் மூடியும் ஆசாரியிடம் கொடுத்துச் செய்து கொள்ளலாம். மூடிப் பலகை கனமாக இறுக்கமாக இருக்க வேண்டும்.

இனி பெட்டியின் வெளிப்புறம் பிரிண்ட் செய்த பார்சல் பேப்பர் அல்லது அழகிய படங்கள் போட்ட பேப்பர்களைப் பெட்டி தெரியாமல் ஒட்டிவிட்டால் பார்க்க வெகு ரம்யமாக கம்பீரமாக இருக்கும்.

பட்டம்மாள்,

மழலைக் குறும்பு

● என் பேத்திகீதாவுக்கு இரண்டு வயது.மிக வும் கெட்டிக்காரி. ஒன்றரை வயதிலிருந்தே நிறையப் பேசுவாள், சொல்லிக் கொடுத்த மாதிரி பேச்சு. சிலசமயம் பதில்கூட நமக் குச் சொல்லவராது.

ஒரு நாள் நான் ஒரு கல்யாணத்துக்குப் போவதற்காக நிறைய நகைகள் போட்டுக் கொண்டு என் பெண் வீட்டுக்குப் போனேன். கீதா ஏற இறங்க என்னையும் நகைகளையும் பார்த்தாள். பிறகு என் பக்கத்தில் வந்து நகைகளைத் தொட்டுத் தொட்டுப் பார்த் தாள். உடனே நான் அவளிடம், ''கீதா உனக்கு இதெல்லாம் பிடித்திருக்கிறதா?'' என்று கேட்டேன். அதற்கு அவள், ''ஆமாம், நீ எனக்கு இதெல்லாம் தரயா?'' என்று தலையை ஆட்டி ஆட்டிக் கேட்டாள்.

நான் வேடிக்கையாக, ''இதெல்லாம் என் கணவர் எனக்குச் செய்து கொடுத்தது. உனக்கும் கல்யாணம் ஆன பிறகு உன் புரு ஷன் இதே மாதிரி செய்து தருவான்'' என் றேன்.


என் பதில் அவளுக்கு என்னமோ மாதிரி இருந்தது போலும். ஒரு மாதிரி முகத்தை வைத்துக் கொண்டு போய்விட்டாள். ஆனால் நான் சொன்ன பதில் என்னையே திருப்பி யடிக்கப் போகிறது என்பது அப்போதுஎனக் குத் தெரியாது.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு ஒரு நாள் அவர்கள் வீட்டுக்குப் போனேன். அப்போது அவள் சாக்லேட் தின்று கொண்டிருந்தாள். விளையாட்டுக்காக ''கீதா, எனக்கு சாக் லேட் தரயா?'' என்றேன். டக்கென்று சொன்னாளே பார்ப்போம்!

''உன் புருஷன் வந்து உனக்கு வாங்கித் தருவான்!'' என்று. சிரிப்புத் தாங்கவில்லை எனக்கு. நானும் என் குடும்பத்தாரும் வயிறு வெடிக்கச் சிரித்தோம்.


ஸ்ரீமதி மீனாட்சி சங்கரன்

● என் நான்கு வயது மகன் கிரன்குமார் செய்யும் குறும்புத்தனமான அடம் சொற் களில் அடங்காதவை.



கீதா

ஒரு நாள் அவன் வீட்டிலே செய்த இனிப்புப் பலகாரங்கள் அதிகம் கொடுக்க வேண்டும் என்று அடம் பிடித்தான். திடீர் என்று தரையில் படுத்துப் புரள ஆரம்பித் தான். அன்று சலவை செய்த ஆடைகளை அணிந்து இருந்தான். எப்படி இவனைச் சமாதானப்படுத்தி அழுகையை நிறுத்துவது என்று புரியவில்லை. ஒரு யோசனை. அவ னுடைய சட்டை அழுக்கானால் அவனுக்குப் பிடிக்காது. எப்போதும் சுத்தமாக வைத் திருப்பான். எனவே, ''டேய், கிரன் உன் னுடைய சட்டை யெல்லாம் மண்ணாகிவிட் டது பார். எழுந்திரு எழுந்திரு''என்று கூற அவன் திடீரென்று அழுகையை நிறுத்திவிட்டு அடுத்த அறைக்கு ஓடினான். எதற்கு அடுத்த அறைக்கு ஓடுகிறான் என்று புரியாமல் அவன் செய்கையைப் பார்த்துக் கொண்டிருந்தேன். அவன் உடனே ஒரு படுக்கும் பாயைக்- கொண்டு வந்து ஹாலில் விரித்து விட்டு மீண்டும் புரண்டு அழ ஆரம்பித்து விட் டான்! அன்று இனிப்பு அதிகமாகக்கொடுத்த பிறகே அழுகையை நிறுத்தினான். கிரனுடைய விளையாட்டு நண்பர்கள் அவனை ''குறும்புக் கிரன்'' என்றே அழைக்கிறார்கள்.



கிரன்

திருமதி இந்திராணி காந்திராஜன்



குழந்தைக்கு மிகவும் சிறந்தது தாய்ப்பால்.

முலைப்பால் குழந்தைக்கு மிகவும் சிறந்தது—ஏன்?

தூய்மையானது, கிருமிகளற்றது, குழந்தையின் ஜீரண முறைக்கு நூற்றுக்கு நூறு உகந்தது—தாய்ப்பால். பலவித நோய்களையும் எதிர்க்கும் சக்தியை அளிக்கிறது தாய்ப்பால். குழந்தைக்கு அன்பான உணர்வும் பாதுகாப்பும் கிடைக்க உதவுகிறது. தாய்ப்பால் குடிக்கும் குழந்தைக்கு வாய்வு நோய்கள், சரும நோய்கள் ஏற்படுவது மிகவும் அரிது.

3 மாதம் ஆனபின், டாக்டர்கள் ஃபாரெக்ஸ் சிபாரிசு செய்கிறார்கள்

குழந்தைக்கு திட உணவைத் துவங்குவதற்கு தனிப்படத் தயாரிக்கப்பட்டது—ஃபாரெக்ஸ். இதில் புரதம், கார்போஹைட்ரேட், கொழுப்பு, கால்ஷியம், பாஸ்பரஸ் வைட்டமின்கள் உள்ளன. இரும்புச் சத்தும் ஏராளம் அடங்கியது—ஃபாரெக்ஸ். ஆகவே, குழந்தையின் முழு வளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு—ஃபாரெக்ஸ்.



டாக்டர்கள் சிபாரிசு செய்வது ஃபாரெக்ஸ்
குழந்தையின் விரைந்த முழுவளர்ச்சிக்கு உன்னதமான திட உணவு

ராசிபலன்

ஜூலை '82

மேஷம்



வியாபாரத் துறை சம்பந்தப்பட்டவர்களுக்கு முக்கிய நபர்களை, ஒப்பந்தங்களைச் சந்திக்கும்போது நல்ல வரவேற்பு கிடைக்கும். வெளியூர்ப் பயணங்களும் உண்டாகும். குழந்தைகளின் காரணமாகப்பொதுமக்களிடையே பெரும் புகழும் உண்டாகும். வெளியூர்ப் பயணங்களினால் மனச் சந்துஷ்டியும், அனுகூலமும் ஏற்படும், ஆரம்பத்தில் பணப் பற்றாக்குறை இருந்தாலும் அதனால் காரியங்கள் தடைப்படாது.

ரிஷபம்



வெளிநாடு அல்லது தூரப் பிரதேசத்திலிருந்து கிடைக்கவிருக்கும் நல்லதொரு செய்தியின் காரணமாக பலவித முன்னேற்றங்கள் ஏற்படவிருக்கின்றன. உங்களுக்கும் வெளி நாடு செல்ல வாய்ப்பு ஏற்படலாம். கலைஞர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் வளமான எதிர்காலம் ஏற்படவிருக்கிறது. பண வரவு சரளமாகவே இருக்கும். இனி படிப்படியான முன்னேற்றமே உங்களுக்கு.

மிதுனம்



நீங்கள் எதிர்பார்த்த அம்சங்களில் எதிர்பாராத வெற்றிகள் உங்களுக்காகக் காத்திருக்கிறது. நீங்களே நினைத்திராத நண்பர் ஒருவரால் உங்களுடைய அலுவல்கள் எளிதாக முடிவடையும். குடும்ப நிலை ஒன்றுதான் தற்போதைக்கு உங்கள் கவலையை அதிகப்படுத்தும். நீங்கள் மௌனமாக இருந்து விடுவதன் மூலம் அதிகமான சண்டை சச்சரவுகள் இல்லாமல் பார்த்துக்கொள்ளலாம்.

கடகம்



குடும்பத்தின் பாதுகாப்பை நினைத்து நீங்கள் நீண்ட காலத் திட்டமாகச் செய்யும் செயல்களுக்கு இடையூறுகள் ஏற்படலாம். அரசாங்கம், கோர்ட் விவகாரங்களினால் பணிகள் தாமதமாக நடைபெறும். பணப் பற்றாக்குறையும் ஓரளவு இருக்கும். ஆனால் கூடிய விரைவில் இந்தத் தடங்கல்கள் நீங்கிவிடும். உங்களுடைய உறவினர் ஒருவர் உதவியால்.

சிம்மம்



உங்களுக்கு விரைவில் ஏற்படவிருக்கும் நல்லதொரு வாய்ப்பை நழுவ விடாதீர்கள். அதன் மூலம் உங்களுடைய ரசனைக்கேற்ற ஒருவர் உங்களுடைய வாழ்க்கையில் முக்கிய பங்கேற்க வருகிறார். அவர் மூலம் வளமான எதிர்காலமும் உங்களுக்காகக் காத்திருக்கிறது. விரைவில் ஓய்வு ஒழிச்சலில்லாத வேலைகள் உண்டாதலால் உடல் நிலையைப் பார்த்துக் கொள்ளுங்கள்.

கன்னி



சில காலமாகவே நீங்கள் மற்றவர்களுக்காகவே பணி செய்து வருகிறீர்கள். உங்களுக்கென்று நிலையான உத்தியோகம் கிடைக்கவிருக்கிறது. சிறு சிறு ஒப்பந்தங்களில் ஈடுபடுவதன் மூலம் வெற்றிகரமான வியாபாரியாக மாற சந்தர்ப்பங்கள் காத்திருக்கின்றன. உங்களுக்கு இருக்கும் ஏராளமான நண்பர்களின் காரணமாகவே உங்களுடைய எந்தக் காரியமும் எளிதாகக் கைகூடும்.

துலாம்



குடும்பத்தில் உறவினர்களிடையே சுப காரியங்கள் நடைபெறவிருப்பதால் சந்தோஷமான சூழ்நிலை உண்டாகும். சொத்து விவகாரங்களைச் செட்டில் செய்யவும் இந்த மாதம் ஏற்றதாக அமையும். பணப் புழக்கமும் தாராளமாக இருப்பதால் நீங்கள் திட்டமிட்டபடி, எந்தவித இடையூறுமின்றி, வேலைகளைச் செய்து கொண்டு செல்லலாம்.

விருச்சிகம்



உடல்நிலைக் குறைவு இந்த மாதம் ஏற்படலாம். சுற்றுப்புறச் சூழ்நிலையின் காரணமாக உடல்நிலை பாதிக்கப்பட்டு, அதனால் உங்களுடைய பல வேலைகள் தடைப்படலாம். செலவும் அதிகரித்து ஓரளவு மனக் கஷ்டமும் உண்டாகும். ஆனால் வெகு விரைவிலேயே நிலைமை சீர் திருந்திவிடும். வீட்டின் ஒற்றுமையான சூழ்நிலையின் காரணமாக எந்தக் காரியத்தையும் ஜெயித்து விடுவீர்கள்.

தனுசு



புதிதாக நீங்கள் ஏற்படுத்திக் கொண்டுள்ள தொழில் ரீதியான உறவுகளை ஸ்திரப்படுத்திக் கொள்ளுங்கள். ஆரம்ப லாபம் அதிகமில்லையாயினும் எதிர்காலத்தில் நல்ல பலனைத் தரும். உங்களுடைய மேலதிகாரிகளும், நண்பர்களும் பாராட்டும் நிலைமையே உண்டாகும். பண வரவு ஓரளவு, ஆனால் தட்டுப்பாடு இல்லாமல் இருக்கும்.

மகரம்



இம்மாதம் பொழுது போக்கு அம்சங்கள் உங்களை அதிகம் கவரும். ஆனால் அந்தப் பக்கம் சாய்ந்துவிடாமல் இருப்பது நல்லது. ஏனெனில் கடமைகள் ஒருபுறம் இருக்க, இன்னும் அதிகமான வேலைகளும், பொறுப்புகளும் வரவிருக்கின்றன. சந்தர்ப்பங்கள்கிடைக்கும்போது அதை எதிர்பார்த்து ஏற்றுக் கொள்வது நல்லது.

கும்பம்



நீங்கள் ஒருதலைப்பட்சமாக இல்லாமல் திறந்த மனத்துடன் இருந்தால் உங்களைத் தேடிப் பல நண்பர்கள் வருவார்கள். சமூகத்தில் மதிப்பும், புகழும் ஏற்படும். உங்களுடைய பழைய நண்பர் ஒருவரைப் பொறுத்தவரை நீங்கள் விரைவில் முடிவை எடுத்துவிடுவது நல்லது. குடும்பத்திலும் சரளமாகப் பேசி மனம் திறந்து பழகுங்கள்.

மீனம்



தனியான முயற்சிகளை விட உங்களைப் பொறுத்தவரை கூட்டு முயற்சிகள் நல்ல பலனைத் தரும். கற்பனை, கலைத் திறனுடன் கூடிய வேலையாக உங்களுடையது இருக்குமானால் விரைவிலேயே அவை புகழ் பெறும். உங்களுடைய பாகஸ்தர்களின் முயற்சியால் உங்களுடைய லட்சியங்கள் நிறைவேறும். பண வரவு போதுமான அளவே இருக்கும்.


டாசெல்
சுகாதாரம் சிக்கனமானது
நீடித்து உழைப்பது
அழகு மிகுந்தது
வெடிப்புகள் ஏற்படாத பளிங்கு போன்ற, சுகாதார சாதானங்களை சகாயமான விலைகளில் டாசெல் இப்பொழுது பிரத்யேகமாகத் தயாரித்து அளிக்கிறது.
டாசெல் சுகாதார சாதனங்களால் உங்கள் பாத்ரும் நவீனமாகவும் அழகு மிகுந்ததாகவும் இருப்பது நிச்சயம்.
TACEL
தமிழ்நாடு
செராமிக்ஸ் லிட்.,
சென்னை-600018

சங்கீத பாரம்பரியத்தின் ராணி!

✕ தெரிந்த பெயர்; தெரியாத விவரம்



"அழகான கட்டிடத்தைப் பார்க்கிறோம். அதனுடைய உயரமும் கம்பீரமும், அலங்காரமும் பிரமித்துப் போகும்படியாக இருக்கும். ஆனால் எல்லாவற்றுக்கும் அடிப்படையாக நிற்பது அந்த அடித்தளம் இல்லையோ! அதைப் போலத்தான் நாங்கள். இந்தச் சினிமாவுலகில் ஆதியிலிருந்து வருகிறோம். எங்களுக்கு யாரும் சான்ஸ் தரவேண்டும் என்று சொல்லவில்லை. அட்லீஸ்ட் பேரையாவது மறக்காமல் இருந்தால் சரி..."

என்று சொல்லும் பின்னணிப் பாடகி திருமதி பி. லீலா தான் இன்றைக்கு ஃபீல்டில் சீனியர். இவருக்குப் பிறகு வந்தவர்கள் தான் இன்றைக்குப் பாடிக்கொண்டிருக்கும் அனைவருமே.

லீலாவின் வாழ்க்கையே அலாதியானது. மழலை கொஞ்சும் மலையாள தேசத்தில் பிறந்து வளர்ந்தவர். அப்பா ஈ. கே. கே. மேனனுக்குத் தணியாத இசை மோகம். இல்லையென்றால் எந்தக் கணவனாவது தன் மனைவிக்குப் பாட்டுச் சொல்லித் தருவாரா? அதுவும் பெண்கள் வெளியில் தலை காட்டினாலே பாவம் என்று சொல்லும் ஐம்பது வருஷங்களுக்கு முன்னால்! தன் மனைவி மீனாட்சியம்மாவுக்கு இசையில் ஆர்வம் இருப்பதைப் பார்த்து இசை கற்றுக் கொடுத்திருக்கிறார்.

அன்னையும் பிதாவும் இசையின் மேல் கொண்ட காதல் மூன்றாவது மகளான லீலாவுக்குத் தொற்றிக் கொண்டது.

இவர் வளர்ந்த பாலக்காட்டில் கர்னாடக சங்கீதம் கேட்கும் வாய்ப்புக் குறைவு. இதற்காகவே — நிறைய சங்கீதம்கேட்கவேண்டும் என்பதற்காகவே — சென்னைக்கு மகளை அழைத்துக் கொண்டு வந்திருக்கிறார் மேனன். இப்படியும் ஒரு அப்பாவா! அதனால்தான் பேச்சுக்கு மூன்று தடவை தன் அப்பாவைப் பற்றிக் கூறுகிறார் பி. லீலா.

"பாட்டுக்கு மாத்திரம் இல்லை. என் வாழ்க்கையையும் செம்மைப்படுத்தியவர் அப்பாதான். யாரைப் பார்த்தும் பொறாமை படக்கூடாது; யாருக்கும் துரோகம் செய்யக் கூடாது. எல்லோரும் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்றுதான் குருவாயூரப்பனை பிரார்த்திக்க வேண்டும் என்பார் அவர்."

இன்றைக்கும் அப்படித்தான் இருக்கிறார் அவர். எந்தக் கேள்வி கேட்டாலும் யாரையும் குறை சொல்லவில்லை! 'ஏதோ, அவரவர் விருப்பம், அப்படி இருக்கிறார்கள்' என்கிறார்!

சென்னைக்குத் தந்தையுடன் வந்த பி. லீலா வடக்கஞ்சேரி ராம பாகவதர், மருத்துவக்குடி ராஜகோபாலன் என அந்த நாளில் பிரபலமாக இருந்த கர்நாடக வித்வான்களிடம் கற்றுக் கொண்டார்.

"திரு செம்பை வைத்திய நாத பாகவதரிடமும் கற்றுக் கொண்டேன். அவர் பல நல்ல விஷயங்களைச் சொல்லிக் கொடுத்தார். மேடை பாவங்கள், நயங்கள் என்று கற்றுக் கொண்டேன். ஆந்திர மகிள சபாவிலும், ரேடியோவிலும் பாடிக் கொண்டிருந்தேன். அப்போதுதான் வாஹினியில் என்பாட்டைக் கேட்டுவிட்டு சரஸ்வதி ஸ்டோர்ஸில் என்னை ஆர்டிஸ்டாக நியமித்தார்கள். அங்கேயும் இசை சம்பந்தமான நுணுக்கங்களைக் கற்றுக் கொண்டேன். அதே சமயம் 'கங்கணம்' என்னும் தமிழ்ப் படத்தில் பாடப் புதுக் குரலைத் தேடினார்கள். மானேஜர் கணபதி ராமையா என்னைச் சொல்ல இப்படியாகத் திரையுலகில் நுழைந்து விட்டேன்."

அதற்குப் பிறகு மளமளவென்று புகழேணியின் உச்சிக்குப் போய் விட்டிருக்கிறார். இன்றைக்கும் இவருடைய கம்பீரமான பெண்மைக் குரலில்பாடிய 'எல்லாம் இன்ப மயம்'. 'சுந்தரி சௌந்தரி' 'நீயே கதி ஈஸ்வரி' போன்ற பாடல்களைக் கேட்டுக் கொண்டு தான் இருக்கிறோம்.

பொதுவாக, போன தலைமுறைக் கலைஞர்கள் அனைவருமே இதுவே கதி, இதுவே வாழ்வு என்று இருந்து விட்டிருக்கிறார்கள். அதனால் செய்யும் தொழிலில் பயமும், பக்தியும் சிரத்தையும் இருந்திருக்கிறது. இரண்டு மூன்று நாள் ரிகர்சல் இல்லாமல் தான் ஒரு பாட்டைக் கூடப் பாடியதில்லை என்கிறார் பி. லீலா. பாடப் பாடத்தான் ராகமும், பாவமும் வரும். வேகமாக, அவசர

கோலத்தில் செய்யப்படும் எதுவுமே வந்த வேகத்தில் போய்விடுகிறது. அப்படிக் கட்டுக் கோப்புடன் பாடிப் பழகிப் பின்னர் ரெகார்டிங் செய்ததால்தான் இன்றைக்கும் பழைய பாடல்களை விரும்பிக் கேட்டுக் கொண்டிருக்கிறோம்.

''ஆமாம்; இப்படித்தான் எல்லோருமே சொல்கிறார்கள். அந்தக் காலப்பாட்டுப்போல வருமா என்று கேட்கிறார்கள். ஆனால் இந்தக் காலப் போக்கிலேயே பாட்டுக்களும் தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது. யார் யாருக்கு எந்த எந்த 'பிட்ச்' வரும், அதற்குத் தகுந்தாற்போல் அட்ஜஸ்ட் செய்ய வேண்டும் என்றெல்லாம் இல்லை. பாட்டு டியூன் போட்டுவிட்டு இப்படித்தான் பாட வேண்டும் என்கிறார்கள். சிலது நன்றாக வருகிறது. சிலதைக் கேட்கும்போது கஷ்டமாக இருக்கிறது....

பழ ரகசியங்கள்

- மாம்பழம் சாப்பிட்டால் சூடு என்று சொல்லிக் குழந்தைகளுக்குத் தர மறுப்பானேன்? மாம்பழத்தை நறுக்குவதற்கு முன்பு அல்லது ரசம் பிழிவதற்கு முன்பு அரை மணி குளிர்ந்த நீரில் போட்டு விடுங்கள். ஒன்றும் செய்யாது.
- எந்தப் பழம் சாப்பிட்ட பின்னும் தண்ணீர் குடிக்காதீர்கள்.
- சப்போட்டாப் பழம் வைட்டமின் சத்து நிறைந்தது. தோலுடன் சாப்பிட வேண்டும். ஆனால் சாப்பிடப் பத்து நிமிடங்களுக்கு முன் வெது வெதுப்பான உப்பு நீரில் போட்டுச் சாப்பிடவும். ஏனெனில் பழங்களுக்குப் பூச்சி மருந்து அடிப்பதுண்டு.
- நாகப்பழம் சர்க்கரை வியாதிக்கு மிக நல்லது. அதன் கொட்டையைத் தூக்கி எறியாதீர்கள். அதைக் காய வைத்துப் பொடி செய்து தேனுடன் உண்டால் சர்க்கரை வியாதி குறையும்.
- வாழைப் பழம் மலத்தைக் கட்டுப்படுத்தும். மலம் கழியவும் உதவும். சிறு குழந்தைகளுக்குத் தினமும் ஒரு பழம் தரலாம்.
- மாதுளம் பழம் வயிற்றுப் போக்கு, பேதி போன்றவைகளுக்கு மிகவும் நல்லது.
- பத்து பாதாம் பருப்புக்குச் சமானம் ஒரு அத்திப் பழம். குழந்தைகள் காலை மாலை இரு வேளைகளிலும் உண்டால் மலச்சிக்கல், மஞ்சள் காமாலை போன்றவை வராது.

—மீரா



என்று சொல்லும் இவர் தமிழில் திரைப்படங்களில் பாடி ரொம்ப நாட்களாகி விட்டனவாம். எங்கிருந்தோ வந்தானில் சீர்காழியுடன் பாடிய அந்தச் சாகுந்தலப் பாட்டுத்தான் கடைசி. ஆனால் நிறையக் கச்சேரிகள் செய்கிறார். அந்தக் காலத்தில் பாலக்காட்டில் நிறையச் சங்கீதத்தைக் கேட்க முடியவில்லை என்பதற்காகச் சென்னைக்கு வந்தார்; இப்போது அந்தக் குறையைப் போக்குவதற்காகவோ என்னவோ கேரளாவில் நிறையக் கச்சேரிகள் செய்கிறாராம்.

''அந்த வகையில் மக்களுடைய ரசனையும் மாறி வருகிறது என்று தான் சொல்லவேண்டும். நடுவில், ஐயையோ கர்நாடக சங்கீதமா என்று ஓடியவர்கள் எல்லாம் இப்போது உட்கார்ந்து கேட்கிறார்கள். இந்த ரசனை மேலும் வளர சங்கராபரணம் பெரிதும் உதவி செய்திருக்கிறது. 'மானஸ சஞ்சரரே', 'தொரகுனா...' இதெல்லாம் பழைய கீர்த்தனைகள்தான். ஆனால் முன்பு கேட்காதவர்கள் எல்லாம் இப்போது வெகுவாக ரசிக்கிறார்கள். சங்கராபரணம் பாட்டுப் பாடுங்கள் என்கிறார்கள். கர்நாடக சங்கீதம் மீண்டும் துளிர்க்க சங்கராபரணம் பெரிய தூண்டுகோலாக இருந்தது. அதற்கு நாங்க எல்லாம் நன்றிதான் சொல்ல வேண்டும்.''

என்று சிரிக்கிறார் பி. லீலா. இவருடைய சொந்த வாழ்க்கையைப் பற்றி எதையுமே சொல்லவில்லையே என்று கேட்கிறீர்களா? பொதுவாக சில கலைஞர்களுக்குக் கலையினால் வாழ்க்கை பாதிக்கப்பட்டு விடுகிறது இல்லையா? அதைப் போலத்தான் இவருக்கும். ''இல்லற வாழ்க்கை என் சங்கீதத்துக்குத் தடையானபோது சொந்த வாழ்க்கையைத் தியாகம் செய்ய வேண்டியதாகி விட்டது... இதற்கு மேல் அதைப் பற்றி விவரிக்க நான் விரும்பவில்லை'' என்கிறார் இவர்.

இப்போது சங்கீதமே இவருடைய வாழ்க்கையாகி விட்டது!


கேக் செய்யலாமா?

வேண்டிய உபகரணங்கள்:

கேக்கின் அளவுக்குகந்த நீள் சதுர மற்றும் சதுர கேக் டின்கள், கத்தி, மரக் கரண்டி, மிக்ஸி.

குழந்தைகளின் அட்லஸிலிருந்து இந்தியா வரை படம் ஒன்றைப் பெரிய அளவில் ட்ரேஸ் எடுத்துக் கொள்ளவும். உதாரணமாக சுமார் ஒன்றே கால் அடி நீளத்துக்குப் படம் அமையலாம். இதற்குச் சுமார் 8 முட்டை அளவுக்குக் கேக் தயாரித்து ஒன்றுக்கு முக்கால் நீள சதுர டின்னிலும் 8 அங்குல நீளமுள்ள சதுர டின்னிலும் பேக் செய்து கொள்ளவும்.

கேக் நன்கு ஆறியதும் பொங்கி வந்துள்ள மேல் பாகத்தை வெட்டிச் சமப்படுத்தவும். மீதித் துண்டங்களைத் தனியாக வைக்கவும். நீள் சதுர கேக்கைத் திருப்பிப் போட்டு பலகையின் மேல் வைக்கவும். ட்ரேஸ் எடுத்த வரை படத்தை இந்திய எல்லைகள் வழியாக கத்தரித்துக் கொண்டு கேக்கின் மேல் வைக்கவும். இது இந்திய வரை படத்தில் சுமார் முக்கால் பாகம்தான் வரும். வடக்கேயுள்ள மீதி பாகத்துக்கு 8க்கு 8 சதுர அங்குல கேக்கைப் படத்தில் காட்டியுள்ளபடி வைத்து



வெட்டிக் கொள்ளவும். கிழக்கேயுள்ள (பி) பகுதியை மீதியுள்ள பாகத்தில் வெட்டி ஒட்டிக்கொள்ளவும். நீண்ட சுத்தமான குச்சியைச் செருகினால் இறுகப் பிடித்துவிடும். இது போல் மேற்கில் உள்ள சிறு பகுதியை வெட்டிச் சேர்க்கவும். வேண்டுமானால் இலங்கைத் தீவையும் கத்தரித்துக் கொள்ளலாம்.

இனி அட்லஸைப் பார்த்து இமய மலைத் தொடர், ஆரவல்லிக் குன்றுகள், விந்திய மலைகள், கிழக்கு மலைத் தொடர்கள், மேற்கு மலைத் தொடர்ச்சி, அஜந்தாக் குன்றுகள் இவற்றைக் குறித்துக் கொள்ளவும் (வரை படத்தில்) மிக உயர்ந்த மலைத் தொடர்களான இமய மலைத் தொடருக்கு மீதியுள்ள கேக் துண்டங்களை குன்றுகள் வடிவில் தொடராகவோ தனித் தனியாகவோ வெட்டி வட பாகத்தில் குச்சிகள் கொண்டு செருகவும். இமய மலையின் போக்கிலேயே இவற்றின் திசையும் அமைய வேண்டும். இதேபோல் விந்திய, அரவல்லி, அஜந்தாக் குன்றுகளுக்கு சிறு துண்டு கேக்குகளை வைத்து உயரம் கொடுக்கவும். தக்காண பீட பூமி சற்று உயரமாக இருக்க வேண்டும். இதற்கு கேக்கின் மேல் மட்டத்தில் வெட்டி எடுத்து தனியாக வைத்த பெரிய துண்டை வைக்கலாம். மேற்குத் தொடர் மலைகளை தொடராகவும் சற்று உயரம் குறைவாகவும் கிழக்கு தொடர் மலைகளை ஆங்காங்கு சிறு சிறு குன்றுகளாகவும் காட்டவும்.



சியாமளா சிவராமன்



இனி குன்றுகள், மலைகள் இவற்றின் உயரம், வடிவம் இவை கலையாமல் கேக் வரை படத்தின் மேல் கடின பட்டர் ஐஸிங் மண் நிறத்தில் பரவி விடவும். சிறு அளவுபச்சை, ஆரஞ்சு மற்றும் பிரவுன் கலந்தால் மண் நிறம் பெறலாம். சம வெளிகளுக்கும் கரையோரங்களுக்கும் சிறிது பச்சை நிறத்தை விரலில் நனைத்து அங்கங்கு பூசிவிடவும்.

முக்கிய நதிகளின் திசையை சிறு ஊசி முனையால் குறித்துக் கொண்டு நீல நிறம் கலந்த மார்ஷ்மலோ ஐஸிங்கை ஒரு சிறு ஸ்பூனில் எடுத்து மெல்லிய கோடாக ஊற்றி விடவும். கடலோரங்களிலும் ஒரு அங்குல அகலத்துக்கு இந்த ஐஸிங்கை ஊற்றவும்.

மார்ஷ்மலோ ஐஸிங்:

சாதா சர்க்கரை 450 கிராம்
ஜெலட்டின் 30 கிராம்
தண்ணீர் ஒன்றரை கப்

ஜெலட்டினை ஒரு கப் நீரில் ஊற விடவும். மீதித் தண்ணீரையும் சர்க்கரையையும் சேர்த்து அடுப்பில் வைத்துக் காய்ச்சவும். மெல்லிய பாகு ஆனதும் இறக்கி வைத்து ஜெலட்டின் கரைசலைக் கொட்டி நன்கு கலக்கவும். மீண்டும் அடுப்பில் வைத்து ஒரு நிமிடம் வரை நன்றாகக் காய்ச்சவும். அடுப்பிலிருந்து இறக்கி மிக்ஸியில்போட்டு நன்கு அடிக்கவும். 10 நிமிடங்களில் இலேசாகக் கெட்டியாகும். அப்போது நீலக் கலர் சேர்த்து கடல் நீர், மற்றும் ஆறுகளுக்கு ஊற்றவும்.

ஆறுகளைக் குறித்த பின் மலைகள், ஆறுகளின் பெயர்களை 1ம் நம்பர் குப்பியில் சிறிது மிருதுவான பட்டர் ஐஸிங் கலந்து வெள்ளை நிறத்தில் எழுதவும்.

படிப்புக்கும் வேலைக்கும் என்ன சம்பந்தம்?


லக்ஷ்மி

"பிரமாதமாக படிக்கும் குழந்தைகளின் மனோநிலையெல்லாம் போட்டு, எஸ். எஸ். எல். சி.யில் இருந்து எம். ஏ. வரை என்னென்ன வாய்ப்பு என்றெல்லாம் மங்கையர் மலரில் போட்டீர்கள். குழந்தைகளை லட்சிய புருஷர்களாக, வருங்காலத்தலைவர்களாக வளர்க்கவேண்டும் என்று முழங்குகிறீர்கள். எங்களையும்தான் கொஞ்சம் கவனியுங்களேன். ஏதோ ஒன்றை லட்சியமாக நினைத்து, எதையோ படித்து, எப்படியோ வேலைக்குச் சேர்ந்து இப்படி விழித்துக் கொண்டிருக்கிறோமே..."

என்கிறார்கள் இதோ நாம் சந்திக்கப் போகும் இந்த இளைய சமுதாயத்தினர். இவர்களைப்போல இன்னும் எத்தனை எத்தனை பேரோ நம் நாட்டில்!

சாவித்திரி: இவர் M.A. CRIMINOLOGY ஒரு நட்சத்திர ஹோட்டலில் ஹவுஸ் கீப்பராக இருக்கிறார்!

லக்ஷ்மி: பி.எஸ். ஸி-இன்ஷ்யூரன்ஸ் கம்பெனியில் அஸிஸ்டண்ட்.

ஸ்ரீதர்: பி.எஸ். ஸி - வங்கியில் வேலை.


ரூபா சௌடா

செல்வி ரூபா சௌடா: திரைப்படக் கல்லூரியில் நடிப்புப் பாடம் — இப்போது நட்சத்திர ஹோட்டலில் ரிஸப்ஷனிஸ்ட்.

சந்திரசேகர்: இவரும் M.A. CRIMINOLOGY ஆனால் அரசாங்கத்தில் சம்பந்தமில்லாத பதவி

ஐந்து பேர்களும் படித்த படிப்பு வேறு. பார்க்கும் வேலை சம்பந்தமில்லாத மற்றொன்று.

சாவித்திரி: இதைப் பற்றி நினைக்கவோ, பேசவோ மகா கேவலமாக இருக்கிறது. வெறுப்பேற்றுகிறீர்கள்.

லக்ஷ்மி: கையில் இருக்கும் களாக்காய் நாவைய பலாப் பழத்தை விட மேல் இல்லையா?

ஸ்ரீதர்: ஐயாம் கொயட் ஹாப்பி! (ஏன்! பாங்கியில் சம்பளம் அதிகமாச்சே!)

ரூபா: ஐயாம் ஆல்ஸோ கொயட் ஹாப்பி!

சந்திரசேகர்: வேலை வேலை என அவனவன் ஆலாய்ப் பறக்கிறான். நீங்க என்னடான்னு Job satisfation பற்றி விசாரிக்கிறீர்களே!

லக்ஷ்மி: திருப்தி என்பது ஆரம்பத்திலிருந்தே இருக்க வேண்டும். காலேஜில் நாம ஒரு பாடம் கேட்டா வேறு ஒன்று தராங்க. அங்கே இருந்தே ஆரம்பிக்குது 'காம்ப்ரமைஸ்'. என்ன அழகான வார்த்தை!

நம்மை நாமே குழி தோண்டிப் புதைத்துக்கொள்ள ஏதுவான வார்த்தை!

ரூபா: அப்படி எடுத்துக் கொள்ள முடியாது. இப்போ என்னை எடுத்துக் கொள்ளுங்கள். இப்போ நான் பார்க்கும் வேலை எனக்கு மிகவும் பிடித்திருக்கு. ஏதோ ஆசைக்காகப் படித்தேன். அந்தத் ஜெனிமாத் தொழிலில் இருக்கின்ற சில விஷயங்களை என்னால் பின்பற்ற முடியவில்லை. விலகிட்டேன். இப்போ ரொம்ப சந்தோஷமாக இருக்கேன். அப்கோர்ஸ். அந்தப் புகழும் பணமும் இல்லேன்னாலும் இந்த வேலை பரவாயில்லை.

சாவித்திரி: இந்த வேலை சுத்தமா எனக்குப் பிடிக்கலை. அதுவும் இதுக்கு ஒரு பி.யூ.சி. கூடத் தேவையில்லை. போர்வைகளையும் தலைகாணி உறைகளையும் சலவைக்குப் போட்டு எண்ணிவைக்கலம்.ஏ, ஓரிமினலஜி தேவையா? என்னால் வீட்டில சும்மா இருக்க முடியாது. அதனால் ஏதோ ஒன்று.

ஸ்ரீதர்: ஏன் நீங்க கிரைம் ரிப்போர்ட்டர் ஆக வேலைக்குப் போகலாமே!

சாவித்திரி: நீங்கள் சொல்வது சரி. ஆனால் ஒரு பெண்ணை கிரைம் ரிப்போர்ட்டராக இருக்க எத்தனை பேர் 'அலவ்' பண்ணுவாங்க? இப்பவே பாருங்க! நான் ஒரு டீஸண்டான வேலையில்தான் இருக்கேன். பாரு அந்தப் பொண்ணு ஹோட்டல்ல வேலை செய்யுது' எனப் பேசுகிறார்கள். மற்றவர்கள் என்னவேணு சொல்லிக் கட்டும். வேலையும் என் மனத்துக்குப் பிடிக்காமல் செய்ய வேண்டியிருக்கு.

சேகர்: இதற்கு ஒரே வழிதான் இருக்கு. பி. எஸ். ஸி படிச்சவர் அல்லது அந்த மாதிரி வேறுபடிப்புப்படித்தவங்களைபாங்க் வேலைக்கு எடுக்கக் கூடாது. பி. காம் (அ) எம். காம் அது மாதிரி ரிலேடட் கோர்ஸ் படிச்சவங்களைத்தான் அந்தந்த வேலைக்கு எடுக்கணும். ஒரு பி.காம்க்குத் தானே



பாங்கிங் பத்தித் தெரியும். அது போல ஒவ்வொரு வேலைக்கும் அதுக்குச் சம்பந்தப்பட்ட படிப்புப் படிச்சவங்களைத்தான் எடுக்கணும்னு இருக்கணும்.''

ஸ்ரீதர்: அந்தந்தப் படிப்புக்குத் தகுந்த மாதிரி வேலை வாய்ப்பு இருக்கா? அது இல்லேங்கறப்போ தானே நாங்க இப்படி வேறு வேலைக்கு வருகிறோம்! எங்களுக்கு மட்டும் ஆசையா? படித்ததை உபயோகிக்கக் கூடாதுன்னுட்டு?

சேகர்: இல்லே! நீங்க இப்போ வேறு வேலைக்கு முயற்சி செய்ய மாட்டேங்கறீங்களே! கடைசி வருடம் படிக்கும்போதே பேங்க் பரீட்சை எழுத ஆரம்பித்து விட இதீர்களே!

சாவித்திரி: அப்புறம் இந்த ஜாதி வேறு குறுக்கிடுது. மேடையில் முழங்கறங்க எல்லா அரசியல்வாதிகளும். ஆனா கவர்ன்மெண்ட் அப்ளிகேஷனில், பேப்பரில் போட ஆரம்பிச்சுட்டாங்க. சமீபத்தில் ஒரு விளம்பரம் பார்த்தேன். பத்து வருடங்களாக ஒரு குறிப்பிட்ட ஜாதிக்காக ஒதுக்கப்பட்டுள்ளதாம் ஒரு வேலை. அதுக்கு மனுச் செய்யக்கூட ஆளில்லாமல் அந்த இடம் காலியாகவே இருக்கு பத்து வருடமாக. வேலையில்லாப் பிரச்னை அதிகமாக இருக்கும்போது இப்படியா செய்யறது. எவ்வளவு வேலையில்லாப் பட்டதாரிகளுக்கு வயிறு எரியும்? பத்து காலி இடங்களுக்கு ஆயிரம் பேர் மனுச் செய்யறாங்க!

லக்ஷ்மி: இதைத் தவிர பெற்றோர் கட்டாயத்துக்காக விரும்பாத பாடத்தில் பட்டம் படிக்க வேண்டிய சூழ்நிலை வேறு ஏராளம். சில குடும்பங்களில் பெற்றோர் தம் பிள்ளைகள் தாங்கள் இருக்கும் இடத்திலேயே வேலை பார்க்க வேண்டும் என்ற மனப்பான்மை இருக்கிறது. வருங்காலம் இல்லாவிட்டால்கூட தாம் பார்க்கும் வேலையிலும் மேற்பதவி எல்லாவற்றையும் விட்டுப் பெற்றோரின் விருப்பத்துக்கு இணங்க ஒரே இடத்தில் முடங்கிவிடும் பட்டதாரிகளின் நிலையும், அந்தோ பரிதாபம்!

ரூபா: இப்படி இருப்பதினால் அவர்களின் முன்னேற்றத்திற்கு அவர்கள் பெற்றோர்களே சத்ருவாகி விடுகிறார்கள். இதனால் டைனமிக்கா வர முயல்றவங்க கூட அடங்கி ஒன்றுமில்லாமப் போயிடறாங்க.

லக்ஷ்மி: நமக்கு நாமே வைரியாய் இருக்கிறதினாலே யாருக்கு என்ன பிரயோஜனம்? இதை உடைக்க வேண்டாமா? முறித்துக் கொண்டுதான் வருவோமே! முதலில் கொஞ்சம் கஷ்டமாகத்தான் இருக்கும்! ஆனா நம்ப பிள்ளைங்களாவது சந்தோஷமாக இருப் பாங்களே! சிந்தியுங்கள்!

பேட்டி : சக்கு



நமது கலாசாரம்

திருமணத்தின் மையப் பகுதி கன்னியின் கரம் பற்றுதல் (பாணிக்கிரஹணம்). கல்யாணம், விவாஹம், திருமணம் — என்று வழக்கில் பேசுகிறோம். ஆனும் பத்திரிகையில் 'பாணிக்கிரஹணம்' என்று குறிப்பிடுகிறோம். வாழ்க்கையில் ஒற்றுமையோடு கைகோர்த்து ஒன்றாகச் செயல்பட உறுதி எடுத்துக் கொள்ளும் ஆதர்ச தம்பதிகள் அவர்கள். இருதயங்கள் இரண்டறக் கலந்ததைக் கரம் பிடித்துக் கொண்டு காண்பிக்கிறார்கள்.

பண்பட்ட மக்கள் செல்வம் நாட்டின் தரத்திற்கு எடுத்துக்காட்டு. பொருளாதாரத்தின் தன்னிறைவு மட்டும் நாட்டின் தரத்தை உயர்த்தாது. சமுதாய நீதி, நாகரிகம் — இவைகளும் இன்றியமையாதவை. பரம்பரை கலாச்சாரத்தைப் போற்றிக் காக்கும் நோக்கோடு துவங்குகிறது ஆதர்ச தம்பதிகளின் அறவழித் திருமணம். வாழ்க்கைக்கு மணமூட்டும் திருமணத்தை பெருமை அளிக்கும் பழம்பெரும் கலாசாரத்தைக் கட்டிக் காப்பதில் அதன் பங்கு குறிப்பிடத் தக்கது.

'அற வழியில் அறநெறி தவறாத எண்ணம் மேலிட்ட மக்கள் செல்வத்துக்காக நாம் இருவரும் ஒன்றுபட்டோம். குடும்ப வாழ்க்கையிலும், சமுதாய வாழ்க்கையிலும் நல்ல காரியங்கள் செய்ய முற்பட்டிருக்கிறோம்.' என்ற கருத்தை வலியுறுத்தி இருவரும் கரம் பிடிப்பதற்கு முந்தியே பல பெரியோர்கள் முன்னிலையில் இரண்டு முறை உறுதி அளிக்கிறார்கள். (ஆவாப்யாம் கர்மாணி கர்த்தவ்யானி ப்ரஜா: ச உத்பாதயிதவ்யா:) தம்பதிகள் இருவரும் ஏற்றத் தாழ்வு அற்றவர்கள் என்பதை வெளிப்படுத்துகிறார்கள் 'கிருஹஸ்த சூத்திரம்' என்ற விவாஹக் கோட்பாட்டை வகுத்த முனிவர்கள்.

'மனதுக்கு இனியவளே! எல்லா ஐச்வர்யங்களும் என்னை வந்து அடைய வேண்டும். அதற்காக உனது கரம் பற்றுகிறேன். முதுமை வரை நீ என்னுடன் சுக வாழ்வு வாழ வேண்டும். பகன், அர்யமா, சூர்யன், இந்திரன்— முதலிய தேவர்களின் கருணையால் நீ எனது குடும்ப வாழ்க்கைக்கு ஆதாரமாக கிடைத்தாய். செல்வச் செழிப்பை அளிக்கவல்ல அவர்கள் உன்னை (செல்வத்தை) அளித்தார்கள் என்று சொல்வதில் பெருமைப்படுகிறேன். உனது பெருமையை எண்ணிப் பார்க்கும் தருவாயில் எனக்கு இப்படியும் சொல்லத் தோன்றுகிறது. 'தேவ குரு பிரஹஸ்பதி உன்னை எனக்கு அளித்து ஆசிகூறியிருக்கிறார். நாட்டின் மக்கள் செல்வத்துக்கு ஆதாரமாக இருப்பவளே! நீ மகிழ்ச்சியுடன் நூறாண்டு வாழ வேண்டும்' — என்ற கரம் பிடித்த கணவனின் உள்ளக்கிடக்கையைப் படம்பிடித்துக்காட்டுகிறது அதர்வணவேதம் (கிருப்ணாமிதே ஸௌ பகத்வாய ஹஸ்தம்....)

மனைவி வாழ்க்கைக்கு ஆதாரம். பெண்மணியிடமிருந்து பண்பு வளருகிறது. கரம் பிடிக்கும் தருவாயில் பெண் செல்வம் மிகுதியாக வேண்டும் என்று விருப்பமுடைய தம்பதிகள் இருப்பார்கள். பல பெரியோர்கள் முன்னிலையில் அக்னி ஸாட்சியாய் மந்திரத்தைக் கூறிக் கரம் பற்ற வேண்டும். கட்டை விரல்களைத் தவிர்த்து நான்கு விரல்களை மட்டும் பிடித்தால் உங்

களுக்குப் பெண் குழந்தைகள் வேண்டும் என்பதற்கு அறிகுறி. இரண்டு வகை மழலைகளையும் பார்த்து மகிழவேண்டும் என்ற எண்ணமிருந்தால் கட்டை விரலையும் சேர்த்துக் கரம் பற்ற வேண்டும் – என்று முனிவர்களில் ஒரு சாராரின் கருத்து. (ஸ்த்ரீ ரேவஜனயேயமிதி அங்குளீரேவ க்ருண்ணீயாத்.... பும்ஸ எவ ஜனயேயமிதி அங்குஷ்ட மேவ... கிருஹ்ணாதி).


ஐந்து விரல்களில் கட்டை விரலைத்தவிர மற்ற விரல்களை சம்ஸ்கிருதத்தில் பெண்பாலாகச் சொல்வதுண்டு. (அங்குளீ) மனம், வாக்கு, காயம் – மூன்றும் ஒரே எண்ணத்தை வெளியிடுகிறது. உள்ளம் நினைத்ததை மந்திரம் ஆமோதிக்கிறது. அதற்கு அனுசரணையாக காயமும் (கையும்) செயல்படுகிறது.

கட்டை விரலுக்கு ஒப்பான புருஷன் (கடவுள்). இதயத்தில் குடிகொண்டிருக்கிறான் என்கிறது கீதை. ஆண் மழலையின் ஆர்வத்தை செய்கையில் 'கட்டை விரலோடு கரம் பிடித்தல்' காட்டுகிறது. ஆன்மிகச் சிந்தனையாளர்கள் கட்டை விரலைப் பரம்பொருளுக்கு உதாரணமாகக் காட்டுகிறார்கள். கட்டை விரலின் இழப்பால் பௌருஷம் பறிபோயிற்று ஏகலவ்யனுக்கு. ஆல் இலையில் படுத்து அமைதி கொள்ளும் மழலை ஆராவமுதன் கால் கட்டை விரலை முத்தமிடுகிறான். – இப்படிக் கட்டை விரல் ஆண்பாலைப் பல இடங்களில் குறிப்பதால் முனிவர்களின் கணிப்பு பொருளுடையதாகவே இருக்கிறது. கட்டை விரல் இன்றி மற்ற விரல்கள் செயல்படாது. செயல்பாட்டுக்கு ஆண் 'துணை' மாதர்களுக்கு இன்றியமையாதது என்பதும் சூசகமாகச் சொல்லலாம். தம்பதிகளில் இருவர் சேர்ந்து செயல்பாட்டிலும் கட்டுப்பாடான வாழ்க்கையில் கட்டை விரலின் இடத்தை ஆணுக்கு அளித்ததில் தனிப் பொருள் உண்டு.

சிவன் சக்தியோடு சேரும்போது அசைகிறான் (செயல்படுகிறான்) திறமை இருந்தும் தனியே செயல்பட முடியவில்லை – என்று ஆதி சங்கரர் கூறுகிறார். மனைவியின் சார்க்கும் தன்மை கணவனை நல்வழியில் செயல்படச் செய்ய வேண்டும். செயல்படுபவன் அவன். செயல்படுத்துபவள் அவள். இன்பகரமான வாழ்க்கைக்கு சாஸ்திரம் கூறும் அறிவுரைகள் பொருள் படைத்தவை. கல்யாணத்தில் பெண்மணியின் பங்கு பண்புக்கு அங்கமாக அமைந்திருக்கிறது. மணப் பெண்ணின் வலக் கரம் தாமரைமொட்டுப் போல் ஐந்து விரல்களும் குவிந்த வண்ணம் மேல் நோக்கி இருக்க வேண்டும். கணவன் தனது வலக் கரத்தால் அணைத்தவாறு அவள் கரம் பற்ற வேண்டும் – இது சாஸ்திரம் கூறும் முறை.

இதயத்தைத் தாமரைப் பூவுக்கு ஒப்பிடுவதுண்டு. தனது இதயத்தை முழுமையாகக் கணவனுக்கு அளிக்கும் எண்ணத்தில் தாமரைப் பூப்போல் குவிந்த கரம் நீட்டுகிறாள். கணவனும் முழுமையாக அவள் மனத்தை ஆட்கொள்ளுகிறான். இந்த எண்ணத்தை வெளிப்படுத்தப் பல வழிகள் இருந்தாலும் பண்பான இம்முறை நமது திருமணத்தில் பெருமையைப் பன்மடங்காக்குகிறது.

சேஷாத்ரிநாத சாஸ்திரிகள்





டாக்டர் என்ன செய்வது?

தொகுப்பு: டி.ஆர். ரமேஷ், எம்.ஏ.பி.எல்.

எனக்குக் கேன்சரா?

ராஜாத்தி சிவகாசி

எனக்கு வயது 25. என் இடது பக்க மார்பில் சிறிய கட்டி போல் உள்ளது. கேன்சரோ என்று சந்தேகமாக உள்ளது. டாக்டரிடம் சென்று காண்பிக்க வெட்கமாக உள்ளது. கேன்சராக இருந்தால் என் கணவரது உடம்பு என் தொடர்பால் பாதிக்கப்படுமா? தற்போது நான் மூன்று மாத கர்ப்பமாக உள்ளேன். என் வயிற்றில் வளரும் குழந்தை இதனால் பாதிக்கப்படுமா?

டாக்டர் பதில்

அந்தக் கட்டி வலியுடன் இருந்தால் கர்ப்ப காலத்தில் ஏற்படும் மார்பு விரிவின் காரணமாக இருக்கலாம். வலி இல்லாமல் இருந்தால் மிகவும் ஆபத்து. அது கான்சராக இருக்கக் கூடும். எனவே உடனடியாக ஒரு பெண் டாக்டரை அணுகிக் கேளுங்கள். இதில் வெட்கப்படுவதற்கு என்ன இருக்கிறது? மற்றபடி இதற்கும் உடலுறவு கொள்வதற்கும் சம்பந்தமில்லை. கணவருக்குப் பாதிக்காது.

குண்டாக வேண்டும்.

மேரி பூண்டி

எனக்கு வயது 21 ஆகிறது. என் உடல் சதைப் பற்றில்லாமல் மெலிந்து இருக்கிறது. இதனால் என் கன்னமும் குழிந்து காணப்படுகிறது. என் உடல் தேறி கன்னமும் சதைப் பற்றோடு இருப்பதற்கு என்ன செய்ய வேண்டும்?

பதில்:

ஓட்ஸ், கேழ்வரகுக் கஞ்சி சாப்பிட்டால் உடலில் சதை போடும். கொழுப்புச் சத்து நிறைந்த பாலேடு, தயிர், நெய் முதலியவற்றை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.

இள நரைக்கு என்ன செய்ய?

கே. விஜயா திருநெல்வேலி

என் மகனுக்குப் பதினாறு வயது. அவன் தலைமுடி இப்பொழுதே நரை விழத் தொடங்கி விட்டது. அவனுக்குப் பத்து வயதிலேயே இரண்டு மூன்று நரைகள் ஆரம்

பித்து இப்போது சுமார் 300 முடிகளுக்கு மேல் நரைத்து இருக்கிறது. பலவித கை வைத்தியம் செய்து விட்டேன். பலன் இல்லை. மேலும் நரை பரவாமல் இருக்கவும் நரை முடி கறுக்கவும் டானிக்கோ, மருந்தோ தயவு செய்து கூறவும்.

பதில்:

உங்கள் மகளுக்குப் புரதச் சத்துக் குறைபாடு அதிகமாக உள்ளது. புரோட்டீன் சத்து மிகுந்த ஆகாரங்களைத் தரவேண்டும். முக்கியமாக அமினோ அமிலங்கள் கலந்த டானிக்குகளும், வைட்டமின் ஏயும் ஈயும் கலந்த டானிக்குகளும் கொடுங்கள். (உ.ம்) ரோவிகான். மருந்துக் கடைகளில் இந்த விவரத்தைச் சொல்லிக் கேட்டால் உங்களுக்குத் தேவையானதைத் தருவார்கள்.

வயிற்றில் பூச்சித் தொந்தரவு!

சேதலட்சுமி அம்மாள் காஞ்சிபுரம்

எனக்குத் திருமணமாகி நான்கு குழந்தைகள் இருக்கிறார்கள். என்னுடைய வயது 53. எனக்கு வயிற்றில் பூச்சித் தொந்தரவு இருந்து கொண்டே இருக்கிறது. வயிற்றில் பூச்சி இருப்பதால் வயிற்று வலி அடிக்கடி ஏற்பட்டு மேல் வயிற்றில் தொப்புளில் பிடுங்குகிறது.

என்னென்னவோ மருந்துகள் சாப்பிட்டும் குணமாகவில்லை: நீங்கள் தான் ஒரு வழி சொல்லவேண்டும்.

பதில்:

இத்தனை மருந்துகள் சாப்பிட்டும் பூச்சித் தொந்தரவு தொடர்ந்து கொண்டிருக்கிறது என்கிறீர்கள். பூச்சித் தொந்தரவால் தானா என்பதைத் தகுந்த டாக்டரிடம் 'செக்' செய்து கொள்வது நல்லது. Broad Spectrum என்ற மருந்தும் Mebendazole குரூப் மருந்துகளில் ஒன்றை அறு வாரத்துக்கும் சாப்பிடுங்கள். பூச்சித் தொந்தரவாக இருந்தால் நீங்கிவிடும்.

சாவதைத் தவிர வேறு வழியில்லை

. . . .

எனக்கு இன்னும் திருமணம் ஆகவில்லை. ஆனால் நான் சந்தர்ப்ப விதிவசத்தால் என் கற்பை இழந்து விட்டேன். அதனால் எனக்குச் சில உபாதைகள் வந்து விட்டன. கருப்பை தளைந்தாற்போல் தோன்றுகிறது. மாத விடாய் வரும் வழியில் சிறு கட்டி போல் உள்ளது. இதை டாக்டரிடம் காண்பித்தால் என் மானம் போய் என் குடும்பத்துக்குத் தெரிந்துவிடும். நான் சாவதைத் தவிர வேறு வழியில்லை. அது கட்டியா அல்லது யாவருக்குமே அதுபோல் இளாஸ்ஸ் இருக்குமா? அது தொடர்ச்சியாய் இருப்பது இல்லை. விட்டு விட்டு வருவதும் மறைவதுமாக இருக்கிறது.

பதில்:

'அந்த' உறவுக்குப் பின் ஒழுங்காக மாத விலக்கு வருகிறதா? இல்லையென்றால் நீங்கள் கர்ப்பமுற்றிருக்கலாம். அப்படி மாதாமாதம் விட்டு விலக்கு ஏற்பட்டு வருகிறது என்றால் அந்தப் பயம் இல்லை. அது ரகசிய நோயின் (வி.டி..) அறிகுறியாக இருக்கலாம். நீங்கள் தொடர்பு கொண்ட ஆணிடமிருந்து வந்திருக்கும். எனவே வீட்டுக்குத் தெரியாமல் டாக்டரிடம் பரிசோதித்துக் கொள்ளுங்கள். இல்லையென்றால் ஆபத்தில் முடியும்.

ராணி திருச்செந்தூர்

எனக்கு வயது 20. என்னுடைய பிரச்னையை அடுத்தவர்களிடம் கூற முடியாமல் தவிக்கிறேன். முகத்திலும் குறிப்பாக ஆண்களைப் போல் மீசை முளைக்கும் பகுதியிலும் முடி வளர்கிறது. இதனால் வெளியிலோ, காலேஜுக்குச் செல்லவோ, அடுத்தவர்களிடம் நிமிர்ந்து நின்று பேசவோ வெட்கமாக இருக்கிறது.

இதற்குத் தாங்கள் எளிய முறையில் மீண்டும் முடி வளராத வகையில் ஒரு வழி கூறுவீர்களா?

பதில்:

பெண்களுக்கு முகத்தில் முடி வளருவதைத் தடுக்க ஏற்கனவே இதே பகுதியில் பதிலளித்திருக்கிறோம். punice-Stone என்ற ஒருவிதக் கல் பேன்சி கடைகளில் கிடைக்கும். இதில் சோப்பை இழைத்து, இந்தக் கல்லை நன்றாகக் குழைத்து முகத்தில் தேய்த்துக் கொண்டால் நாளடைவில் முடி வளராது.

சாதி மாறிவிட்டது

முருகன் சென்னை-23

நாங்கள் 'வண்ணான்' வகுப்பைச் சேர்ந்தவர்கள். என்னுடைய அண்ணன் கலப்பு மணம் செய்து கொண்டவர். அவரது பையனை என்னுடைய அண்ணி வழி உறவினர் வீட்டிலிருந்து படிக்க ஏற்பாடு செய்தார். பையனைப் பள்ளியில் சேர்த்து விட்டார். இப்போது பையனைவேறொர் பள்ளியில் சேர்க்க, மேற்படி பள்ளியிலிருந்து டிரான்ஸ்பர் சர்டிபிகேட் வாங்கும்போது

பையனின் சாதி 'வன்னியர்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் தவறு இப்போது தான் எங்களுக்கே தெரிய வந்தது. இது அட்மிஷன் நேரமாகையால் பள்ளியில் சேர்க்க வேண்டும். எனவே பையனின் சான்றிதழில் 'வண்ணான்' என்று குறிப்பிட நாங்கள் என்ன செய்ய வேண்டும்?

வழக்கறிஞர் பதில்:

தந்தை எந்த வகுப்பைச் சேர்ந்தவரோ அந்த வகுப்பைச் சேர்ந்தவராகத்தான் மகனும் கருதப்படுவார். எனவே உங்களுடைய அண்ணன், தான் இன்ன ஜாதியைச் சேர்ந்தவர் (அவருடைய எஸ்.எஸ்.எல்.சி. புத்தகம் போன்றவற்றில் குறிக்கப்பட்டிருக்கும்) என்ற அத்தாட்சியுடன் அவர் வசிக்கும் பகுதி தாசில்தாரிடம் விண்ணப்பிக்க வேண்டும். தாசில்தாரும் தகுந்த விசாரணை செய்து, பையனுக்கானவொரு கம்யூனிட்டி சர்ட்டிபிகேட் தருவார். அதை வைத்துக் கொண்டு பையனின் சர்ட்டிபிகேட்டிலும் மாற்றம் செய்யலாம்.

கே.பி. சுந்தராம்பாள் சொத்து பாழாகிறது!

ராணி ஈரோடு

மறைந்த முருகன் அடிமை கே.பி.எஸ். அம்மா அவர்கள் ஏறக் குறைய சுமார் மூன்று கோடி ரூபாய் பெறுமானமுள்ள சொத்துக்களைத் தானே டிராமா, சினிமா கச்சேரி மூலம் சம்பாதித்தார்கள். அவர்கள் இறந்து இரண்டு வருடமாகியும் விட்டது. தன் சொத்துக்களுக்கு ஐந்து பேரை டிரஸ்டிகளாகப் போட்டு தர்ம ஸ்தாபனமாக எழுதி பீச் ஸ்டேஷனில் உள்ள ரிஜிஸ்டரார் ஆபீசில் உயில் எழுதி வைத்துள்ளார்கள். ஆனால் யார் யாரோ அவருடைய சொத்துக்களைப் பங்கு போட்டுத் தலைகால் புரியாமல் இமர் பணவரவால் ஆடுகிறார்கள். சட்டத்தால் எப்படி இதைத் தடுப்பது?

பதில்:

பீச் ஸ்டேஷன் ரிஜிஸ்ட்ரார் ஆபீஸிற்கு, அந்த உயிலின் 'சர்டிபைட் காபி' வேண்டும் என்று மனுச் செய்தால் தருவார்கள். அதில் யார் யாரை டிரஸ்டியாக நியமித்திருக்கிறார் என்பது இருக்கும். அந்த ஐவரில் ஒருவர் சென்னை உயர்நீதி மன்ற ஒரிஜினல் சைடில் வழக்குத் தொடர வேண்டும். இதுபோல கண்டவர்கள்பணத்தை விரயம்செய்கிறார்கள் என்றும் உயிலை நடைமுறைக்குக் கொண்டு வரவேண்டும் என்றும் கேஸ் போட்டால் விசாரித்து நீதி மன்றமும் தக்க தீர்ப்பு வழங்கும். மற்றபடி உயிலின் ஷரத்துக்கள் தெரியாமல் இன்னும் விவரமாக இதற்குப் பதிலளிக்க இயலாது.

அலுவலக வாசலில் காலமானார்.

வி. சங்கரவடிவு அம்மாள் இரவணசமுத்திரம்

எனது கணவரும் இரவண சமுத்திரம் கிராம கர்ணமுமான திரு ஆ. வெங்கடாஜலம் பிள்ளை அவர்கள் கிராம கர்ணமாக சுமார் 40 வருடங்களாகப் பணியாற்றி இருக்கிறார்கள். 10-80 வரையில் குடும்ப நல நிதிக்கு ரூபாய் ஒன்று பிடித்தம் செய்யப்பட்டுள்ளது. தமிழக அரசின் அவசரச் சட்டத்தின் கீழ் பதவி நீக்கம் செய்யப்பட்டதால்அம்பாசமுத்திரம் தாலுக்கா அலுவலகம் முன்பாக மாரடைப்பால் காலமாகி விட்டார்கள். (தாலுகா அலுவலக வாயிலிலேயே).

குடும்ப நல நிதிக்கு விண்ணப்பித்தபோது இத்துடன் இணைக்கப்பட்ட பதில் மட்டுமே வந்தது. அதாவது 14-11-80க்குப் பின் இறந்தால் அரசு குடும்ப நல உதவித் தொகை வழங்க மார்க்கமில்லை. எண்டார்ஸ்மெண்ட் ந. க. மு. 15417-81 தேதி 5-8-81

மாத இழப்பீட்டுத் தொகை அல்லது சம்பளம் உச்ச நீதிமன்றத் தீர்ப்பு வரும்வரை யிலும் கொடுக்கப்படவில்லை.

அரசு ஊழியர்கள் இறந்தால் அவர்கள் பிள்ளைகளுக்குத்தகுதி அடிப்படையில்கொடுக்கப்படும் வேலைக்கு விண்ணப்பம் செய்தும் இதுவரை பதில் இல்லை.

இப்பொழுது நான் என்ன செய்யலாம்?

குடும்ப நல நிதி மற்றும் மாத இழப்பீட்டுத் தொகை வழங்கச் சொல்லி வழக்குத்தொடரலாமா? மற்றும் படித்து வேலையில்லாதிருக்கும் நான்கு புதல்வர்களில் ஒருவருக்கு வேலை கேட்டு வழக்குத் தொடரலாமா?

பதில்:

தமிழ்நாடு முழுவதிலும் உள்ள ஏராளமான வேலையிழந்த பகுதி நேர கிராம முன்சீபுகளும் ஒவ்வொரு வகையில் பாதிக்கப்பட்டுள்ளனர். இவையனைத்தையும் கருத்தில் கொண்டுதான் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளிக்கும்போது, ''வேலையிலிருந்து நீக்கிய கிராம கர்ணங்களின் கணக்கு வழக்குகளைச் சுமுகமான முறையில் தீர்க்க வேண்டும்'' என்று தமிழக அரசுக்குப் பரிந்துரை செய்துள்ளது.

எனவே நீங்கள் உங்களுடைய மாவட்டக் கலெக்டருக்கும், தமிழ்நாடு தலைமைச் செயலருக்கும் உங்கள் நிலைமையை விளக்கி விண்ணப்பித்துக் கொண்டால் கண்டிப்பாக நிவாரணம் கிடைக்கும். புதல்வருக்கு வேலை போன்றவிஷயங்கள்as a matter of Right-ஆகச் சட்டத்தால் தீர்க்க முடியாது.

காய்கறிகளை வாங்குவது எப்படி?

நல்ல கறிகாயாகப் பார்த்து வாங்கவும் வேண்டும். அவை வீணாகாதபடி பாதுகாக்கவும் வேண்டும்.

தக்காளி

தக்காளியைக் கெட்டியாக, உருண்டையாக, செங்காயாகப் பார்த்து வாங்கிக் கொள்ள வேண்டும். மூண்டும் முரடுமாக இருந்தால் சாறு அதிகமாகவும் சதைப் பகுதி குறைவாகவும் இருக்கும். பழம் மெத்தென்று இருந்தால் சாறு கெட்டுப் போயிருக்கும்.

வெங்காயம்

நாட்டு வெங்காயம் (அதாவது சாம்பார் வெங்காயம்) ருசியானது. உடம்புக்கும் நல்லது.

வெங்காயத்தின் நடுவில் காம்பு, சோளத் தட்டை போல் இருந்தால் வாங்கக் கூடாது. வெங்காயத்தின் நுனிப் பாகத்தை அழுத்தினால் கெட்டியாக இருக்க வேண்டும். நுனி மெத்தென்று இருந்தால் அழுகத் தொடங்கியதென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

உருளைக்கிழங்கு

செம்மண்ணில் பயிரான உருளைக் கிழங்குகள் உயர்வானவை. கிழங்கு கெட்டியாகவும், தழும்புகள் இல்லாமலும் ஓட்டைகள் இல்லாமலும் இருக்கிறதா என்று பார்த்து வாங்க வேண்டும். பச்சை நிறத் தழும்புகள் இருப்பவை நன்றாக இருக்காது. சிறு முளை கண்டவற்றையும், தோல் சுருங்கியவற்றையும் வாங்கக் கூடாது. இவற்றை வாங்கியவுடன் கம்பிகளால் ஆன கூடையில் போட்டுக் காற்றோட்டமாக வைக்க வேண்டும்.

முள்ளங்கி

இவை சற்றுப் பருத்தும், நீண்டுமிருந்து, நடுவில் புதிய இலைகளும் ஓரத்தில் பச்சை இலைகளும் இருக்கும்படி பார்த்து வாங்க வேண்டும். கையால் தட்டும்போது 'பொத்' 'பொத்' என்று சப்தம் வந்தால் சமைக்க உபயோகப்படாது.

கத்தரிக்காய்

காயைச் சிறு ஓட்டை கூட இல்லாமல் பார்த்து வாங்கினால்தான் புழு இல்லாமல் இருக்கும். காய் முழுதும் ஒரே நிறத்தில் 'பளபள' வென்று இருக்க வேண்டும். காம்புடன் கூடிய பாவாடை நீண்டிருந்தால் காய் இளசாய் இருக்கும். பச்சை நிறக் காய்கள் நன்றாக இருக்கும். பாவாடை குட்டையாக இருப்பின் காய் முற்றியது என அறியலாம். கத்தரிக்காயை வாங்கியவுடன் ஈரம் இருந்தால் துடைத்துவிட்டுக் கூடையில் போட்டு வைக்க வேண்டும். வெய்யில் காலத்தில் ஈரத் துணியால் மூடிவைத்தால் கன்றிப் போகாமல் இருக்கும்.



கொத்துமல்லி, கீரை வகைகள்

இவற்றை வாங்கியவுடன் ஒரு கிண்ணத்தில் தண்ணீரை வைத்து வேர்க்காம்புகளை மட்டும் நனையும்படி நிமிர்த்தி வைத்தால் வாடாமலும், அழுகாமலும் இருக்கும்.

வெண்டைக்காய்

நல்ல பச்சை நிறத்தில் இருப்பவை ருசியாக இருக்கும். இளம் மஞ்சள் நிறத்திலும் வெள்ளை நிறத்திலும் இருப்பவை அவ்வளவு ருசியாக இருப்பதில்லை. நுனியை ஒடித்தால் பட்டென்று ஒடிய வேண்டும். வெண்டைக்காயிலும் துளை இல்லாமல் வாங்க வேண்டும்.

முருங்கைக்காய்

இவை நல்ல கரும் பச்சை நிறத்தில் சற்றுப் பருமனாகவும் உருண்டையாகவும் இருக்கும்படி வாங்கிக் கொள்ள வேண்டும். இரண்டு முனைகளையும் பிடித்துக் கொண்டு முறுக்கினால் வளைந்து கொடுக்க வேண்டும். இது இளசாக இருக்கும். கட்டை போல் நின்றால் முற்றல். முப்பட்டையாகவோ சற்று மஞ்சள் கலந்த பச்சை நிறத்திலோ விதைகள் வெளிக்குத் தெரியும்படியாக மேடாகவோ இருந்தால் காய் முற்றல்.

கூட்டைக்கோஸ்

இலைகள் வெள்ளையாக இருக்கும் கோஸ் முரடாக இருக்கும். இலைகள் பச்சையாக இருந்தால் இளசாக இருக்கும். காய் உருவத்திற்சின்னதாகவும் கனமுள்ளதாகவும் இருந்தால் ருசியாக இருக்கும். நடுக் காம்பு வெள்ளையாகவும் நாற்றம் இல்லாமலும் இருந்தால் காய் புதியது. கடைகளில் காய் புதியது போல் இருக்க வேண்டும் என்பதற்காக மேல் இலைகளை எடுத்துவிட்டுக் காம்பையும் சிறிது நறுக்கி வைத்து விடுவார்கள். பார்ப்பதற்குப் புதியது போல் நம்மை ஏமாற்றிவிடும். காம்பை மோந்து பார்த்தால் வாசனை தெரிந்துவிடும். முட்டைகோஸின் காம்பில் பிளஸ் குறியைப் போல ஓர் அங்குல ஆழத்துக்குக் கத்தியால் நறுக்கி வைத்தால் அது அழுகாமல் சில நாட்கள்வரை நன்றாக இருக்கும்.

வாழைக்காய்

வாங்கி வந்தவுடன் காயை அலம்பிவிட்டு ஒரு வாளித் தண்ணீரில் போட்டு வைத்தால் வாடாமலும் பழுக்காமலும் இருக்கும்.

பீர்க்கங்காய்

காம்புப்புறம் பச்சைப் பசேல் என்று இருக்க வேண்டும். சற்று வெளுத்திருந்தால் காய் முற்றல் எனத் தெரிந்து கொள்ள வேண்டும். சமைப்பதற்கு முன் ஒரு மணி நேரம் தண்ணீரில் ஊற வைத்தால் தோல் எளிதில் சீவ வரும்.

எலுமிச்சம்பழம்

நிறம் நல்ல மஞ்சளாகவும், தோல் மெல்லியதாகவும் இருப்பவற்றில் நிறையச் சாறு இருக்கும். காய் மெத்தென்று அழுங்கினாலும் காம்புக்கருகில் கன்றியிருந்தாலும் நாட்பட்ட பழமாக இருக்கும். இவற்றை ஈரமில்லாமல் துடைத்து வைக்க வேண்டும். வெயில் காலத்தில் வாயகன்ற புட்டிகளிலோ, ஈர மணலிலோ போட்டு வைத்தால் காயாமல் இருக்கும்.

வே.வி. அழகம்மாள் கிருஷ்ணராஜ்

குறுநாவல்

நாடி வந்த நேரத்தில்

வாஸந்தி



கப்பையும் ஸாஸரையும் கழுவிக் கொண்டிருந்த நந்திதாவின் கைகள் லேசாக நடுங்கின. அலோக் மித்ரா சாப்பாட்டு மேஜையின் மேல் பேப்பரை விரித்தபடி அதன் மேல் பார்வையைப் பதித்து அவள் சொன்ன வார்த்தைகளின் பாதிப்பு ஏதும் காண்பிக்காத முகத்தோடு உட்கார்ந்திருந்தான். ஒரு சின்னப் புன்னகைக்கூட அவனது மெல்லிய சிவந்த அதரங்களில் இருந்த மாதிரி தோன்றிற்று.

அவளுக்குத்தான் முகம் சிவந்து போயிற்று மூச்சு லேசாக இறைத்தது. கையில் இருந்த பீங்கான் கோப்பைகள் கைதவறி விழுந்து உடைந்துவிடுமோ என்று பயமாக இருந்தது.

''நந்திதா!''

அவள் திடுக்கிட்டு நிமிர்ந்து பார்த்தாள். அலோக்கின் முகத்தில் ஒரு மென்மையான புன்னகை தெரிந்தது.

''பாத்திரத்தை அப்புறம் தேய்த்துக் கொள்ளலாம்!''

அவள் கையை அவசரமாகக் கழுவிக் கொண்டு சின்னத் துவாலையால் துடைத்துக் கொண்டு ஜன்னல் அருகில் நின்று பார்வையை வெளியில் செலுத்தினாள். சரிந்து விழும் மலைப் பாதைகள் — வீட்டின் முன் இருந்த வெட்ட வெளியில் குழந்தைகளின் ஆர்ப்பாட்டக் கூச்சலும் சிரிப்பும் கேட்டது. விளையாட்டின் உஷ்ணம் கன்னங்களில் ஏறி அதன் சிவப்பு இளம் காலை வெய்யிலில் பளபளத்தது. கரணையாய் கைகளும் காலும் முகங்களின் பூரிப்பும் உலகத்தில் சந்தோஷத்தைத் தவிர வேறு எதுவுமே கிடையாது என்கிற நிச்சயமும்... இந்த சந்தோஷக் கும்பலில் அவளுடைய வாரிசுகள் ஸோனியாவும் பப்லுவும்....

அவள் மெள்ள . உள்ளே திரும்பினாள். அலோக் அலுவலகம் போகத் தயாராகிக் கொண்டிருந்தான். அவனுடைய நிதானத்தையும் சாந்தத்தையும் பார்க்கப் பார்க்க அவளுக்கு வியப்பாக இருந்தது. இப்படிக் கூட ஒரு மனிதன் இருப்பானா? இந்த மாதிரி இவன் இருப்பதற்கு ஏதேனும் பிரத்யேகக் காரணம் இருக்குமா? இவனுக்கு ஆழமான உணர்வுகளே இருக்காதோ? இவனுடைய மனதில் ஒரு தபஸ்வியின் காருண்யம் இருக்குமோ?

தபஸ்வி.....

அதனால்தான் அவளுள் இந்த மாதிரி வக்கிர எண்ணங்கள் தோன்றுகின்றனவா?

''நந்திதா! என்ன யோசனை?''

''நான் செய்வது சரியா தப்பா என்று எனக்குக் குழப்பமாக இருக்கிறது அலோக்!''

அவன் புன்னகையுடன் கைப் பெட்டியைத் தூக்கிக் கொண்டு கிளம்பினான்.

''ஒரு முடிவை எடுக்கத் துணிந்தவுடன் குழப்பம் போய்விடும் நந்திதா!''

அவள் தயக்கத்துடன் அவனைப் பார்த்தாள். ''உனக்கு இதில் ஏதும் வருத்தமிருக்கிறதா அலோக்?''

''என் வருத்தத்தைப் பற்றி நீ கவலைப் படக் கூடாது. உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம்!''

அவன் பெட்டியைத் தூக்கிக் கொண்டு விருவிருவென்று வாசல் சின்னப் படிகளைக் கடந்து, தெருவுக்குச் சென்று விளையாடிக் கொண்டிருக்கும் செல்வங்களைச் செல்லமாகத் தட்டிவிட்டுப் புன்னகையுடன் போகும் அந்த அநாயாசத்தை அவள் திகைப்புடன் பார்த்துக் கொண்டு நின்றாள். வளைந்து வளைந்து செல்லும் அந்த மலைப் பாதையில் அவன் அலுவலகத்துக்கு நடந்து செல்வதை மெல்ல மெல்ல மறைந்து போகும் வரை பார்த்து அவள் சுய நினைவுக்கு வந்தவளாய் வேலையைத் தொடர்ந்தாள்.

நிறங்களைச் சந்திக்கும் போது மனதில் சலனம் மேற்படுவதை உணர்கிறோம். இது நிறத்திற்குத் தக்கவாறு மாறுபடும். உடலில் மாற்றத்தை ஏற்படுத்தவும் உதவி புரியும்.

'என் வருத்தத்தைப் பற்றி நீ கவலைப் படக் கூடாது....'

அவனை அறியாமல், காரணம் புரியாமல் அவளுள் ஒரு எரிச்சல் ஏற்பட்டது.

இவன் ஏன் இவ்வளவு நல்லவனாக இருக்கிறான்? இவன் ஒரு சராசரி மனிதனாக, கோபக்காரனாக, சந்தேகிக்கிறவனாக இருக்கக் கூடாதா? இவன் இப்படியெல்லாம் இருந்திருந்தால் தன்னுள் இத்தனை குழப்பம் இருந்திருக்காது என்று தோன்றிற்று.

அவள் ஸோனியாவையும் பப்லுவையும் உள்ளே கூப்பிட்டுக் காலை உணவைக் கொடுத்துவிட்டு மறுபடி விளையாட அனுப்பினாள். ஆகாரம் ஏதுவும் சாப்பிடப் பிடிக்காமல் அவள் ஒரு டம்ளர் பால் மட்டும் அருந்திவிட்டு அவசரமாக மேஜையைச் சுத்தம்-செய்துவிட்டுத் தன் அறைக்குச் சென்றாள்.

கட்டிலுக்கு அடியில் இருந்த பெரிய துத்தநாகப் பெட்டியை இழுத்துத் திறந்து பழைய துணிகளுக்கடியில் இருந்த அந்த காகிதக் கட்டை எடுத்துப் பிரிக்கையில் நெற்றியில் வியர்வை அரும்பிற்று. சின்னப் பெண்ணின் கள்ளத்தனம் மாதிரி மார்பு படபடத்தது. கடிதத்தைப் பிரித்த விநாடியில் மனசை ஒரு சுகந்தம் சூழ்ந்தது.

''நந்து டார்லிங்....''

அவன் அந்த க்ஷணம் எதிரில் நின்று அவளை ஆழமாகப் பார்க்கிற மாதிரி இருந்தது. கரிய மீசைக்கடியில் வரிசைப் பற்கள் பளிச்சென்று மின்ன சிரிக்கிற மாதிரி அவளுள் ஒரு பிரவாகம் பொங்கிற்று.

''மை டியரஸ்ட் நந்து... எனக்குப் படிக்க முடிவதில்லை. பக்கங்களுக்கு நடுவில் உன் முகம் நிற்கிறது. உன் பார்வை என்னைச் சுண்டி இழுக்கிறது.''

'நான் ஒரு பெரிய ஐ. ஏ. எஸ். ஆபீசராக வேண்டும் என்று என் பெற்றோர் கனவு காண்கிறார்கள். எனக்கு எந்த உயர் பதவியின் மேலும் ஆசையில்லை. ஷில்லாங்கிலோ அல்லது அதற்குப் பக்கத்தில் இருக்கும் சின்னக் கிராமத்திலோ ஒரு சாதாரண பள்ளி வாத்தியார் வேலை இருந்தாலும் எனக்குப் போதும் — நீ என் அருகில் இருந்தால்....'

ஒவ்வொரு கடிதத்திலும் இதே மாதிரியான வரிகள். பெரிய பதவி எனக்கு விருப்பமில்லை என் பெற்றோருக்காகப் படிக்கிறேன் என்ற புலம்பல்.

அவள் கண்களில் சட்டென்று நீர் நிறைந்தது. பத்து வருஷங்கள் ஏற்படுத்திவிட்ட இடைவெளியின் பிரக்ஞையே நழுவிப் போயிற்று. நேற்றைக்கு முன் தினம்தான் அவன் லேக்கின் கரையில் பூப்பாத்திகளுக்கு நடுவில் அவள் கையைப் பிடித்து மிருதுவான உள்ளங்கையில் அடித்து சத்தியம் பண்ணின மாதிரி இருந்தது.

''உன்னை நான் ஏமாற்ற மாட்டேன், நந்திதா!'' — பத்து வருடங்களாகத் தேக்கி வைத்திருந்த ஏமாற்றம் மடை திறந்து கொண்டு கிளம்பினாற்போல் அவள் தன்னை மறந்து விசித்து விசித்து அழ ஆரம்பித்தாள்.

''மம்மி!.... மம்மி!''

பப்லுவும் ஸோனியாவும், முழங்கால்மேல் கவிழ்ந்திருந்த அவள் முதுகை உலுக்கினார்கள்.

''ஏன் மம்மி அழறே? ஷேம் ஷேம்!''

அவள் வெட்கமில்லாமல் அழுத அழுகையை நிறுத்தி முகத்தைத் துடைத்துக் கொண்டு தலையை நிமிர்த்தினாள்.

''ஏன் மம்மி அழுதே?''

''ஒண்ணுமில்லே ஸோனியா. நீ விளையாடு போ!''

''ஏதாவது கெட்டுப் போச்சிட்டியா?''

அவள் தன்னைச் சமாளித்துக் கொண்டு எழுந்தாள். லேசாகப் புன்னகைத்தபடி ''ஆமாம்'' என்றாள்.

''என்ன கெட்டுப் போச்சே?''

அவள் பதில் சொல்லாமல் எழுந்து வாஷ் பேஸினுக்குச் சென்று குளிர்ந்த நீரை முகத்தில் விட்டுக் கொண்டு அழுந்தித் துடைத்துக் கொண்டாள். துவாலையை முகத்திலிருந்து அகற்றும்போது ஸோனியா அவளையே பார்த்தபடி நின்றிருந்தாள். 'உன் நெருங்கிய தோழி நான்' என்கிற பார்வையுடன்.

''டாடி திட்டமாட்டார். பயப்படாதே''

நந்தித்தா குனிந்து ஸோனியாவின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''அது எனக்குத் தெரியும் கண்ணு!''

அவள் பரபரவென்று காகிதக் கட்டையெல்லாம் மறுபடி கட்டிப் பெட்டியின் அடியில் வைத்துத் துணிகளைப் போட்டு மறைத்துப் பெட்டியைக் கட்டிலுக்கு அடியில் நகர்த்தினாள். ஸோனியாவுக்கும் பப்லுவுக்கும் உடையை மாற்றி காய்கறிக் கூடையைப் பார்த்து. 'ஓ. நாளைக்கு நான் போனால் திரும்பி எப்பொழுது வருவேன் என்று தெரியாது. இரண்டு நாட்களுக்கு வாங்கி வைத்துவிட்டுப் போனால்தான் அலோக்குக்குக் கஷ்டம் இல்லாமல் இருக்கும்' என்று தனக்குள் சொல்லியபடி அவள் பையைத் தூக்கிக் கொண்டு கிளம்பினாள்.

''ஸோனியா! பக்கத்து வீட்டிலே விளையாடு பப்லுவையும் வெச்சிண்டு — நான் மார்க்கெட்டுக்குப் போய் வரேன்.''

''சரி மம்மி.''

வீட்டுக் கதவைப் பூட்டுகையில் கை விரல்கள் சொர சொரப்பாகப் போயிருப்பது தெரிந்தது. வெள்ளைக் கையில் மெல்லிய கரிய கோடுகளாய்த் தெரிந்தன.

''உன் கை ரோஜா இதழ் மாதிரி இருக்கு நந்து!''

இப்பொழுது இந்தக் கையுடனா எதிரில் போய் நிற்கிறது?

இத்தனை வருஷங்களுக்குப் பின் முன் அறிவிப்பில்லாமல் அவன் எதிரில் போய் நின்றால் அவனுக்கு எப்படி இருக்கும் என்று அவள் யோசித்துப்பார்த்தாள். அதிர்ந்து போவானா? விரைந்து வந்து திகைப்பு நீங்காமலே 'நந்து!' என்று இப்பொழுது சொர சொரப்பாகிப் போன கையைப் பிடித்துக் கொள்வானா?

அந்த நினைப்பு அவளுள் ஒரு கூச்சத்தை ஏற்படுத்திற்று — எந்த உந்துதல் நம்மை இப்படி மறுபடி அவனிடம் தள்ளுகிறது? எந்த தைரியம் இப்பொழுது கிளம்ப வைக்கிறது? அவளுக்கு நினைக்க நினைக்கக் குழப்பமாக இருந்தது. இந்த உந்துதலும் தைரியமும் தன்னுள் எப்பொழுதுமே இருந்திருக்க வேண்டும் என்று தோன்றிற்று. இல்லாவிட்டால் ஒரு மூன்றாம் மனுஷி சொன்ன செய்தியைக் கேட்டு தட்டி எழுப்பப்பட்ட மாதிரி இந்த உடம்பும் மனசும் சிலிர்த்துக் கொண்டு இயங்காது.

அப்புறம் இந்த அலோக்....

ஓ... இந்த அலோக் இப்படி இருப்பதே நமக்குள் ஒரு பெரிய பலவீனத்தை ஏற்படுத்துகிறது....

நேற்று அலோக்கும் அவளும் ஸேமுக்ராவுக்கு யார் வீட்டுக்கோ போயிருந்தார்கள். அங்கு அவளுடைய பால்ய சிநேகிதி லில்லி வந்திருந்தாள். திடீரென்று எல்லார் முன்னிலையிலும் அந்தக் கேள்வியைக் கேட்டாள்.

''நந்திதா, கௌஹாட்டியில் நான் யாரை பார்த்தேன் தெரியுமா?''

''யாரை?''

''சொன்னால் நீ ஆச்சரியப்படுவாய்! தினேஷ் பராஷர் — உன்னுடைய ஓல்ட் ப்ளேம்!''

அவள் ஏதோ பெரிய ஹாஸ்யத்தைச் சொன்னாற்போல் சிரித்தாள்.

நந்தித்தாவுக்கு முகம் வெளுத்துப்போயிற்று. வேகமாக அடித்துக் கொண்ட நெஞ்சை சமாளித்துக் கொண்டு அவள் சிரித்தாள்.

''அப்படியா?''

''அவன் இப்ப ரொம்பப் பெரிய ஆள். நந்தித்தா! சீஃப் கமிஷனர் என்றால் பார்த்துக்கொள்ளேன்.''

என்னென்னவோ கேள்வி கேட்க வேண்டும்

வித்தியாசமான ஆடைகளுடன்காட்சியளிக்கும் இளம் பெண்கள் வரிசையில், நீல நிற (Blue Colour) ஆடையணிந்த பெண்ணே மிகமிக ரம்மியமாகத் தோற்ற மளிப்பாள், காரணம் — வெற்றிக்கு உதவி புரிய உடனிருப்பது நீலநிறமேயாகும். (உயர்ந்தும், பரந்தும் காணப்படும் வானுக்கும் கடலுக்கும் நீலநிறம்)

என்று மனசு பறந்தது. அவள் தன்னைக் கட்டுப்படுத்திக் கொண்டு உட்கார்ந்திருந்தாள்.

''என்ன பெரிய மனுஷனாய் இருந்தால் என்ன நந்தித்தா? அவனுக்குக் கொஞ்சம்கூட சுகமில்லை என்று கௌஹாத்தியில் எல்லாரும் பேசிக் கொள்கிறார்கள்.''

அவள் திடுக்கிட்டு 'ஏன்' என்றாள்.

''அவன் பெண்டாட்டிக்கும் அவனுக்கும் ஒத்துக்கொள்ளவில்லையாம். இரண்டு பேரும் பேசிக்கொள்வதுகூட இல்லையாம்.''

அவளுக்கு நாக்கு உலர்ந்து போயிற்று.

''இரண்டு பேரும் சேர்ந்து இல்லையா?''

''தெரியாது. அவன் சந்தோஷமாக இல்லை என்று சொல்கிறார்கள்.''

அதற்குப் பிறகு அவளுக்கு எதிலுமே புத்தி போகவில்லை.

''அவன் சந்தோஷமாக இல்லை'' சட்டென்று ஒரு காருண்யமும் அன்பும் பிரவாக

மாய் அவளுள் பொங்கியது. தான் தான் அவனுடைய துக்கத்துக்கு மறைமுகமான காரணம் என்கிற குற்ற உணர்வுஉறுத்திற்று. அலோக் எதுவுமே பேசாமல் அவளை அவ ளுடைய சிந்தனைக்குள்ளிருந்து வெளியே இழுக்க மனசில்லாதவன் போல கூட நடந்து வந்தான். தினேஷைப் பற்றி அவ ணுக்கு முன்பே தெரியும் என்கிற உணர்வில் அவள் மெள்ளச் சொன்னாள்.

''தினேஷ் சந்தோஷமாக இல்லை என்கிற செய்தி எனக்கு ரொம்ப வருத்தமாக இருக் கிறது அலோக்!''

''இன்னமும் உன்னை நினைத்துக் கொண்டு அவன் உருகுகிருளு?''


அலோக்கின் கேலிச் சிரிப்பை லட்சியம் செய்யாமல் அவள் தன்னுள் மூழ்கினவளாய் நடந்தாள். அன்று இரவு முழுவதும் தூக்கம் வராமல் புரண்டு மறுநாள் காலையில் தான் அலோக்கை அந்தக்கேள்வி கேட்டாள்—

2

காலையில் சமையல் அறையிலிருந்துவந்த சத்தத்தைக் கேட்டு அவள் விழித்துக்கொண் டாள். ஜன்னல் வழியாக உள்ளே நுழைந்த வெய்யிலிருந்து விடிந்து நேரமாகிவிட்டது என்று தெரிந்தது. அவள் அவசரமாக எழுந்து பல்லைத் தேய்த்து விட்டுச் சமையலறைக்குள் நுழைந்தாள்.

கோப்பைகளில் அலோக் தேநீரை ஊற்றிக் கொண் டிருந்தான். அவளைக் கண்ட தும் உற்சாகமாக 'குட் மார்னிங்!' என்ருன்.

அவள்மெல்லியகுரலில் 'குட் மார்னிங்'



என்றபடி கோப்பையை எடுத்துக் கொண்டாள். அவனுடைய உற்சாகமும் நிர்மலமான முகமும் அவளுள் ஒரு சஞ்சலத்தை ஏற்படுத்திற்று. இவனிடம் தன் மனசிலிருப்பதை எப்படிச் சொல்வது என்று தயக்கமேற்பட்டது.

"வாட் இஸ் தி மேட்டர் நந்திதா?"

அலோக்கின் வார்த்தைகள் மிருதுவாக வந்தன. "ராத்திரி நீ தூங்கவில்லையா?"

"இல்லை" என்றாள் அவள் தலையைக் குனிந்தபடி. "அலோக், நான் ஒன்று சொன்னால் நீ தப்பாக நினைக்க மாட்டாயே?"

"நீ எதைச் சொன்னாலும் தப்பாக நினைக்க மாட்டேன்."

அவள் கோப்பை மேல் இருந்த பார்வையை அகற்றாமல், தயக்கத்துடன், அடிவயிற்றிலிருந்து பொங்கும் துக்கத்தின் காரணம் புரியாமல் மெல்லிய குரலில் சொன்னாள்.

"தினேஷைப் பற்றிக் கேள்விப்பட்டதிலிருந்து என்னைக் கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை அலோக். அவனை ஒரு தடவை பார்த்துவிட்டு வந்தால்தான் சமாதானமாக இருக்கும்போல் இருக்கிறது. இங்கேதான் கௌஹாத்தியில் இருக்கிறானாம்."

அலோக்கின் பார்வை அவள் மேல் சில விநாடிகள் நின்றது. மெல்லிய காருண்யம் அதில் தெரிந்தது.

"பார்த்துவிட்டு வந்தால் உனக்குச் சமாதானமாக இருக்கும் என்றால் போய் பார்த்துவிட்டு வா. நாளைக்குச் சனிக்கிழமை. எனக்கு ஆபீஸ் இல்லை. நான் குழந்தைகளைப் பார்த்துக் கொள்கிறேன். நீ காலை முதல் பஸ்ஸில் போனாயானால் மாலையில் பஸ்ஸைப் பிடித்து இரவுக்குள் வந்துவிடலாம்."

அவனுடைய பதட்டமில்லாத பேச்சு அவளுக்கு நம்ப முடியாததாக இருந்தது.

"நான் பார்த்துவிட்டு வந்து விடுவேன் அலோக்!"

அவன் அவள் கைமேல் தன் கையை வைத்தான்.

"எனக்கு உன்மேல் நம்பிக்கை இருக்கிறது, நந்திதா!"

அவள் தலையைக் குனிந்து கொண்டாள். 'எனக்கே என்மீது நம்பிக்கை இல்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள். 'தினேஷைப் பார்த்ததும் எனக்குள் எந்த மாதிரி கிளர்ச்சி உண்டாகும் என்று எனக்கே தெரியாது....'

அலோக் கோப்பையை வைத்துவிட்டு ஜன்னல் வழியே தெரிந்த மலைத் தொடரை, வானை நோக்கி நிமிர்ந்திருந்த பைன் மரங்களைப் பார்த்தபடி மிருதுவாகச் சொன்னான்.

"பத்து வருஷமாக அந்தத் தினேஷின் நினைவு உன்னிடம் தொடர்ந்திருக்கவேண்டுமானால் உனக்கு அவன் மேல் ரொம்ப ஆழமான பிரியம் இருந்திருக்க வேண்டும். ஆனால் பத்து வருஷம் இடையில் ஓடிவிட்டது நந்திதா! அன்றைய பதினெட்டு வயசுக்கும் இன்றைய இருபத்தி எட்டு வயசுக்கும் நிறைய வித்தியாசம் ஏற்பட்டிருக்க வேண்டும். உனக்கு இரண்டு குழந்தைகள் ஆகிவிட்டனர்."

அவள் பதிலேதும் சொல்லாமல் எந்தக் காரியத்தையும் தொடரமுடியாமல் நின்றாள்.

அவன் அந்தப் பைன் மரங்களைப் பார்த்தபடி தொடர்ந்தான்.

"என்னிடம் உனக்கு ஏதேனும் குறை இருக்குமானால் அதற்குநான்பொறுப்பில்லை நந்திதா! உன்னிடம் நான் ஆத்மார்த்தமாகப் பிரியம் வைத்திருக்கிறேன். எனக்கு அதைச் சரியாகக் காட்டத் தெரிந்திருக்காது."



திடீரென்று அவள் தன்னைக் கட்டுப்படுத்திக்கொள்ள முடியாமல் சப்தமில்லாமல் அழுதாள். ஒரு வழியாகத் தன்னைச் சமாளித்துக் கொண்டு அவள் தலைநிமிர்ந்தபோது அவன் அங்கு இல்லை.

இப்போது மார்க்கெட்டை நோக்கி நடக்கையில் இதெல்லாம் மறுபடி நினைவுக்கு வந்து மனசு திரும்பவும் குழம்பி நின்றது.

அலோக்கிடம் தனக்கு ஏதேனும் குறை என்று சொன்னால் தன்னைவிட நன்றி கெட்டவள் யாரும் இருக்க முடியாது என்று தோன்றிற்று. அவனிடம் அவளுக்கு அன்பில்லாமல் இல்லை. இருந்தும் அந்த அன்பில் ஒரு பரபரப்பு இல்லை. ஒரு கிளர்ச்சி இல்லை. ஒரு வேகம் இல்லை. முன்பு தினேஷிடம் ஏற்பட்ட இந்த உணர்வுகள் எல்லாம் மனசை இறக்கை கட்டிப் பறக்க வைத்த உணர்வுகள். அவை இவனிடம் ஏற்படுவதில்லை. ஓ, காதலுக்கும் இந்தக் கட்டாய தாம்பத்தியத்தில் மலரும் அன்புக்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது. நம் மனத்தில் இன்னும் யௌவனம் இருக்கிறது..பரபரப்புக்கும் துள்ளலுக்கும் ஏங்கும் மனசு இருக்கிறது. அதனால்தான் அலோக்கின் நிதானமான அன்பு நமக்கு அலுத்துவிட்டது....



பச்சை நிறம்:(Green Colour)

கண்களுக்கு ஆரோக்கியமளிப்பது.
(கண் ஆஸ்பத்திரி சுவர்களில் அலங்காரத்திற்கு இந்த நிறத்தைப் பயன்படுத்துவதன் நோக்கம், கண்பார்வையை க்ஷேமம் படுத்துவதற்காகவே).

அதைவிட — தினேஷுடன் சல்லாபித்த நாட்களின் நினைவு இன்னும் பசுமையாக இருக்கிறது. அது ஏற்படுத்திய ஜ்வாலையின் வெப்பம் இன்னும் இருக்கிறது. நீறு பூத்த நெருப்பாய். அதுதான் நேற்று அவனைப் பற்றிக் கேள்விப்பட்டதும் கிளறிவிட்ட மாதிரி இப்பொழுது பற்றிக் கொண்டு தகிக்கிறது.

''நந்திதா!''

அவள் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தாள். வல்லி தூரத்தில் தன்னுடைய பருத்த கைகளை ஆட்டிச் சிரித்தாள்.

''எங்கே கிளம்பினே நந்திதா?''

''சும்மா மார்க்கெட்டுக்கு!''

''வா! நானும் உன்னோடு வரேன்!''

அவர்கள் சேர்ந்து நடக்கையில் வல்லி சளசளவென்று பேசியபடியே வந்தாள். தான் வசிக்கும் பம்பாய் நகரின் அடைசலையும் புழுக்கத்தையும், அது எதையுமே பாதிக்காத தன் பிள்ளைகள் கணவனையும், நீங்கள் எக்கேடு கெட்டுப் போங்கள். நான் எங்கள் ஊருக்குப் போகிறேன் என்று சொல்லிவிட்டு மூட்டை கட்டிக் கொண்டு வந்த பிரதாபத்தை அளந்து கொண்டிருந்தாள். நந்திதாவுக்கு எதுவுமே காதில் விழவில்லை. மனசும் எண்ணமும் செக்கு மாடு மாதிரி ஒரே இடத்திற்கு வந்து வந்து நின்றன.

''வல்லி! தினேஷைப் பார்த்தேன் என்றாயே, இப்பொழுது எப்படி இருக்கிறான்?''

சட்டென்று வந்த கேள்வியில் வல்லி ஒரு விநாடி திகைத்துப் பிறகு அவளை வியப்புடன் பார்த்துப் புன்னகைத்தாள்.

''ஓ, அவனுக்கென்ன, துரை மாதிரி இருக்கிறான். பெரிய படிப்பும் பெரிய உத்தியோகமும் இருக்கும்போது கம்பீரமும் சேர்ந்து கொள்கிறது. முன்பே நன்றாக இருப்பான். அதைக் கண்டுதானே நீ மயங்கினே!''

நந்திதா தன் கூச்சத்தை மறைக்கச் சிரித்தாள்.

''அதெல்லாம் ஒரு காலம் வல்லி! நானும் தானே நன்றாக இருந்தேன்!''

''ஓ! ஆமாம். பூ மாதிரி இருப்பாய் புதுசாய்! அந்த அழகெல்லாம் எங்கே இப்போ போய் விட்டது என்று தெரியவில்லையே! தினேஷும் நீயும் அருமையான ஜோடியாக இருந்திருப்பீர்கள். என்ன ஆயிற்று நந்திதா, உங்கள் கல்யாணம் ஏன் நடக்கவில்லை? நான் இதுவரை உன்னை நேரிடையாகக் கேட்கவில்லை.''

நந்திதா தலையைக்குனிந்து கொண்டாள். ''அவனுடைய பெற்றோர்கள் ஒத்துக்கொள்ளவில்லை வல்லி. அவன் ஒரே பிள்ளை அவர்களுக்கு. அவர்கள் உத்தர் பிரதேசத்தைச் சேர்ந்தவர்கள். அஸ்ஸாம்காரியான என்னை ஏற்றுக்கொள்ள அவர்கள் சம்மதிக்கவில்லை.. என் பெற்றோர்களும் சம்மதிக்கவில்லை!''

''கடவுளே! இந்த மாதிரிப் பெற்றோர்களை வைத்துக் கொண்டு நீங்கள் எந்தத் தைரியத்தில் அப்படிச் சுற்றினீர்கள்?''

நந்திதா சின்னப் பெண்ணைப் போல் சிரித்தாள்.

''அதில் ஒரு த்ரில் இருந்தது வல்லி!''

''என்ன த்ரிலோ! உன் கணவர் நல்லவராக இருக்கக் கொண்டு பிழைத்தாய்!''

சட்டென்று நந்திதா மௌனமானாள். சுயநினைவுக்கு வந்த மாதிரி.

''அலோக் உன்னை ரொம்ப நன்றாக வைத்துக்கொண்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன். சந்தோஷமாக இருக்கிறாயா நந்திதா?''

''இருக்கிறேன், வல்லி!''

''நீ அதிர்ஷ்டம் செய்தவள் நந்திதா! தினேஷ் சந்தோஷமாகவே இல்லை என்கிறார்கள் பாவம்!''

அவனுடைய துக்கத்துக்கு நீதான் காரணம் என்கிற குற்றச்சாட்டு தெரிந்தது அவனுடைய குரலில்.

''அவனுடைய பெற்றோர்கள் பார்த்து ஏற்பாடு செய்த பெண் மகாராங்கிக்காரியாம். இவனை லட்சியமே செய்வதில்லையாம்!''

அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. தினேஷிடம் அன்பு செலுத்தாமல் இருப்பது எப்படி சாத்தியம் என்று தோன்றிற்று. எத்தனை கனிவானவன் அவன்! எத்தனை பிரியம் வைக்கத் தெரிந்தவன்! அதைக் காட்டத் தெரிந்தவன்!

''இந்தப் பெரியவர்களுக்குச் சில சமயம் தூரப் பார்வையே இருப்பதில்லை நந்திதா! தினேஷை உன்னிடமிருந்து பிரித்து இந்த மாதிரி ஒரு கல்யாணம் செய்ததில் அவர்களுக்கு என் லாபம் ஆயிற்று? அலோக்கிற்கு உனக்கும் தினேஷுக்கும் இருந்த சிநேகிதத்தைப் பற்றித் தெரியுமா?''

''தெரியும். நான் அலோக்கிடமிருந்து எதையும் மறைக்க நினைத்ததில்லை லில்லி!''

''அலோக் நல்லவராய் இருக்கக் கொண்டு உனக்கு எந்த விதப் பிரச்னையும் இல்லை நந்திதா! அவரே வித்தியாசமானவராய் இருந்திருந்தால் பயங்கரமாக இருந்திருக்கும். தினேஷின் மனைவி அவன்வாழ்க்கையைக் கெடுத்த மாதிரி....!''

''அதென்ன அத்தனை நிச்சயமாக அவளைப் பற்றிச் சொல்கிறாய்?''

''கௌஹாத்தியில் இப்பொழுது பெரிய மனிதர்கள் வீட்டில் இதுதான் பேச்சு! அவள் ஒரு சந்தேகப் பிராணியாம். உன்னுடன் சிநேகமாய் இருந்ததைப் பற்றி தினேஷ் அவளிடம் சொல்லியிருப்பானோ என்னவோ!''

சட்டென்று அவனுக்குத் தினேஷைப் பார்க்க வேண்டும் போலத் தோன்றிற்று அவனைச் சமாதானப்படுத்த வேண்டும் போல் இருந்தது. சரளமாய் ஓடியிருக்க வேண்டிய நம் வாழ்க்கையை அநியாயமாய் இந்தச் சமுதாயமே கெடுத்து விட்டது. இதை நாம் ஏன் மதிக்க வேண்டும் என்று கேட்க வேண்டும் போல் இருந்தது. எந்தக் குற்றமும் செய்யாத நம்மைப் பிரித்து விட்டது. சேர்ந்து கண்ட கனவை யெல்லாம் சின்னாபின்னமாக்கி விட்டது. எந்தத் தர்மத்தைக் காப்பாற்ற இப்படிச் செய்தது? எதை நிலைநாட்டிக் கொள்ள இப்படிச் செய்தது? அவளுக்கு அடிவயிற்றிலிருந்து ஒரு துக்கம் குமுறிக் கொண்டு எழுந்தது.

''எல்லோருக்கும் அலோக்குக்கு இருக்கிற மாதிரி பரந்த மனசு இருக்குமா நந்திதா?''

அவளுக்குச் சட்டென்று ஒரு எரிச்சல் ஏற்பட்டது. இது வேறு ஒரு அஸ்திரம். இப்படியெல்லாம் சொல்லிச் சொல்லியே அவள் மூளையை, உணர்வுகளை எல்லோரும் மழுங்கச் செய்து விட்டார்கள். அவள் மனசுக்குள் இருக்கும் ஏக்கம் யாருக்குத் தெரியும்? அலோக்கின் நல்ல குணமே அவள் மேல் பாரமாய் உட்கார்ந்திருப்பது யாருக்குத் தெரியும்? அவளுள் திடீரென்று ஒரு விம்மு எழுந்தது. இனிமேலும் இந்தப் பாரத்தைச் சுமப்பது அசாத்தியமானகாரியம் என்று தோன்றிற்று.

அவள் லில்லி எதிர்பாராத ஒரு கேள்வியைக் கேட்டாள்.

''லில்லி, என் கை ரொம்பச் சொர சொரப்பாகி விட்டது. மிருதுவாக எப்படி ஆக்குவது? உனக்கு ஏதாவது வழி தெரியுமா?''

''கிளிஸிரினில் கொஞ்சம் எலுமிச்சம் சாற்றைக் கலந்து அடிக்கடி தேய். நன்றாக ஆகும்.''

''கிளிஸிரின் எங்கே கிடைக்கும்?''

''எல்லா கெமிஸ்ட் ஷாப்பிலும் கிடைக்கும் முட்டாள் பெண்ணே!''

ஊதா நிறம்: (Violet Colour)

இது ஒரு சக்தி வாய்ந்த நிறம். மனிதனுக்கு டானிக்கைப் போல் பயன் படுகிறது. மனதை தூய்மையாக்கவும், ஒரு நிலை படுத்தவும் உதவி புரியும். (இடப் பொருள்களை ஊடுருவி பார்க்க பயன்படுவது இதன் (Ultra Violet Rays) கதிர்களேயாகும்.)

லில்லியின் பரிகாசப் பேச்சை லட்சியம் செய்யாமல் அவள் மெடிகல் ஷாப்பைநோக்கி நடந்தாள்.

3

அவள் கிளம்பும்போது லோனியாவும் பப்லுவும் தூங்கிக் கொண்டிருந்தார்கள். அவள் எழுந்த அரவம் கேட்டு அலோக் எழுந்து விட்டான். தேநீர் சேர்ந்து குடித்தான்.

''குளிருகிறது. ஷாலை நன்றாகப் போர்த்திக்கொண்டு போ!'' என்றான்.

அவனுடைய உபசரிப்பும் காட்டும் அன்பும் எந்த வித வித்தியாசமும் இல்லாமல் வெகு இயல்பாக இருந்தது.

''ஜாக்கிரதையாகப் போய் வா நந்திதா. போய் இறங்கிய கையுடன் தினேஷைப் பார்த்துவிட்டு இருட்டுவதற்குள் இங்கு வந்துவிடு. இப்பொழுதெல்லாம் திடீரென்று ஏதாவது கலகம் நேருகிறது கௌஹாத்தியில்.''

''சரி'' என்று முணு முணுத்தபடி அவள் படி இறங்கினாள்.

அலோக்கின் சகஜமான போக்கு அவளுள் ஒரு எரிச்சலை ஏற்படுத்தியது. இந்த மாதிரி எந்தப் புருஷனாவது இருப்பானா? எனக்குள் பொங்கும் எரிமலையைப் பற்றி இவன் உணர்வானா? அதைப் பற்றின பாதிப்பு ஏதும் இல்லாமல் இவனால் எப்படி இருக்க முடிகிறது? என் எண்ணங்களைப் பற்றின கவலை இவனுக்குக் கிடையாதா?''

அம்மாவும் அப்பாவும் கட்டாயப்படுத்தி அலோக்குடன் அவளுக்குக் கல்யாணம் நிச்சயம் செய்தவுடன் அவன் அவளை லேக்குக்கு அழைத்துப் போக ஆசைப்பட்டான். அவள் இஷ்டமில்லாமல் அவனுடன் மௌனமாகச் சென்று அமர்ந்தாள். அவன் பார்க்க நன்றாக இருந்தான். சுமாரான நல்ல உத்தியோகத்தில் இருந்தான். மிருதுவாகப் பேசினான். தான் காதலித்த தினேஷ் கிடைக்கவில்லை என்கிற ஏமாற்றத்தைத் தவிர இவனுக்கு எதிரான காரணங்கள் ஏதும் இருக்கவில்லை.

அலோக் அவளுடைய கையைக் கூச்சத்துடன் தொட்டான்.

''நந்திதா, ஏன் பேசமாட்டேன் என்கிறாய்?''

அவள் தயக்கத்துடன் ஆரம்பித்தாள்.

''அலோக், என்னைப் பற்றிப் பிறகு ஏதேனும் விவரம் தெரிந்து நீங்கள் சந்தேகப்படக் கூடாது என்பதற்காக நானே சொல்லிவிடுகிறேன். எனக்கும் தினேஷ் என்கிற ஹிந்திப் பையன் ஒருத்தனுக்கும் சினேகிதம் இருந்தது.....!''

முழுவதையும் கேட்டுவிட்டுஅலோக் மென்மையாகச் சிரித்தான்.

''சினேகிதம் என்பது பெரிய குற்றமில்லை நந்திதா. இந்த வயசில் இந்த மாதிரி ஓர் உணர்வு ஏற்படுவது ரொம்ப இயல்பான விஷயம்.''

அவளுக்குத் துக்கம் துருத்திக்கொண்டு வந்தது. கண்கள் நீரைக் கக்குவேன் என்று பயமுறுத்தின.

''நாங்கள் ரொம்பத் தீவிரமாக இருந்தோம் அலோக்!''

சிவப்பு நிறம்:

இந்த நிறம் வயிற்று தொந்திரவு குறைய உதவி புரிந்து இதமளிக்கும்.

தொகுப்பு: மல்லிகா ராஜேந்திரன்

''பின் ஏன் கல்யாணம் செய்துகொள்ளவில்லை?''

''இரண்டு பெற்றோர்களுக்கும் இஷ்டமில்லை.''

அவன் வெகு நேரம் ஏதும் பேசாமல் இருந்தான். பிறகு மென்மையாகச் சொன்னான்.

''நந்திதா! நீ என்னை நம்ப வேண்டும். நீ தெரிவித்த இந்த விஷயத்தினால் உன் மேல் எனக்கு ஏற்பட்டிருக்கும் அன்பில் எந்த வித்தியாசமும் இருக்கப் போவதில்லை. ஒன்று கிடைக்கவில்லை என்று தீர்மானமாகிப் போன பிறகு அதைப் பற்றி நினைப்பதில்லாபமில்லை என்று நான் நினைப்பவன். நம் முன்னால் விரிந்திருக்கும் பாதையைப் பார்ப்போம் நந்திதா! உன்னை நான் ஆத்மார்த்தமாக நேசிப்பேன். என்னுடன் வாழ்ந்து பார்க்கையில் நீயே புரிந்து கொள்வாய்.''

இந்தப் பத்து வருஷங்களாக அவனது வார்த்தைகள் சத்தியமானவை என்று அவன் நிரூபித்திருக்கிறான். தப்பித் தவறிக்கூட அவளுடைய முந்தைய காதலைப் பற்றிப் பேசினதில்லை. குத்திக் காட்டினதில்லை. அவளிடம் பூரணத் திருப்தி அடைந்தவன்போல் சந்தோஷத்தைக் காண்பித்திருக்கிறான்...

பஸ் நிலையத்தில் காத்திருக்கையில் காலைக் காற்றில் குளிர்ந்து.

''கௌஹாத்தியில் போய் இறங்கியதும் உன் காரியத்தை முடித்துக் கொண்டு வந்துவிடு. அலையாதே. அந்த வெய்யில் உனக்குத் தாங்காது. கமிஷனர் ஆபீஸ் தெரியுமல்லவா? அதன் பக்கத்தில்தான் வீடு!''

''சரி!'' என்றாள் அவள் மெல்லிய குரலில். இவன் இன்னும் சற்று நேரம் இங்கு நின்று பேசிக் கொண்டிருந்தானானால் தான் மனசு மாறி வீட்டுக்குப் போய்விடுவோமோ என்று பயமாக இருந்தது.

''நீ போ, அலோக். குழந்தைகள் தனியாக இருக்கிறார்கள்!''

அவன் சில விநாடிகள் அவளைப் பார்த்தபடி நின்றான். அவள் எதிர்பாராமல் அவளுடைய கையைப் பற்றி மெல்லியகுரலில்,

''ஓ.கே! பை!'' என்றான்.


அந்தப் பார்வையில் இருந்த ஆழமும் குரலிலிருந்தவேறு ஏதோ ஒன்றும் அவளைச் சலனப்படுத்திற்று. விடுவிடு என்று திரும்பிப் பார்க்காமல் வீட்டை நோக்கி நடக்கும் அவனைப் பார்க்கையில் எந்த உந்துதல் நம்மை இப்பொழுது கிளம்ப வைத்திருக்கிறதுஎன்று திகைப்பேற்பட்டது. எந்த வகையிலும் குற்றம் சொல்ல முடியாத அலோக்கிடம் நமக்கு ஏன் திருப்தி ஏற்படவில்லை? நமக்கு இந்த மாதிரி மனநிலையிருக்கும்போது தாம் பத்தியத்தில் சந்தோஷமாக இல்லை என்று சொல்லப்படும் தினேஷின் மனநிலை எப்படி இருக்கும்? அவனைக் கண்டதும் பழைய தாபம் எல்லாம் பீறிட்டுக் கொண்டு கிளம்பாதா? நெருப்பிடம் பஞ்சு போய் நின்ற கதையாகி விடாதா? எந்தப் பைத்தியக்



உண்மைதான்... சிறந்த சேமியா என்றாலே சிறந்த பாயசம்...

இதுவரை கண்டதில்லை
இது போன்ற சேமியா:

- தரம் மிகுந்த மைதா மாவினால் தயாரிக்கப்பட்டது.
- சமைக்கும்போது பசைபோல ஒட்டிக்கொள்வதில்லை.
- நவீன இத்தாலிய எந்திரங்களினால் சுகாதாரமான முறையில் தயாரிக்கப்படுவது.
- சுவையான பாயசம் தயாரிக்க மிகவும் ஏற்றது.



இப்போது!

பிஸ்கட்
தயாரிப்பாளர்கள்
அளிக்கும்
சிறந்த சேமியா

HTM-AFL-2855


தரமோ உயர்வு
விலையோ குறைவு
கோபுரம்
சலவை சோப்பு
அப்பழுக்கின்றி அழுக்கை அகற்றி
வெண்மை பளிச்சிடச் செய்கிறது.
அதிக துணிகளை வெளுப்பதால்
லாபமும் அதிகம்.
நீங்களும் உபயோகியுங்கள்
இப்போது எல்லாக்
கடைகளிலும் கிடைக்கிறது.
தமிழ்நாடு கதர் கிராமத்
தொழில் வாரியம்
சென்னை-1
உங்கள் அருகில் உள்ள காதி கிராப்டுக்கு வருகை தந்து
இதர இல்லத் தேவைகளையும் வாங்கி பயன்பெறுங்கள்.

காரத்தனத்தில் நாம் இப்பொழுது ஊம்பு கிறோம்? அலோக்கின் அதீதமான நல்ல குணத்தை நாம் உபயோகித்துக் கொள்கிறோமா? எந்தக் கணவனாவது தன் மனைவியை அவளுடைய முன்னாள் காதலனைப் பார்க்க மனப்பூர்வமான சம்மதத்துடன் அனுப்பு வானா?

பஸ்ஸில் பயணிக்கையில் திரும்பத் திரும்ப இதே யோசனைகள் மனசில் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. அவள் பலவந்தமாகத் தன் கவனத்தைத் திருப்பினாள். பஸ்ஸில் இப்பொழுதெல்லாம் அதிகக் கூட்டம் இருப்ப தில்லை என்று பக்கத்திலிருந்த ஒரு ஆண் சொல்லிக் கொண்டிருந்தான். 'அஸ்ஸாம் கலகம் ஆரம்பமானதிலிருந்து கௌஹாத் திக்குப் போவதற்கே எல்லோரும் பயப் படுகிறார்கள். இப்பொழுது எங்கு பார்த் தாலும் பயங்கரவாதிகளின் ஆதிக்கமாகி விட்டது. கௌஹாத்தியில் சீஃப் கமிஷனர் வாழ்க்கையே நித்திய கண்டம் பூரணயுக மாகப் போய்விட்டது. நான் நிச்சயம் அவன் இடத்தில் இருக்க மாட்டேன்...... சென்ற முறை சீஃப் கமிஷனரின் கதி என்ன ஆயிற்று தெரியுமோ இல்லியோ?''

அவளுக்கு உள்ளுக்குள் ஒரு சிலிர்ப்பு ஓடிற்று. ஆபீஸ் நாற்காலியில் சென்று அமர்ந்த சில நிமிஷங்களில் பஸ்மமாகிப் போன இளம் அதிகாரி....'

'அதே வேலைக்கு வரவேண்டுமானால் இந்த சீஃப் கமிஷனருக்கு மகா நெஞ்சுரம் வேணும். சொல்லிக் கொள்கிறார்கள் இவன் ரொம்ப தைரியசாலி என்று!''

அவளுக்குச் சிரிப்பு வந்தது. நினைவையா தைரியசாலி என்று இவன் சொல்கிறான்? நான் காதலிக்கிற பெண்ணைத்தான் கல் யாணம் செய்து கொள்வேன் என்று சொல் லத் தைரியமில்லாதவனா நெஞ்சுரம் உள்ள வன்?

'நான் எழுதும் இந்தக் கடிதம் வெறும் மசியில் எழுதப்படும் கடிதம் இல்லை நந்து! என் இதயத்திலிருந்து வடியும் உதிரம் இது. நம் திருமணத்துக்கு என் பெற்றோர் ஒத் துக்கொள்ளவில்லை. என்னை நம்பி அவர்கள் இருக்கிறார்கள். அவர்களை மீறிக் கொண்டு போக மனசு வரவில்லை நந்து....!'

எத்தனை சுலபமாக எழுதினான்! உன்னை நம்பி நான் இருக்கவில்லையா? என் மனசைப் பற்றி நீ நினைத்தாயா? இன்னும் உனக்காக ஏங்கும் இந்த மனசை, உடம்பைப் பற்றி உனக்குப் புரியுமா?

அந்தக் கடிதம் வந்த பிறகு ஒரு வாரத் துக்கு அழுதாள். அவன் இருந்த லக்னோ வுக்குப் போய் நேரிடையாகப் பேச வேண் டும் என்று துடித்தாள். வீட்டில் இருப்ப வர்கள் அனுமதிக்கவில்லை. ஷில்லாங்கி ருந்து லக்னோவுக்குப் போவது அத்தனை சுலபமான காரியம் இல்லை. பத்து நாட் களுக்குள் அவளுடைய கல்யாணக் கடு தாசே வந்து விட்ட பிறகு கதையெல்லாம் முடிந்து போயிற்று. ஒரு வாரம் மறுபடி துக்கம் காத்த பிறகு வீட்டிலிருப்பவர்கள் அவசரமாக அவளுக்கு வரன் பார்த்து அலோக்கை நிச்சயித்தார்கள்.

"சகோதரி, நீங்கள் எங்கே போக வேண் டும்?''


அவள் சுயநினைவு வந்து திரும்பினாள். கண்டக்டர் எதிரில் நின்றார்.

''கமிஷனர் ஆபீஸுக்குப் போக வேண் டும்!''

''நீங்கள் அஸ்ஸாமியா?''

''ஆமாம்.''

''பிழைத்தீர்கள்! வாசலில் நிறைய இளை ஞர்கள் நிற்பார்கள். அவர்களைப் பார்த்த உடனேயே சொல்லிவிடுங்கள், நீங்கள் அஸ் ஸாமிதான் என்பதை.''



அவளுக்கு லேசாகப் பயமேற்பட்டது. வந்தது தப்போ என்று கவலை ஏற்பட்டது.

பஸ் நிலையத்துக்குச் செல்லும் பாதையில் இருக்கும் கடை வாசல்களில் எல்லாம் இளை ஞர்கள் உட்கார்ந்திருந்தார்கள். தீவிரப் பார்வையுடன் எங்கு பார்த்தாலும் கொடிகள் 'அஸ்ஸாம் அஸ்ஸாமியருக்கே!' 'வெளி மனி தருக்கு இங்கு இடமில்லை!' — ஆரம்பத்தில் நியாயமான கோரிக்கையாக ஆரம்பித்து இப்பொழுது பயங்கர துவேஷமாக மாறி யிருக்கும் வெறி....

எந்த அரசியலிலும் ஆழ்ந்த ஞானம் இல் லாத அவளுக்கு அந்தக் கொடிகளைப் பார்த்தே பயமேற்பட்டது.

''நீங்கள் இறங்குங்கள் சகோதரி''

அவள் தன்னை நிதானப்படுத்திக்கொண்டு இறங்கினாள்.

கமிஷனர் ஆபீஸ் வாசலிலேயே ஒரு கூட்டம் நின்றிருந்தது. அலுவலகம் இன்னும் திறக்கப்படவில்லை.

''தினேஷ் பராஷருடைய வீடு எங்கே?'' என்ற அவள் கேள்வியைக் கேட்டு அந்த இளைஞர் கூட்டம் விருக்கென்று நிமிர்ந்து பார்த்தது.

''ஏன், அவருடன் உங்களுக்கு என்ன வேலை?''

''ஏதோ சொந்த வேலை!''

''உங்களுக்கு என்ன வேண்டும்'' என்று அவள் போவதைத் தடுக்கப் பார்க்கிற மாதிரி அவர்கள் நின்றார்கள்.

''இல்லை. விடுங்கள். இது என் சொந்த விஷயம்.''

''இப்பொழுது அஸ்ஸாமில் யாருக்கும், எதுவும் சொந்தமில்லை. எல்லாப் பிரச்னையும் பொதுப் பிரச்னை...''

அவள் கலவரத்துடன் அவர்களைப் பார்த்தாள். ''சகோதரர்களே, என்னைப் போக விடுங்கள். நானும் உங்களைப் போல ஒரு அஸ்ஸாமியப் பெண்.''

''ஆ! இது எல்லோரும் அளக்கும் கதை. கோழைகள் சொல்லும் பொய். நீங்கள் அஸ்ஸாமி என்பதற்கு என்ன ஆதாரம்?''

''ஏன், நான் பேசுவதைப் பார்த்தால் தெரியவில்லையா? என் முகத்தைப் பார்த்தால் தெரியவில்லையா?''

''இல்லை. இப்பொழுது பங்களா தேசிகள் கூட இப்படித்தான் பேசுகிறார்கள். இந்த மாதிரி முகம் யாருக்கு வேண்டுமானாலும் இருக்கலாம்.''

''என்னை நீங்கள் நம்ப வேண்டும். நான் ஷில்லாங்கில் வசிக்கிறேன். ஒரு சொந்தக் காரியமாகக் கமிஷனரைப் பார்க்க வந்தேன்!''

''இப்பொழுது சொந்தக் காரியத்துக்கு யாருக்கும் நேரம் கிடையாது. இங்கு இப்பொழுது ஒரு பெரிய வேள்வி நடக்கிறது. புரியாமல் பொறுப்பற்ற தனமாகப் பேசாதீர்கள்! அஸ்ஸாமியர் அல்லாத ஒருத்தருடன் உங்களுக்கு என்ன பேச்சு?''

இது என்ன இப்படி ஒரு பைத்தியக்காரத்தனமான இக்கட்டில் மாட்டிக் கொண்டு விட்டோம் என்கிற திகைப்பில் அவள் நின்றாள்.

சட்டென்று அந்த இளைஞர்களின் கவனம் கலைந்தது. ஒரு ஃபியட் கார் வந்தது. டிரைவரைத் தாண்டிப் பின் சீட்டில் அவள் பார்வை சென்றதும் அடி வயிற்றிலிருந்து ஒரு பிரவாகம் கிளம்பி நெஞ்சை அடைத்தது. அவள் தன்னை அறியாமல் ''தினேஷ்!'' என்று கூவினாள்.

தினேஷ் திடுக்கிட்டுத் திரும்பி அவளை சில விநாடிகளில் அடையாளம் கண்டு, கதவைத் திறந்து, ''சீக்கிரம் வா'' என்றான் ஆங்கிலத்தில். அவளைத் தாக்கப் பார்த்த அந்த இளைஞர்களிடமிருந்து எந்த அனாயாச சக்தியாலோ உந்தப்பட்டுத் தப்பித்து அவள் ஏறி உள்ளே அமர்ந்ததும் பழக்கப்பட்ட மாதிரி கார் கிளம்பிற்று.

சரமாரியாகக் கற்கள் காரை நோக்கிப் பாய்ந்தன.

''குனிந்துகொள் நந்தா. சீட்டுக்கடியில் குனிந்துகொள்!''

தினேஷின் கை அவளுடைய தலையை அழுத்திப் பிடித்தது அடைக்கலம் தருகிற மாதிரி. அண்மையில் இருந்த அவன் தொடையில் முகத்தைக் கவிழ்த்து அவள் பத்து வருஷத் துக்கத்தைக் கரைக்கிற மாதிரி விசும்பினாள்.

4

கார்செல்லும் இடமெல்லாம் இரைச்சல் கேட்டுக் கொண்டே இருந்தது. சரமாரியாகக் கற்கள் விழுந்தன. கதவுகளின் ஏற்றப்பட்ட கண்ணாடிகளைத் துளைத்துக் கொண்டு உள்ளே அவன் தலையிலும் முதுகிலும் விழுந்தன. அவள் மேல் படாத வண்ணம் அவள் மேல் தினேஷ் தன் உடம்பைக் கவிழ்த்துக் கொண்டான். அவனுடைய அண்மையும் அது அவளுள் ஏற்படுத்திய நிம்மதியையும் நினைத்து அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. மெள்ள மெள்ள இரைச்சல் குறைந்து கற்கள் விழுவது குறைந்து கார் ஒரு நிதானத்துடன் சென்றது.


தினேஷின் கை அவளுடைய முதுகைத் தட்டிற்று.

''எழுந்திரு நந்திதா. இனி மேல் பயமில்லை.''

அந்தக் குறுகிய இடத்திலிருந்து எழுந்திருக்க அவன் உதவினான். அவள் ஒரு ஆயாசத்துடன் நிமிர்ந்து உட்கார்ந்தாள். அவன் மிகவும் தீவிரமான யோசனையுடன் அமர்ந்திருந்தான். அவள் அவன் முகத்தையும் கைகளையும் பார்த்துத் திடுக்கிட்டாள்.

''ஐயோ... ரத்தக் காயம் பட்டிருக்கிறது தினேஷ்!''

அவன் அலட்சியமாக அவள் சுட்டிக் காட்டிய இடங்களைப் பார்த்துக் கொண்டான். பிறகு தன் கைக்குட்டையால் வியர்வையை ஒத்தி எடுப்பது போல் ஒத்தினான். இன்னும் இரத்தம் பெருகிற்று.



அவள் தன் கைக்குட்டையால் ஒத்தினாள்.

''கொஞ்சம் நீரினால் கழுவினால் நல்லது தினேஷ்!''

அவன் பதில் சொல்லாமல், அவள் அவனைத் தொடுகிறபிரக்ஞையேஇல்லாமல், அவள் அவனருகில் உட்கார்ந்திருக்கிற உணர்வேஇல்லாமல் ஏதோ தீவிர யோசனையில் அமர்ந்திருப்பதை அவள் உணர்ந்தாள். பத்து வருஷம் கழித்துத் திடீரென்று அவனைப் பார்த்ததும் அவனிடம் அது எந்தவிதப் பாதிப்போ வியப்போ ஏற்படுத்தவில்லையென்ற உணர்வைச் சகித்துக் கொள்வது கஷ்டமாக இருந்தது. மெல்லிய ஏமாற்றம் அவளை ஆட்கொண்டது. பத்து வருஷத்துக்கு முன்னால் இருந்த உல்லாசமும் சிரிப்புமெல்லாம் போய் புருவங்கள்நெரிந்து யோசனை மிகுந்த பார்வையுடன், இவன் தினேஷ் தானா? தன் பெயர் இவனுக்கு ஞாபகம் இருப்பதே பெரிய அதிசயம் என்று அவள் நினைத்துக்கொண்டாள்.

கார் ஒரு பெரிய காம்பவுண்டுக்குள் நுழைந்து நின்றது. தினேஷ் கதவைத் திறந்து அவசரமாக இறங்கிய பிறகு நினைவுக்கு வந்தவன் போல் அவளைப் பார்த்து.



''நீ இங்கேயே உட்கார்ந்திருநந்தித்தா, நான் கவர்னரைப் பார்த்துவிட்டு வந்துவிடுகிறேன்'' என்று அவன் பதிலுக்குக் காத்திராமல், ரத்தக் காயம் பட்ட கன்னத்தை லேசாக ஒத்தியபடி கட்டிடத்துக்குள் விரைந்தான். அவனுடைய கம்பீரப் பார்வையும் அளவான பேச்சும் அவளுக்கு நம்ப முடியாததாக இருந்தது. பத்து வருஷத்துக்கு முன்னல் அதில் இருந்த காதலும் மையலும் பேச்சிலிருந்த குறும்பும் சல்லாபமும் இன்னும் மனசில் பசுமையாக இருந்தது. புதிதாக அவனுள் ஒரு பயமும் மரியாதையும் இப்பொழுது புகுந்து கொண்டது. அவளுக்குப் பரிச்சயமில்லாத பெரியமனுஷனைப் பார்த்த மாதிரி.

பங்களாவின் வாசலில் எல்லாம் போலீஸ் ஆட்கள். அனைவர் முகத்திலும் இருந்த இறுக்கத்தைப் பார்த்து அவளுக்குத் தான் அங்கு வந்து தனியாகக் காரில் உட்கார்ந்திருப்பதே ஒரு பெரிய அசம்பாவிதமாகத் தோன்றிற்று. யாரும் யாருடனும் பேசாத ஒரு இறுக்கம். பீதியும் நிச்சயமின்மையும் எல்லார் பார்வையிலும் அப்பட்டமாகத் தெரிந்தது.

''நீங்கள் எப்படி நட்ட நடு ரோடில் மாட்டிக் கொண்டீர்கள் மேடம்?'' டிரைவரின் குரல் அவளுக்கு மட்டுமே கேட்டது.

''ஷில்லாங்கிலிருந்து இங்கே யாரையோ பார்க்க வந்தேன்....''

''இப்பொழுது யாராவது இங்கே வருவார்களா? இங்கே நடக்கும் ரகளையைப் பற்றி உங்களுக்குத் தெரியாதா மேடம்?''

''அதன் தீவிரம் எங்களுக்குத் தெரியாது. மலை மேல் உட்கார்ந்திருப்பவர்களுக்கு சமதரையில் இருக்கும் உஷ்ணம் புரியாது டிரைவர்...!''

''அப்படித்தான் இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நீங்கள் வந்திருக்க மாட்டீர்கள். இது சாதாரண உஷ்ணமில்லை. இங்கிருப்பது ஜ்வாலை. அந்த ஜ்வாலையை எப்படித் தணிப்பது என்று யாருக்கும் தெரியவில்லை. அதில் பலியாகிக் கொண்டு வருவது குற்றமற்ற ஜீவன்கள்....''

அவன் குரலிலிருந்த தீவிரம் அவளைக் கலவரப்படுத்திற்று.

சாதாரணமாக அதிகமான உணவு உண்ணக் கூடாது. அளவோடு உண்ண வேண்டும். அதற்கு என்ன அளவு? உணவு உண்ட மறு நிமிடமே கூட வேலை செய்யத் தக்க நிலையில் உடல் இருக்குமாறு உணவை உண்பது தான் சரியான அளவு! —எஸ். வனஜா

''எது சரி, எது தப்பு என்று நிதானித்துப் பார்க்கக் கூடத் தோன்றாமல் ஒரு பிரளயத்தில் இப்பொழுது எல்லோரும் சிக்கிக் கொண்டிருக்கிறோம். யாருக்கும் இப்பொழுது சொந்தப் பிரச்னை ஏதும் இல்லை. இங்கிருக்கிற நாட்டுப் 'பிரச்னையில் நேற்று என்ன நடந்தது தெரியுமா? நூறு குழந்தைகளைக் கொன்று போட்டு விட்டார்கள் பயங்கரவாதிகள், விதேஷிகளின் குழந்தைகள் என்று!''

''கடவுளே!''

''கடவுள் என்றெல்லாம் யாரும் இல்லை மேடம். நிச்சயமாக இந்த மாநிலத்தில் அவர் இப்பொழுது இல்லை!''

தினேஷ் உள்ளே போய் வெகு நேரமாகி விட்ட உணர்வும் டிரைவரின் பேச்சு ஏற்படுத்திய கலவரமும் அவளைத் திகைப்பில் ஆழ்த்தியது. இவர்கள் முன்னல் தான் அற்பத்திலும் அற்பமாகிப் போனாற்போல் இருந்தது. என்ன காரணத்துக்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டால் என்ன பதில் சொல்வது?

தினேஷ் அவசரமாக வெளியில் வந்தான். காரின் அருகில் வந்ததும்தான் அவள் இருக்கும் ஞாபகம் வந்தவன் போல்'ஓ நந்தித்தா!' என்று குரலில் குழப்பத்துடன் அவளைப் பார்த்தான்.

''நீ இப்பொழுது ஊருக்குள் எங்கும் போக முடியாது நந்தித்தா. 24 மணி நேர கர்ஃப்யூ போடப் போகிறோம். யாரைப் பார்க்க வந்தாய்?''

அவள் சரேலென்று அவனைப் பார்த்தாள். அவன் கண்களில் தெரிந்த கவலையும் தூரப் பார்வையும் நிச்சயம் அவளுக்காக இல்லை. அவளைப் பற்றிய பிரக்ஞையே அவனுக்கு இல்லை. அவனுடைய மனத்தை ஆக்கிரமிக்கும் விஷயங்கள் இப்பொழுது வேறு; அதன் பரிமாணங்கள் வேறு. அதன் விஸ்தீரணத்தில் அவனுள் அவளின் நினைவு இப்பொழுது தூசுக்குச் சமானம்.

'யாருக்கும் இப்பொழுது இங்கே சொந்தப் பிரச்னை இல்லை....'

அவள் தலையைக் குனிந்தபடி பேசாமல் இருந்தாள்.

அவன் முகத்தில் யோசனை தெரிந்தது. அவள் பதிலை எதிர்பாராதவன் போல்—

''இன்றைக்கு கலாட்டா ஏற்படலாம். ஓ. நீ கிளம்பி வந்தது பெரிய அசட்டுத்தனம் நந்தித்தா!'' என்றான்.

அவளுக்குச் சட்டென்று பெரிதாகச் சிரிக்க வேண்டும்போல் இருந்தது. அவன் முகத்தில் தெரிந்த கவலையையும் அங்கிருந்த இறுக்கமான சூழ்நிலையையும் உணர்ந்து தன்னைச் சமாளித்துக் கொண்டாள்.

அவன் காரின் கதவைத் திறந்து அவளுடன் உட்கார்ந்து கொண்டான். இரண்டு போலீஸ்காரர்களை முன்புறம் உட்கார்ந்துகொள்ளச் சொன்னான்.

''என்னுடைய வீட்டுக்குப் பின்புறமாகப் போ ராக்கேஷ்!'' என்றான் டிரைவரிடம்.

அவர்கள் போகையில் ஒலிபெருக்கியுடன் போலீஸ் ஜீப்புகள் அலறிக் கொண்டிருந்தன: அந்த நிமிஷத்திலிருந்து இருபத்தி நான்கு மணி நேரத்துக்கு கர்ஃப்யூ என்று.

தெருவில் அங்கிருக்கும் கும்பல்களில் தினேஷின் பார்வை துருதுருவென்று அலைந்தது. அடிக்கடி அவன் நெற்றியைக் கைக்குட்டையால் துடைத்துக் கொண்டிருந்தான்.

ஒலிபெருக்கியின் செய்தியைக் கேட்டு மளமளவென்று கடைகள் மூடப்படுவதும் ஜனங்கள் வீடு நோக்கிச் செல்வதும் சற்றுத் தென்பளித்த மாதிரி இருந்தது.

ஒரு வழியாக வீடு போய்ச் சேர்ந்ததும் அவள் நினைவுக்கு வந்தவனாய் ''உள்ளே வா நந்திதா'' என்றான்.

அவள் ஒருவித ஆர்வத்துடன் உள்ளே சென்றாள். வீடு நிசப்தமாக இருந்தது.

அவன் அவளை உள்ளே குளிர்ச்சியாக இருந்த அறைக்கு அழைத்துப் போனான். உள்ளே நுழைந்த சுருக்கில் வேலைக்காரன் குளிர்பானத்தை வைத்துவிட்டுப் போனான்.

''வீட்டில் யாருமில்லையா தினேஷ்?'' என்றாள் அவள் மெள்ள.

''இல்லை. இங்கே நிலைமை சரியாக இல்லை என்று மனைவியையும் குழந்தைகளையும் டில்லிக்கு அனுப்பி விட்டேன்.''

அவள் பேசாமல் கையிலிருந்த பழரசத்தைப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்.

''நீ எப்படி இருக்கிறாய் நந்திதா?''

என்னுடைய ஞாபகம் உனக்கு வந்ததா என்கிற மாதிரி அவள் சரேலென்று அவனை நிமிர்ந்து பார்த்தாள்.

''எப்படி இருக்கிறேன், நீதான் சொல்லேன்?''

எதிர்பாராமல்வந்த கேள்வி மாதிரி அவன் தடுமாற்றத்துடன் அவளைப் பார்த்து லேசாகச் சிரித்தான்.

''மாறியிருக்கிறாய்!''

அவள் திகைப்புடன் அவனைப் பார்த்தாள். ''மாறியிருக்கிறேனா? உன்னை விடவா?''

அவன் சரளமாகப் புன்னகைத்தான். ''மாறியிருந்தால் தப்பேதுமில்லை நந்திதா. காலமும் வயசும் நம்மை மாற்றுவிட்டால் தான் தப்பு....''


இவனுக்கு மனசளவில் தன்னைவிட மிகவும் வயசாகிவிட்டது என்று தோன்றிற்று. இவன் அவளுக்கு இப்பொழுது அன்னியமாய் நிற்பதும் அது அவளுக்கு ஏற்படுத்தும் பாதிப்பை அவன் உணராமல் அமர்ந்திருப்பதும் வேதனையைத் தந்தது.

''மாறிப் போனதில் என்னைப் பற்றி சுத்தமாக மறந்து விட்டாய் இல்லையா தினேஷ்?''

அவன் நிதானமாக அவளைப் பார்த்தான்.

''மறக்கவில்லை. என்றால் மறக்க முடியாது. ஆனால் ஒவ்வொரு விஷயத்துக்கும் அதன் முக்கியத்துவம் காலத்துக்குத் தகுந்த மாதிரி மாறுகிறது. பத்து வருஷத்துக்கு முன்னால் இருந்த மனசை விட இப்பொழுது என் மனசு விசாலமடைந்திருக்கிறது. வேறு கவலைகள், பிரச்னைகள் அதில் புகுந்து கொண்டிருக்கின்றன. என்னுடைய தனிப்பட்ட ஏமாற்றம் இப்பொழுது அல்பமாகிப் போய்விட்டது...''

அவளுக்கு என்னென்னவோ கேட்க வேண்டும் போல் இருந்தது. அவன் மனைவியைப் பற்றி, அவனது பிரத்தியேக சந்தோஷத்தைப்



பற்றி. ஆனால் வார்த்தைகள் வரவில்லை. வார்த்தைகளில் சொன்னால் அவை மகா அல்பமாகத் தெரியும் என்று தோன்றிற்று.

''இங்கிருக்கும் சூழ்நிலையில் நான் என்னைப் பற்றியோ, என் சொந்தப் பிரச்னைகளைப் பற்றியோ நினைப்பதே பாவம். எனதுசொந்தப் பிரச்னையைச் சமாளிப்பது எனக்குக் கஷ்டமில்லை. இந்த மாநிலத்து ஜனங்களின் பிரச்னைகளுக்கு முன் நான் ரொம்ப அற்பமானவன் நந்திதா!''

அவள் பதிலே பேசாமல் உட்கார்ந்திருந்தாள். வாஸ்தவத்தில் தான்தான் அற்பத்திலும் அற்பமாய்ப்போன மாதிரிஅவளுக்குத் தோன்றிற்று. எந்த ஏமாற்றத்தைச் சுமப்ப

தாக நினைத்து பத்து வருஷங்களைப் பொறுப் பில்லாமல் கழித்தோம் என்று வெட்கமேற் பட்டது.

''நான் உன்னைப் பற்றி விசாரிக்காமல் இல்லை நந்திதா! உன் கணவர் ரொம்பவும் நல்லவர் என்று கேள்விப்பட்டேன். உன்னை மிகப் பிரியத்தோடு நடத்துகிறார் என்று கேள் விப்பட்டேன். உனக்காக நான் ரொம்ப சந்தோஷப்பட்டேன்.''

அவன் மறுபடியும் ஒரு தடுமாற்றத்துடன் சிரித்தான்.

''காதலில் தோற்றுப் போன எல்லாருக் கும் நல்ல வாழ்க்கை அமைந்துவிடுவதில்லை நந்திதா...ஆனால்காதல் ஏமாற்றம் என்கிற கஷ்டத்தை விட நிஜமான பெரிய கஷ்டங்கள் உலகத்தில் நிறைய இருக்கின்றன. இது வெறும் மனப் பிரச்னை. நம் மனதைச் சமாதானப்படுத்துவது நம்கையில்தான்இருக் கிறது.''

அவள் காலியான கண்ணாடி டம்ளரை மேஜை மேல் வைத்தாள். அவன் தன்னைத் தானே சமாதானம் செய்து கொள்ளத் தான் இத்தனை தூரம் பேசுகிறானோ என்று அவளுக்குச் சந்தேகம் வந்தது.

''நீ இங்கு யாரைப் பார்க்க வந்தாய் என்று சொல்லவே இல்லையே?''

அவன் லகுவாகச் சிரித்தான்.

''எனக்கு யாரையும் பார்க்க வேண்டாம் தினேஷ். வந்த காரியம் முடிந்துவிட்டது. இருட்டுவதற்குள் நான் ஷில்லாங்குக்குப் போய்ச் சேர வேண்டும்.''

''நான் ஏற்பாடு செய்கிறேன்.''

போலீஸ் துணையுடன் அவனை ஜீப்பில் அவன் ஏற்றி அனுப்புகையில் அவன் ஆத் மார்த்த சலனமற்ற சிநேகிதத்துடன் சொன் னான்:

''விஷ்யூ ஆல் தி பெஸ்ட் தினேஷ். ஷில்லாங்குக்கு வந்தால் நீ எங்கள் வீட் டுக்கு வரவேண்டும்.''

''கண்டிப்பாக!''

ஷில்லாங்குக்குப் போய்ச் சேருகையில் லேசாக இருட்டி விட்டது. வீட்டின் வாசலி லேயே கவலை தோய்ந்த முகத்துடன் அலோக் நின்றிருந்தான். அவள் உள்ளே வந்ததும் ''கௌஹாத்தியில் கலவரம் என்று ரேடியோ வில் கேட்டுப் பயந்து போயிட்டேன் நந்தா'' என்றான்.

அவள் மென்மையாகச் சிரித்தாள்.

''இனிமேல் பயப்பட ஒன்றுமில்லை அலோக். நான் வந்து விட்டேன்.''

அவன் சில விநாடிகள் ஆழமாகப் பார்த் தான்.

''நீ வந்துவிடுவாய் என்று எனக்குத் தெரி யும் நந்திதா!'' என்றான் மிருதுவாக.

உலகப் புகழ் பெற்ற ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் உணவுப் பொருட்கள்

SRI GANESHRAM'S 777 BRAND FOOD PRODUCTS-MADRAS-INDIA (REGD.)

Dhideerex ® (FOR INSTANT PREPARATION) (REGD.)

SRI GANESHRAM'S 3-7 (REGD.)

டாம்-எக்ஸ் (TAM-EX)

—THE SPICED TAMARIND EXTRACT

மஞ்சள், உப்பு, பெருங்காயம், கருவேப்பிலை, கடுகு தாளிப்பு முதலியவை சேர்ந்த புளிசத்து.

சாம்பார், ரசம், வத்தல் குழம்பு, வாழைக்காய் பொரியலோடு சேர்த்து சாப்பிடுவதற்கு கன குஷியாக இருக்கும்.

எமது திடீர் புளியோதரை பேஸ்ட் உபயோகித்துப் பார்க்கவும்.

செய்முறையை உருவாக்கி, தர உயர்வை நிர்ணயிப்பவர்கள் :

ஸ்ரீ கணேஷ்ராம்ஸ் அனலிடிக்கல் லாபரெட்டரீஸ், சென்னை—600001

உணவு, உணவுப் பொருட்கள், எண்ணெய் வகைகள், பால் பண்ணைப் பொருட்கள், பேக்கரி பொருட்கள், பானங்கள், குளிர்ந்த பானங்கள், பழங் களினின்று தயாரிக்கும் பொருட்கள், உரம் மற்றும் கால்நடைத் தீவனங்கள், தண்ணீர், சோப்பு வகைகள் மற்றும் I.S.I. F.P.O. Agmark போன்ற தரக் கட்டுப்பாடுகள் உள்ள ஏனைய பொருட்களும் எமது லாபரெட்டரியில் பரிசோதித்துத் தருகிறோம்.


SRI GANESHRAM & CO., 193, Thambu Chetty St., Madras-1

கவனிக்கவும் எமது தயாரிப்புகளனைத்தும் 777 லேபில் பாக்கிங்குகளில் மட்டுமே கிடைக்கும். உதிரி (Loose) விற்பனை செய்யப்படுவது இல்லை என்பதை முக்கியமாக கவனிக்கவும்.

ராணுவ கேண்டீன்களும், ராணுவ
மருத்துவ மனைகளும், I.A.M. போன்ற
அரசாங்க நிறுவனங்களும், அரசாங்க
கேண்டீன்களும், ஆஸ்பத்திரிகளும்

மதுரா

மாவரைக்கும் இயந்திரங்களை



விரும்பி
வாங்குவது ஏன்?

- அழகிய தோற்றம்
- குறைந்த மின்சக்தி
- தொந்தரவற்ற நீண்ட உழைப்பு
- எளிதில் மாற்றக்கூடிய உதிரி பாகங்கள்

இதுவே மதுராவின் இன்றைய வெற்றியின் ரகசியம்

1 லிட்டர் முதல்
40 லிட்டர் வரை

mathura

மகேந்திரா பவுண்டரி

4/11/2 அம்மன்குளம் ரோடு
கோயமுத்தூர்-641037

Regd. No. TN MS (E) 231

வேக்ஃபீல்டு கஸ்டர்ட்ஸ்
இவை ஏன் க்ரீமைப் போன்று உள்ளன?
வேக்ஃபீல்டு ஜெல்லீஸ்
இவை ஏன் மஜாவான ருசியுள்ளதாய் உள்ளன?



சாப்பிட்டுப் பாருங்கள்
உங்கள் நாவிடம் பதில் கிடைக்கும்.

ஒரு பொருளை சாப்பிட்டுப் பார்த்தால்தான் தெரியும்
அதோட நல்ல ருசித்தன்மை. நீங்கள் வேக்ஃபீல்டு
தயாரிப்புகளை ஒருமுறை சுவைத்தால் அவற்றை
அதிகமாக சாப்பிட விரும்புவீர்கள், மீண்டும் மீண்டும்
சாப்பிட விரும்புவீர்கள்; ஏனென்றால் அவை ருசிமிக்கவை.
வேக்ஃபீல்டு கஸ்டர்ட்ஸ் மற்றும் ஜெல்லீஸ்.



வேக்ஃபீல்டு

வேக்ஃபீல்டிலே ரொம்ப மஜாவானவை
ஏதாவது தயாராகிக் கொண்டே இருக்கின்றன.